தனிப்பிரதி விலை அணா 0—1—6.
Reg. No. M 3066. 1936-ஆம் ஆண்டுப் பதிவு எண் 1.
PAHUTHARIVU (“REASON”)
வீரர் 2. இதழ் 7.



பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளக்குவது.

வரு— சந்தா

உள் நாடு ரூ. 1—0—0.	வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6.	தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளை கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருடமைண்டு வால்யும் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்கு சேதிக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அநுக்கிரமணிகை பக்கம்.

மூட நம்பிக்கை (பாட்டு) (சே மு. கந்தசாமி)	1
சமாதான நீதி நமக்கு நீதியா? (கைவல்லம்)	3
ஒழிந்தியா, இங்கிலீஷா?	9
தீபாவளிப் பண்டிகை (ஈ. வெ. ரா.)	28
உயிர்வாழ்வுக்கு லக்ஷியமுண்டா?	36
தர்மம் என்றால் என்ன? (ஈ. வெ. ரா.)	41
புராண பூகோளம் (ஆ. ஜே.)	44
பழமை பாராட்டுவதில் பயன் என்ன? (சாமி சிதம்பரனார்)	46
ஆஸ்திக-நாஸ்திக சம்பாஷணை (உண்மை விளம்பி)	51
பகுத்தறிவு சம்பாஷணை	58

பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர்.

(குறள்)

மலர் 2. } சனவரி 1936 நவம்பர் 1 { இதழ் 7.

மூட நம்பிக்கை.

(செ. மு. கந்தசாமி.)

மதத்தை நம்பாதே மூட மதத்தை நம்பாதே-விஷ
மதத்தை நம்பாதே-கெட்ட
இதிகாசம் புராணமென்றெங்கி னினையாதே-பின்பு
இகபரசுகமென்று இருந்து வாடாதே (மத)

மதியம்பொழுதுசாய மந்திரம் செபிக்காதே
மனதினில் வஞ்சகம் வைத்துப் பேசாதே
மதவழக்கமென்று உடல் மெலிந்துவாடாதே-செத்த
மாதா பிதா விரதம் தேடிக்கெடாதே (மத)

மதசம்பிரதாயம்போல் மணம் செய்து நோகாதே-அந்த
மழலைச் சொல்மாறாதார் மணவினை கொள்ளாதே
இதங்கெட்ட பொம்மைக்கல்யாணங் கூடாதே-இரு
பத்துவயதிற்குள் கூன்வீழ்ந்து நடக்காதே (மத)

மூவெட்டு வயதிற்குள் பேரனைத்தேடாதே-பிறந்து
மூன்று நாளுக்குள் காது குத்திக்கெடாதே
அறைவீட்டில் புகுதவும் அய்யரை நாடாதே
அப்பப்பா சடங்கென்றும் அலைந்து திரியாதே (மத)

அரைகுறைசாமானை அடகு வைக்காதே-ஆரிய
அய்யரின் காலை கழுவித் தொழாதே
முறைகெட்ட தனமாக முதுகை வளையாதே-மூட
பார்ப்பனரின் காலில் விழுந்து பணியாதே (மத)

வம்பான மதப்பித்தம் உன் வாழ்க்கையில் கொள்ளாதே-பழனி
வண்டிப்பயணம் போக வயல்தனை விற்காதே
தென்பழனி முடியெடுக்கச் செலவு செய்யவென்றே-உன்றன்
செம்புவட்டி அடகுவைத்துத் தெருவில் திகைக்காதே
(மத)

வம்பான மதத்தை நம்பி உன்வாழ்வைக்கெடாதே
வயிறார உண்ணாமல் உடல் வருந்திச்சாகாதே
தெம்பாய் முடியெடுத்து விருந்து நடத்தாதே-தின்று
கொழுத்து விருந்தினர் திரும்பியும்பாரார்ரே (மத)

அம்புவி வாழ்க்கையை அறியாமல் நடத்தாதே-மூட
அறிவீனர் சொல்லை யுண்மையாகவுங்கொள்ளாதே
செந்தமிழ் வாசகன் சிறுவன் மொழிதனைக்கேட்
பாயே-சிலோன்
செ-மு-கந்தசாமி சொல் தட்டாதே (மதத்தை)

——:0:——

ராமாயணை நீதி நமக்கு நீதியா?

(கைவல்யம்.)

நம்முடைய பண்டிதர்கள் பலருடைய அறிவானது புராணைக்கோதில் கோத்துக் கொண்டிருக்கிறது. அதை வேறுபடுத்தி விட்டால் அப்பொழுது அவர்கள் அறிவிற்கு உலகப் பொது விதி தென்படுக். அதன் மேல் செய்வனவற்றைச்செய்தால் பலனுண்டாகுமென்பதில் அறிவைச் செலுத்திக் குருக்கள் கட்டுக்குக் குருட்டுத்தனமாகக் கீழ்பட்டிருந்த தளையை வெட்டித் தன் மதிப்பைக் காக்கக் கற்ற ஜாதியாரே தலை தூக்குவது இயல்பென்பதை உணர்ந்து, மோகத்தை எழுப்பி உலகத்தை அந்தகாரத்திலாழ்த்தும் பாட்டுகளும், தமோகுணத் தூக்கத்தையே விருத்தி செய்யக்கூடிய இனிய தாலாட்டுப் பாட்டுகளும், அந்தகார நிலையைச் சிறந்ததென்று புகழுதலான பாட்டுகளும் பாடி அதற்குக் காவியமென்று பெயரும் கொடுத்துப் பாமர ஜனங்களுக்கு அதைருசுப்படுத்த வேறு ருசு கண்டுபிடிக்க பழைய ஏட்டையே கிண்டிக்கிளறிக் கொண்டிருப்பதுமான வேலையில் காலத்தைப் போக்கிக்கொண்டிருந்த பழங்காலபண்டிதர்களின் வழியைப்பற்றாமல், வறுமைப் பிணியும், தன்னடிமைத்தடையும் நீங்க உண்மைச் சமயத்தையும், மக்களுக்கு உதவி செய்யும் பொது நோக்கத்தையும் நமது ஜனசமூகம் தெரிந்து கொள்ளுவதற்கு வேண்டிய ஏடெழுத வேண்டுமென்றே பண்டிதர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். இயற்கை முருகனும், செயற்கைத் தேவியும், தென்னாட்டுச் சிவனும் வடநாட்டு விஷ்ணுவும் நமது நாட்டில் மலிந்து கிடக்கிறார்கள். அவர்களுக்கு எழுதின புஸ்தகங்கள் போதும். அப்பப்பா போதும்.

தத்துவார்த்தம்

"ராமன் என்னும் மனிதனுக்குச் சொந்தமாகவுடைய பரமபத வீட்டின் பாக்கியமாம் இல்லாளான ஞானமென்னும் சீதையைப் பத்துத் தலையை உடைய இராவணன் என்னும் ராட்சதன் கவர்ந்து அதைத் தன் வசப்படுத்த நினைத்தான். அதாவது ராகத்துவேஷாதிகளான பத்துமுடைய ஜீவன் ஞானத்தைக் கவர்ந்து அதை மறைத்து உலக இச்சையை

அனுபவிக்கும் மனதையுடையதாக விருந்தது. இராமனென் னும் மனிதன் விவேகமென்னும் லட்சுமணனைத் துணையாகக் கொண்டு சுத்த மனமென்னும் அனுமானால் அந்த ஞானத்தைக் கண்டுபிடித்து அந்த ராகத் துவேஷாதிகளின் ஒரு பாகமான நல்லெண்ணமென்னும் விபீ ஷணனை உளவாகக்கொண்டு நியாய சாஸ்திர விவேகமென் னும் ஆதிசேடனின் அம்சமான லட்சுமணனின் துணையும் அறிவின் சூரியப்பிரகாசமான சுக்கிரீவனின் ஆக்கினையை யும், சத்துவ குணமென்னும் அநுமானின் அடிமைத் தொழி லையும் சேர்த்துக்கொண்டு ராகத்துவேஷங்களான ராட்சதர் களையும், மனமென்ற இராவணனையும், மாயை என்ற இந் திர ஜித்தையும், விடயபோகமென்னும் தூக்கத்தின் மமதை யாம்குப்பகர்ணனையும் ஜெயித்துக் கொன்று மனிதனான ராமன் சீதை யென்னும் ஞானத்தையடைந்து பரமபதத்தில் பரதனான சுதர்சனமென்னும் சங்கு நாதத்தால் எல்லாரை யும் கூவியழைக்கிறார்''

என்னும் தத்துவார்த்தத்தை இன்னொரு சமயம் கவ னிப்போம். இப்பொழுது பண்டிதர்கள் சொல்லும் நீதியும் பொது நோக்கமும் இராமாயணத்தில் என்ன இருக்கிறது என்பதைக் கவனிப்போம்.

இராமாயணப் பண்டிதர்களும் பாகவதர்களும் இராமா யணப் பிரசங்கம் செய்கையில் மதாபிதா வார்த்தையைக் காப் பாற்றினவரென்றும், அதை நமக்கு நடந்துகாட்ட பகவானே ராமராக அவதாரம் செய்தவரென்று பிரசங்கம் செய்வதையும் அவ்வழியே நாமும் நடக்கவேண்டுமென்று சொல்லுவதை யும் கேட்கிறோம. தாய் தந்தையர் வார்த்தையைப்பிள்ளைகள் தலையில் தாங்கவேண்டுமென்பது பொதுவான தருமவிதி. ஆனால்தாயென்றால் யார்? தந்தையென்றால் எப்படி இருக்க வேண்டும்? என்கின்ற நியாயமும் சிறிது பொருந்தவேண்டும். இதைக் கவனித்தால் ராமருடைய தாயும் தந்தையும் விசே ஷப்பட்டவர்களென்று சொல்வதற்கில்லை. ஒரு அரசனுக் குப் பல மனைவிகளிருந்தால் அவர்களில் வயதாலும் ரூபத் தாலும் சிறந்தவளே அவ்வரசனுடைய மனதைக் கவர்வாள். அவளுக்கு ஒரு மகனிருந்தால், அவனுக்கே பட்டம் கிடைக்க வேண்டுமென்றும் நினைப்பாள். அவ்வரசனும் அவளுடைய மாய வலையில் சிக்கி அதற்கு உடன்படுவான். மூத்த மனை வியின் புத்திரர்கள் ராஜ்யத்திலிருந்து நீக்கப்படுவார்கள். இராமாயணக் கதையிலிருந்து பன்னிரண்டு மந்திரி கதை வரையிலும் இவ்விதமான கதைகள் அநேகம். அதுபோல ராம

ருடைய தந்தையும் சிறிய தாயாரும் செய்தார்கள்; ராமரும் காட்டுக்குப் போனார்.

தாய் தந்தையர்களின் வார்த்தையைக் கேட்டு நடப்பது தருமம். நியாயங்களைப்பகுத்துத் தெரிந்து நடப்பது கடமை. தருமம் பெரிதா? கடமை பெரிதா? தருமம் கடமையுமாகும், கடமை தருமமுமாகும் என்பது சரியே. தகப்பனோ பல பெண்களின் மோகத்திலகப்பட்டவன்; ராமனைக் காட்டிற்கு போகும்படி தசரதன் சொல்லவுமில்லை; கைகேசிக்கு வரம் கொடுப்பதாகச் சொன்னபொழுது இதை நினைக்கவுமில்லை. கொடுமை செய்யும் குணமுடைய கைகேசியோ சிறியதாயார். இங்கு மாதா பிதா வார்த்தை பரிபாலனம் எவ்விதத்தால் விசேஷமுடையதாகும்? ராமர் விசேஷப் பட்டவரானதனால் தாய் தந்தையர்கள் எப்படி இருந்தாலும் அவர்கள் வார்த்தையைக் காப்பாற்றினார் என்பது சரியாக வேனும் தப்பாகவேனுமிருக்கட்டும். அவை "தேவ" நியாயம். அதில் நமக்கு விவகாரம் வேண்டாம்.

நமது சமூகங்களில் ஒருபெண்ஜாதியிருக்கவே மற்றொரு பெண்ஜாதியும் முதல் பெண்ஜாதி இறந்துவிட்டால் அவளுக்கு எத்தனை குழந்தைகளிருந்தாலும் இரண்டாவது பெண் கட்டுவதும், அவளுமிறந்து அவளுக்கு குழந்தைகளிருந்தாலும் மூன்றாவது பெண் கட்டுவதும், வழக்கமானதால் இளையதாரத்தின் கொடுமையும் அவளுக்கு வசப்பட்ட தகப்பனுடைய மன அவதியும் பகவானே அவதாரமாக வந்த ராமரால் தாங்கவும் ஆதிசேட அவதாரமான இலட்சுமணன் அதற்கு உதவி செய்யவும் சுதர்சன மென்னும் சக்கரமான பரதன் பரிதவிக்கவும் முடியுமேயல்லாமல் நம்மைப் போன்ற "நர" மனிதர்களுக்கு அது முடியவே முடியாது. ஆகையால் நமக்குரிய நீதியும் நியாயமுமான முறைகளே இருக்கவேண்டும்.

பரசுராமர் தகப்பன் வார்த்தைக்காகத் தன்னைப்பெற்ற தாயின் தலையை வெட்டினார். ராமர் தகப்பனுக்குச் சம்மதமில்லாத வார்த்தையாக விருந்தும் சிறியதயார் வார்த்தையால் காட்டிற்குப் போனார். இவர்களிருவர்களும் விஷ்ணுவின் அவதாரங்கள். இவர்கள் நமக்கு நடந்துகாட்டின தருமங்களின் ரகசிய தத்துவங்களைப் பண்டிதர்களிடமிருந்து தெரிந்தாலும் பலனென்ன? இவைகளில் எது நமக்கு ஏற்றதென்

பதைப்பண்டிதர்கள் சொல்லுவார்களா? ஆகையால் இந்த தரு மங்கள் எல்லாம் நாம்மால் நடத்த முடியாதவை என்பதோடு இக்காலத்து விஷ்ணுவின் அவதாரமான ஆங்கிலேயச் சட் டத்தாலும் தள்ளப்பட்டவையாகும்.

மற்றும் விஷ்ணுவின் அவதாரமான பரசுராமன் தகப்பன் வார்த்தையால் தாயைக்கொன்றார். அதற்குப்பின் விஷ்ணு அவதாரமான ராமர் சிறிய தாயார் வார்த்தைக்காக காட் டிற்குப் போனார். அதற்கு பின் விஷ்ணு அவதாரமான கிருஷ்ணன் சகோதரர்கள், குரு, பந்து சிநேகிதர்களைக் கொல்லுப்படியாக அருச்சுனனுக்கு உபதேசம் பண்ணினார். அப்படியே அவனும் கொன்றான். இதனால் "பகவான்" கூட காலந்தோறும் தருமங்களை மாற்றி நடந்துகாட்டினார் என் பது புலப்படவில்லையா?

கார்த்தவீரிய அர்ச்சுனன் காலத்திலும், ராவணனு டைய ஆரம்ப காலத்திலும், ராமருடைய காலத்திலும் பார தக் கதைகளில் பரசுராமர், பீஷ்மர், கர்ணன் இவர்களுக்கு வில் வித்தை கற்றுக் கொடுத்தார் என்கிற கதைகளிருப்ப தால் பரசுராமருக்கு வயது ஐம்பது லட்சத்துக்கு மேலிருக்க வேண்டும். அவரும் சிரஞ்சீவிகளில் ஒருவரென்று சொல் லப்படுகிறது. ராமாயண பாரதக் கதைகளின் உண்மைப்படி அவர் இன்றுமிருக்க வேண்டும். அவர் நமக்குச் சிறிது உதவி செய்தாரானால் நம் கஷ்டமே தீர்ந்து விடும். அவரை தமதாக்கிக் கொள்ளும்படியான பக்தர்களில்லையா? நமது பண்டிதர்கள் அவர் திருப்திப்படும்படியான விஷயங்களைச் சொல்லிக் கொடுப்பதில்லையா? விஷ்ணுவான ராமருடைய காலம் கடந்து இப்பொழுது 38 லட்ச வருடமாகிறது. விஷ் ணுவான ஸ்ரீகிருஷ்ணனுடைய காலமும் ஐயாயிர வருடத் திற்கு மேலாகிறது. பரசுராமருடைய அதிகாரத்தை ராமர் பறி முதல் பண்ணிவிட்டார். ராமருடைய தருமங்களை யெல்லாம் கிருஷ்ணன் தள்ளிவிட்டார் என்பது நமது சாஸ்தி ரக்கதைக்கு விரோதமல்லவே. அப்பொழுது ராமாயணமும் தள்ளப்பட வேண்டாமோ? அதை மறுத்தால் விஷ்ணு கிருஷ்ணனாக வந்து ஏன் உபதேசம் செய்யவேண்டும் என் னும் கேள்விக்கு ஒத்த பதில் வேண்டும். புத்தராக வந்து எளியவர்களுக்கும் உயர்ந்தவர்களுக்கும் மோட்சமொன்றே என்று உபதேசம் செய்தார். ராமானுஜாச்சாரியாக வந்து, எல்லாருக்கும் மோட்ச வாசல் திறக்கும் வழியின் உபதேச

மொன்றே என்று அந்த உபதேச மொழியை எல்லாரும் எடுத்துப் படித்து பரமபதமடைய கோபுரத்தின் மேலிருந்து வீசியெறிந்து அதனால் எம்பெருமானாருமானார். இதனால் "சூத்திரன்" தவம் செய்தால் அவன் தலையைவெட்ட வேண்டுமென்கிற நீதியை இவர் போக்கினார் என்றாலும், அன்று முதல் இன்றுவரையிலும் ஜனங்கள் இதைத்தெரிந்து கொள்ள வழியில்லாமல் சமயத்திலும் சாதியிலும் உயர்ந்தவர்களென்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் தடுத்தே வருகிறார்கள். இதற்கு சாமமிட்டுக்கொண்டு தினமும் ராமானுஜா என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் வெட்கப்படுவதில்லை. குருபரம்பரையை விசேடமாக நினைப்பதும், ஆச்சாரிகளுடைய ஆசீர்வாதத்திற்கு ஆசைப்படுவதுமே அதி பாக்கியமென்று நினைக்கும் இவர்கள் ராமானுஜாச்சாரியாருக்குப் பாவிகளாக விருப்பதை உணர்வதுமில்லை. ஜன சமூகங்களுக்கு இருக்கிற-அதிலும் மேலோங்காமலிருக்கிற பழைய கதைகளையே படியுங்களென்று சொல்லும் பண்டிதர்கள் பெரியவர்களின் மேலான கருத்தை உணர்த்துவதுமில்லை.

காசி விஸ்வனாதர் பறையனாக வந்து சங்கராச்சாரிக்குத் தீட்டின் அஞ்ஞானம் விலக ஞான உபதேசம் செய்ததும், திருப்போரூரில் பார்வதி பரமேஸ்வரன் பள்ளன். பள்ளச்சியாகவிருந்து சுந்தர சுவாமிகளுக்கு ஞானத்தின் இடத்தைச் சொன்னதுமான பெரியவர்களின் கதையின் அனுபோகங்கள் சைவப் பண்டிதர்களுக்குச் சம்பந்தப்பட்ட பெரியவர்கள் கதையல்லவா? அதை ஜனசமூகங்களுக்குச் சொன்னால் நமது நாட்டிலுள்ள கொடுமைகளில் சிறிதேனும் ஒழியாதா? இவ்வழியில் இவர்கள் நின்றால் அவர்கள் அடியை என் முடிமேல் தாங்கி அவர்களை அடிகளாகவும் நினைப்பேன். பின்னால்வரும் உலகமும் அவர்களைப் போற்றும். அதை விட்டுவிட்டு "சாஸ்திர ஆராய்ச்சியுடையவர்கள் சுயமரியாதைக்காரர்களில்யாருமில்லை. அவர்கள் அறிவிலிகள்" என்று சொல்லி ஆஸ்திகச்சங்கம் அமைத்து, ராமாயணத்தைப் படியுங்கள், தருமம் அதில் விளங்குகிறது. மூக்கிற்கு முன்னால் எலுமிச்சம் பழத்தை நான் ஆட்டுவேன் என்று சொல்லி, "சுயமரியாதைத் தலைவன் மலடு, அவனுக்கு வயிறு பெரிது, அவன் மிளகாய் வியாபாரி" என்று சொல்லி விட்டால் உலகத்திற்கு என்ன நன்மை வந்துவிடும்? அதனால், சுயமரியாதைச் சங்கங்கள் எப்படித்தான் கலைந்துபோகும்? அறிவுடையவர்கள் ஆலோசிக்கமாட்டார்களோ? மிளகாய் வாங்கப்போகும் வியா

பாரி மிளகாயே வாங்குவான். குதிரை வாங்கும் பணத் திற்கு கோயில் கட்டமாட்டான். ஞானசம்பந்தருக்கு எத் தனை குழந்தைகள்? ராஜ உடலில் புகுந்து சங்கராச்சாரி சுவாமிகள் அந்தப்புர ஸ்திரீகளிடம் காமசாஸ்திரம் பழகி னாரே அவருக்கு எத்தனை குழந்தைகள்? வயிறு பெருத்த சுவாமியான நமது விநாயகர்தானே எல்லாச் சாமிக் கும் முன்னால் முதல் பூசை வாங்குகிறது என்று யாராவது எழுதி விட்டால் நமது தெய்வங்களை, நமது பெரியவர்களை, நமது சமய குரவர்களை, நமது சாதியில் பெரியவர்களை நிந்திக்கிறார்களென்று குய்யோ முறையோவெனக் கூவுதற் குத் தெரிவது போல நியாயம் சொல்லுவதும் பொருந்த வேண்டாமோ?

விஷயம் வேறாகி விட்டது. எடுத்த விஷயத்துக்குப் போ வோம். ராஜாக்கள் விஷ்ணுவின் அம்சங்களென்று சொல் லப்படுகிறது, 'தருமம் நசித்து அதர்மம் தலை எடுக்கையில் நான் அவதாரமெடுக்கிறேன்' என்று 'பகவான்' சொல்லுகிறார். எங்கும் வியாபித்திருக்கும் வஸ்துவே விஷ்ணு; அந்த விஷ்ணு இந்தியாவில் மட்டும் வியாபித்திருக்கவில்லை. உலகமெலாம் வியாபித்திருக்கிறார். கிருஷ்ண அவதாரத்திற்குப்பின் சீஸர், நெப்போலியன், கமால்பாட்சா, முசோலினி, நமது ஜார்ஜ் சக்கரவர்த்தி விஷ்ணுவின் அம்ச அவதாரங்கள் என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். இவர்களுடைய இந்தக் காலத்து ராமாயணங்களில்லல்லவா நமது பரந்தோக்கங்களும் நீதிகளும் அடங்கிக் கிடக்கின்றன. முப்பத்தெட்டு லட்சவரு டத்திற்கு முந்தின நமது ராமாயணத்திலுள்ள நீதிகளும் அக்கிரமங்களும் இப்பொழுது தள்ளப்பட்டு சட்டத்தினால் தடுக்கப்பட்டு விட்டன. எப்படியென்றால், ஒருவனுடைய பெண்சாதியை மற்றொருவன் அபகரித்தால் எல்லா தேசத் துச்சட்டத்திலும் தண்டனையுண்டு. தெய்வலோகத்தில் தன்னரசு இருந்தாலிருக்கலாமேயொழிய பூலோகத்திலெங் கும் தன்னரசில்லை. கெய்சர் தன் பெண்சாதியுடன் தன் தேசமல்லாத இடத்தில் வசிக்கிறார். ஆப்கன் அமீர் தன் மனைவியுடன் நாட்டைத்துறந்து இத்தாலிக்குப்போய் விட் டார். நமது தேசத்துராஜாக்கள் பத்தினிகளுடனும், பத்தினி கள் தனியாகவும் பல தேசம் சுற்றுகிறார்கள். இக்காலத்தின் சட்டதருமம் பயத்தை நீக்கி விட்டது.

இப்பொழுது நமது தேசத்தில் பல ராஜாக்களும், சந் திர சூரிய வம்சத்தவர்கள் என்று சொல்லிக்கொள்

ஹிந்தியா, இங்கிலீசா?

இந்தியாவில் வசிக்கும் 35 கோடி ஜனங்கள், சுமார் 200 பாஷை களைப் பேசி வருகின்றனர். பாஷை வேறுபாடேயன்றிப் பல்வேறு மதப் பிரிவினைகளும் ஆயிரக்கணக்கான ஜாதிப் பாகுபாடுகளும் இருந்து வருவதால், 35 கோடி எண்ணிக்கையுள்ள இப் பெருஞ் சமூகம், தனித்தனி சிறு சமூகங்களாகப் பிளக்கப்பட்டு, ஒன்றிற்கொன்று சம்பந்தமில்லாது, நெல்லிக்காய் மூட்டைபோல் இருந்துவருகிறது. ஒரு குடையின் கீழ் வாழ்ந்து வருகிற ஒரு காரணத்தாலேயே இந் நாட்டில் உள்ள பல சமூகங்களும் "இந்திய சமூகம்" என்னும் ஒரு தனிச் சமூகமாக எண்ணப்படுகிறது. காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையுள்ள மக்கள் எல்லோரும் ஒரு நாட்டினர் என்ற தேசிய உணர்ச்சியை உண்டாக்கி வளர்த்து வருவதற்குப் பெரிதும் துணையாயிருப்பது ஆங்

ராஜாக்களாயிருக்கிறார்கள். இளையவனுக்குப் பட்டத்தைக் கொடுத்து விட்டுப் பட்டத்திற்கு பாத்தியதை உடைய மூத்தவன் காட்டுக்குப் போகவேண்டுமென்று தாய் தந்தையர்கள் சொன்னாலும் அல்லது மூத்தமகனே ராமாயண தருமத்தைத் தெரிந்து பட்டம் இளையவனுக்கே இருக்கட்டும் என்று சொன்னாலும் இங்கிலீஷ் இராமாயணத் தருமச்சட்டம் தடுத்து விடும். அதற்கு மீறி நான் சந்நியாசி ஆகிவிட்டேன் என்று துறவுபூண்டு மௌனத்திலிருந்தாலும் இங்கிலீஷ் இராமாயணச் சட்டக்கர்த்தாக்கள் ஒன்றோ, பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வைப்பார்கள், அல்லது நீலகிரி, கொடைக்கானல் முதலிய மலைகளில் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட எல்லைக்குள்ளிருக்க வேண்டுமென்று காவலும் போட்டு விடுவார்கள். முப்பத்தெட்டு லட்ச வருஷத்திற்கு முன்னால் தேவர்கள் துயரம் தீரவும், துவார பாலகர்கள் மோட்சம் போகவும், குரங்குகளுக்கும் ராட்சதர்களுக்கும் நீதி கற்பிக்கவும் வடமொழியில் எழுதப்பட்டு பாகவதர்களும் சீரங்கத்து ஐயங்கார்களும் தென் தேசத்தில் சிறப்படைய அதற்குத் தகுந்தவாறு தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட கதையை மேடையில் படித்தால் மக்களுக்கு உண்டாகும் நன்மையென்ன?

கிலேயரின் ஏகச் சக்ராதிபத்ய ஆட்சியும், அவ் வாட்சியின் நிர்வாக பாஷையான இங்கிலீஷ் பாஷையுமாகும். அந்நிய ஆட்சியினின்றும் விடுதலை பெற்றுச் சுதந்தரம் பெறுவதற்காகச் செய்யப்படும் முயற்சிக் குத் துணையாக, ஹிந்தியைத் தேசத்தின் பொது பாஷையாக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு, தேச பக்தர்களால் சென்ற 15 வருஷ ங்களாகப் பலமான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்தியா சுதந்தரம் பெறவேண்டியதைப் பற்றி யாருக்கும் ஆக்ஷேபணையில்லை. ஆனால் அதற்காக ஹிந்தியைத் தேசப் பொதுப் பாஷையாக ஒப்புக் கொள்ள வேண்டியது அவசியமா? அவ்வாறு செய்வதால் ஏற்படும் நன்மை தீமைகள் என்ன? என்பதை ஆராய்ந்தறிய வேண்டும்.

தென்னிந்தியர் கடமை.

தேச விடுதலைக்காகத் தென் இந்திய வாசிகள் ஹிந்தியை விரை வில் கற்றுக்கொள்ளவேண்டும் என்று தோழர் காந்தி சொல்லுகிறார். தென் இந்தியாவில் ஹிந்திப் பிரசாரத்திற்காக வட இந்தியப் பிரபுக் கள் பணம் கொடுக்கிறார்கள். தேசாபிமான உணர்ச்சிகொண்ட சிலர், ஹிந்தியைக் கற்றுவருகிறார்கள். நம்மில் வேறு சிலர், ஹிந்திப் பிரசா ரத்திற்குத் தங்களாலான உதவியைத் தாராளமாகச் செய்து வருகின் றனர். ஹிந்தியபிமானம், நம்மில், படித்த கூட்டத்தினர் இடையே நாளுக்குநாள் விருத்தியடைந்து வருகிறது. சில ஆயிரம்பேர் ஹிந்தி கற்றுக்கொள்வதால், ஒன்றும் முழுகிப்போவதில்லை. ஆனால் நாக்கு நீண்ட இக் கூட்டம் தாங்கள் ஹிந்தி கற்றுக்கொண்டதன் மூலம், ஹிந் தியைத் தேசப் பொதுப்பாஷையாக்க வேண்டுமென்று கூச்சல் போடு வார்களானால் அக் கிளர்ச்சியை வளர விட்டுக்கொண்டுபோவது தென் இந்தியர் கடமையாகாது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய திராவிட பாஷைகளைத் தாய்மொழியாகக் கொண் டுள்ள நாம், ஹிந்தியைப் பொதுப்பாஷையாகஒப்புக்கொள்வதால், எவ் வாறு பாதிக்கப்படுவோம் என்பதைத் தேசாபிமானம் என்ற மருளை ர்ச்சியில்லாமல், நடு நிலையிலிருந்து நிதான புத்தியுடன் ஆராய்ந்தால் தான் உள்ளபடி உணர முடியும். இவ் விஷயத்தில், நேர்மையும் நன் மையும் கொண்ட ஒரு முடிவு காணவேண்டிய காலம் வந்து விட்டது,

இன்றைய நிலை

நமது தாய் பாஷையுடன், இங்கிலீஷ் பாஷையை நாம் இரண் டாவது பாஷையாகக் கற்று வருகிறோம். நமது பாடசாலைகளில் இங்கிலீஷ்கட்டாயபாடமாகக்கற்பிக்கப்பட்டுவருகிறது. இங்கிலீஷ்படிப்

பின் மூலம், நாம், அரசாங்க உத்தியோகங்கள் பெறுவதற்கும், கைத் தொழில், வியாபாரத் துறைகளில் சிறப்படைவதற்கும், பொதுவாக நாகரீக வாழ்க்கை நடத்துவதற்கும், தகுதிபெற்று வருகிறோம். அரசியலில் ஜனநாயக தத்துவத்தையும், சமூக வியலில் சமதர்ம தத்துவத்தையும், இந்திய மக்களின் குறிக்கோளாக்கியதும், சென்ற ஒரு நூற்றாண்டாக நம்மிடை பரப்பப்பட்ட இங்கிலீஷ் கல்வியின் பயனேயாகும். இங்கிலீஷ் படிப்பின் மூலம், மேற்கத்திய அரசியல் ஸ்தாபனங்களைப் பற்றிய அறிவும், விஞ்ஞான சாஸ்திரப் பயிற்சியும் ஐரோப்பிய சமூகங்களின் அமைப்பு, நாகரீக நடை முதலியவற்றின் பழக்கமும், நமக்கு ஏற்பட்டு வருகிறது. இத் தொடர்பு நமக்குக் கூடாது, கெட்டது என்று அபிப்பிராயங்கொள்பவர் சிலர். ஆகையால் இங்கிலீஷ் படிப்பை ஒழிக்கவேண்டும் என்று சொல்லி, ஹிந்தியை இங்கிலீஷுக்குப் பதிலாகக் கற்கச் செய்கின்றனர்.

பொதுப்பாஷையின் அவசியம்.

வேறு வேறு பாஷைகளைப் பேசும் சமூகங்கள் ஒரு நாட்டில் தங்கி வாழ்க்கை நடத்தும்போது, இவர்களுக்குள் சமூக வாழ்க்கை நடப்பதற்கு ஒரு பொதுப் பாஷை அவசியமாகிறது. ஒவ்வொரு சமூகமும் தங்கள் தாய் பாஷையுடன் இரண்டாவதாக ஒரு பாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இப்போதுப் பாஷை அந்நாட்டில் வாழ்பவர்களில் பெரும்பான்மையோருடைய தாய் பாஷையாகவோ, அல்லது அந்நாட்டை ஆள்பவர்களின் தாய் பாஷையாகவோ இருக்கும். பெரும்பாலும் ஒரு தேசத்தை ஆள்பவர்களுடைய பாஷையே அத் தேசத்தின் பொதுபாஷையாக இருந்து வந்திருக்கிறது. நமது நாட்டில் இங்கிலீஷ் பொதுப்பாஷையாக ஏற்படுத்தப்பட்டதன் முக்கிய காரணம், இங்கிலீஷ்காரர் நாட்டை ஆளும் ஜாதியாராக ஏற்பட்டதேயாகும். ஆயினும் இங்கிலீஷைப் பொதுப்பாஷையாக ஏற்படுத்தியவர்கள் அவ்வாறு தீர்மானித்ததற்கு வேறு சில முக்கிய காரணங்களையும் குறிக்கொண்டிருந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

இங்கிலீஷ் ஆட்சியும் இந்தியர் கல்வியும்

வியாபாரஞ் செய்ய வந்த ஈஸ்ட் இந்திய கம்பெனியார், சில நாடுகளைப் பிடித்துக் கம்பெனி பலதாராகி அரசாளத் தொடங்கிய போது, தங்கள் ஆளுகைக்குட்பட்ட மக்களின் கல்வியைப்பற்றி அதிக கவலை யெடுத்துக்கொள்ளவில்லை. வர்த்தகக் கூட்டத்தின் வழிவந்த

கிறிஸ்தவ பாதிரிச் சங்கங்கள், அங்கங்கே பாடசாலைகளை யேற்படுத்தி ன்ர். அக் காலத்தில் தேசத்தின் சிறப்பான பாஷைகளாகக் கொள்ளப் பட்டிருந்தவை அரபியும், சமஸ்கிருதமும். மொகலாய அரசாங்க பாஷை பாரசீகம். ஆகையால், உயர்தரக் கலைகள், சாஸ்திரங்கள் என்பவையெல் லாம், சமஸ்கிருதம் அல்லது அரபி, பாரசீகம் ஆகிய பாஷைகளின் மூலம், வேத பாடசாலைகளிலும் மதரஸாக்களிலும் கற்பிக்கப்பட்டு வந்தன. ஹிந்தி, வங்காளி, மராத்தி, குஜராத்தி, தெலுங்கு, தமிழ் முதலிய தேச பாஷைகளுக்கு மதிப்பிருக்கவில்லை. இப் பாஷை களுக்கு அரசாங்க ஆதரவு கிடையாது. தேச பாஷைகளை எழுதவும் படிக்கவும் கற்பிக்கக்கூடிய திண்ணைப் பள்ளிக்கூடங்கள் கிராமங்க ளில் இருந்தன. ஆனால், நவாபுகளும் மகாராஜாக்களும், தங்களு டைய அரசாங்க ஆதரவை, சமஸ்கிருத பாடசாலைகளுக்கும், அரபி மதரஸாக்களுக்குமே அளித்து வந்தனர். ஆகையால் வெளிநாட்டி லிருந்து வந்து நாடு பிடித்து ஆளத்தொடங்கிய வெள்ளைக்காரக் கம்பெனி பலூதூரும், சுதேச மன்னர்களைப்பின்பற்றி, சமஸ்கிருதம் அரபி பாஷைகளையும், அவை போதிக்கப்படும் கலாசாலைகளையும், அப்பாஷைகளில் பாண்டித்யம் பெற்ற பண்டிதர்கள், உலாமாக்களை யும் ஆதரிக்கத் தொடங்கினர். தேச பாஷைகளைப்பற்றி அவர்கள் நினைக்கவேயில்லை.

முதற் கலாசாலை.

கம்பெனியாரின் முதற் கவர்னர் ஜனராலான வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு, கல்கத்தாவில் மகமதியர்களுக்காக 1732-ல் ஒரு மதரஸாவை ஏற்படுத்தினார். அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட முதற் கலா சாலை இதுவே. 9வருஷங் கழித்து 1791ல் இந்துக்களுக்காகக்காசியில் ஒரு சமஸ்கிருத கலாசாலை ஏற்படுத்தப்பட்டது. இவ்விரண்டு கலா சாலைகளை ஏற்படுத்தியதன் நோக்கம், கீழ் தேசப் பாஷைகளிற் சிறந்தவைகளான அரபி, சமஸ்கிருதம் இரண்டையும் போதிக்கவும், அவற்றின் மூலம் கீழ்நாட்டுக்கலைகளை வளர்க்கவுமேயாதும். ஆனால் வெகு சீக்கிரத்தில், கம்பெனியாரின் இந்தக் கொள்கைக்குப் பலமான எதிர்ப்பு ஏற்பட்டது.

கல்விமான்யத்திற்று சட்டம்.

கம்பெனியின் ஆட்சியில் உள்ள இந்திய பிரஜைகளின் கல்வியபிவி ருத்திக்காக, கம்பெனி வருமானத்தில் ஒரு பாகத்தைச் செலவிடவேண் டுமென்ற சட்ட பூர்வமான நிர்ப்பந்தம் 1813-ல் தான் முதன் முதல்

ஏற்பட்டது. ஈஸ்ட் இந்திய கம்பெனிக்கு பிரிட்டிஷ் பார்லிமெண்டால் 1813ல் கொடுக்கப்பட்ட வர்த்தக சன்னத்தில், "கம்பெனியாட்சியில் உள்ள இந்திய பிரஜைகளின் கல்விக்காக, கவர்னர் ஜனரல், கம்பெனி பிடித்துள்ள நாடுகளின் வரி வசூல் வியாபார லாபம் முதலிய வருமானத்தில், கம்பெனியின் சிவில், மில்டெரி, வர்த்தக சிப்பந்திகள் செலவு போக மீதியுள்ள தொகையில் ஒரு லக்ஷ நபாய்க்குக் குறை மாமல் படித்த இந்தியர்களை ஆதரிக்கவும் இவர்களிடை விஞ்ஞானக் கலையைப்பரப்புவதற்கும் செலவு செய்யலாம்" என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. ஷை ஒரு லக்ஷ ரூபாய் மான்யத்தைச் செலவு செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அதன் மூலம் அத்தொகை வினியோகிக்கப்பட்டது. ஆரம்பத்தில் மேற்படி கமிட்டியார், மான்யம் முழுவதையும், சமஸ்கிருதம், அரபி, பாரசீக பாஷைகளைப் போதிக்கும் கலாசாலைகளுக்கும், இப்பாஷைகளில் நூல்கள் வெளியிடுவதற்கும், இப்பாஷைகளில் பாண்டித்தியம் பெற்ற புலவர்களை ஆதரிப்பதற்குமே செலவு செய்து வந்தனர்.

கீழ் நாட்டுக் கலைகளுக்கு எதிர்ப்பு

அரபி சமஸ்கிருத பாஷைகளையும் கீழ் நாட்டுக் கலைகளையும் வளர்க்கும் கொள்கை சீமையிலிருந்து கம்பெனி முதலாளிகளுக்குப் பிடிக்கவில்லை. ஆக்ரா, டில்லி முதலிய இடங்களில் ஓரியண்டல் காலேஜ்கள் எற்படுத்துவதற்குச் செலவு செய்ததைக் குறித்து, கம்பெனியின் Court of Directors என்கிற முதலாளிகள், கீழ்கண்ட அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள்.

"In professing to establish seminaries for the purpose of teaching mere Hindu or Mere Muhammadan literature, you bound yourself to teach a great deal of what was frivolous, not a little of what was purely mischivous and a small remainder, indeed, in which utility was not in any way coneerned"

கீழ் தேச பாஷைகள் மூலம் கீழ் நாட்டுக் கலைகளை வளர்க்கும் கொள்கைக்கு இந்தியர்களிடமிருந்தும் பலமான எதிர்ப்பு ஏற்பட்டது. மேற் கத்திய கல்வியையும் நாகரீகத்தையும் விரும்பிய உயர்

ஜாதி இந்துக்கள், தங்கள் நாட்டின் பழமையான, வளர்ச்சியற்றுப் போன கலைகளையும் சாஸ்திரங்களையும் கற்பது வியர்த்தம் என்று அறிந்து, நாள்தோறும் மேலோங்கி வளரும் இங்கிலீஷ் பாஷையையும், மேற்கத்திய கலைகளையும் கற்றுக்கொள்ள ஆசைப்பட்டனர். சீர்திருத்தத்தில் ஆர்வங்கொண்ட இந்தக் கட்சிக்குத் தலைவர், புகழ்மிக்க ராஜாராம் மோஹன்ராய் ஆவார். வேறு சிலர், இங்கிலீஷ் காரர் ஆட்சியில், இங்கிலீஷ் பாஷையைப் படிப்பது லாபகரமானதென்று கண்டதால், இங்கிலீஷ் கற்க ஆரம்பித்தனர்.

இரண்டு கட்சி

நாட்டு மக்களிடையிலும், கம்பெனி முதலாளிகளிடத்திலும் ஏற்பட்டுள்ள அபிப்பிராயங்கள், கவர்ன்மெண்டில், கல்விக் கமிட்டி மெம்பர்களிடையிலும் ஏற்பட்டு அக்கமிட்டியில் கீழ்நாட்டுக் கலையை ஆதரிக்கும் கட்சியும், இங்கிலீஷையும், மேல் நாட்டுக்கலைகளையும் ஆதரிக்கும் கட்சியுமாக இரண்டு கட்சிகள் ஏற்பட்டன. இந்த நிலையில் கம்பெனியின் வர்த்தகசாஸனம் 1833-ல் பிரிட்டிஷ் பார்லிமெண்டால் மீண்டும் 20 வருஷங்களுக்குப் புதுப்பிக்கப்பட்டது, அப்போது கவர்னர் ஜனரலின் முதற் சட்ட மெம்பராக "தாமஸ் பாபிங்டன் மகாலே" T. B. Macaulay, என்ற ஓர் சிறந்த அறிவாளி இங்கிலாந்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டார். இந்திய ஆட்சியின் சட்ட திட்டங்களைச் சீர்படுத்தி ஆட்சி முறையை எல்லாத்துறைகளிலும் நன்கு அமைக்கும் பொருட்டே இலக்கியத்திலும் சட்ட ஞானத்திலும் சிறந்து விளங்கிய இப்பெரியார் அனுப்பப்பட்டார்.

மகாலேயும் இந்தியக் கல்வியும்.

இந்த "மகாலே" துரையைப்பற்றி இந்த நூறு வருஷங்களாகக் கூறப்படும் வசைமாரிக்கு அளவேயில்லை. இந்திய நாட்டின் புராதன பாஷைகள், புராதன கலைகள், சாஸ்திரங்கள் இவைகள் எல்லாம் அழிவுற்றதற்கும், இந்தியக் கல்வி உலகாயத மார்க்கத்தில் புகுத்தப்பட்டு இந்திய மக்கள், மேற்கத்திய நாகரீகத்தில் பற்றுக் கொண்டதற்கும், காரண புருஷர் இவரேயென்று சொல்லப்படுகிறது. நல்லதோ, கெட்டதோ இந்திய அரசாங்கத்தின் கல்வி முறை தற்போதிருக்கும் மாதிரி ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தவர் இவரே என்பதில் ஆட்சேபணையில்லை.

மகாலே இந்தியாவுக்கு வந்ததும், "பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் கமிட்டி"த் தலைவர் என்ற ஹோதாவில், கமிட்டியில் அப்போது வாதத்திலிருந்த, "அரபிச்மஸ்கிருதமா?—இங்கிலீஷா?—கீழ் நாட்டுக் கலைகளா? மேல் நாட்டுக் கலைகளா?" என்கிற பிரச்சினையை முடிவு செய்யவேண்டியவரானார். இந்த விவகாரத்தைக்குறித்து 2—2—1835 தேதியிட்டு இவர் எழுதிய 'மினிட்' அபிப்பிராயம், சரித்திரப் பிரசித்தி பெற்றது. இவருக்குக் கீழ் தேச பாஷைகளில் பயிற்சியில்லை. அப்படியிருந்தும், கீழ்த்தேச பாஷைகளைப்பற்றியும், இலக்கியத்தைப்பற்றியும், அதிதீவிரமான அபிப்பிராயங்களை, வெகு வேகமான நடையில், தயவு தாட்சண்யமின்றி எழுதியிருக்கிறார். பாஷைகளைப்படியாமலே, "a single shelf of a good European library was worth the whole native literature of India and Arabia" என்று ஒரே யடியாய்க் கீழ்நாட்டு இலக்கியத்தை இழிவு படுத்திக் கூறியது நியாயமாகாது. பாசி பிடித்துப்போன பழய கலைகளைக் கற்பிப்பது சர்க்காரின் கடமையல்ல வென்பதைத் தெளிவுபடுத்திவிட்டு நாட்டு மக்களுக்கு உபயோகமான படிப்பு எது, எந்தப் பாஷையைக் கற்பதன் மூலம் அறிவு விசாலமுற்று ஜனங்கள் நாகரீக மடைவார்கள் என்பதை ஆராயும் போது அவர் எடுத்துக் காட்டிய நியாயங்கள் பெரும்பாலும் ஒப்புக்கொள்ள வேண்டியவைகளே. பாமர ஜனங்கள் நான்கோ ஐந்தோ பேசுகிற நாட்டுமொழிகளில் எல்லாக் கலைகளையும் கற்பிக்கக் கூடிய வகையில், நாட்டு மொழிகள் அக்காலத்தில் (இன்றுங் கூட) வளர்ச்சியடைந்திருக்கவில்லை. ஆகையால், ஜனங்களுக்குத் தெரியாத அரபி அல்லது சமஸ்கிருதம் மூல மாகக் கற்பிப்பதைவிட இங்கிலீஷ் பாஷையைக் கற்பிப்பதே மேல் என்று அவர் அபிப்பிராயப்பட்டார்.

"...the dialects commonly spoken among the natives of this part of India, contain neither literary nor scientific information and are moreover so poor and rude, that until they are enriched from some other quarter, it wil not be easy to translate any valuable work into them. It seems to be admmitted on all sides that the intellectual inprovement of those classes who have the means of pursuing higher studies, can at present be effected only by means of some language not vernacular amongst them.

"What then shall that language be? One half of the committee maintain that it should be English. The other half strongly recommend the Arabic and Sanskrit. The whole question seems to me to be, which language is the best worth knowing?.

"we have to educate a people who cannot at present be educated by means of their mother-tongue We must teach them some foreign language. தாய் பாஷையின் மூலம் கல்வி கற்பிக்கத் தற்போது முடியாது. ஏதாவது அந்நிய பாஷை கற்றுத்தான் ஆகவேண்டும். இங்கிலீஷைப் போலவே அரபியும், சமஸ்கிருதமும் ஜனங்களுக்கு அந்நியமே. ஆகையால், உலகத்தின் கலைகளை யெல்லாம் தன்னிடம் கொண்டுள்ள இங்கிலீஷ் பாஷையே, இந்திய நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியது என்று அபிப்பிராயப் பட்டார். இங்கிலீஷ் பாஷையின் சிறப்பைப் பற்றி அவர் எழுதியிருப்பதாவது:— "It abounds with works of imagination not inferior to the noblest which Greece has bequeathed to us; with models of every species of eloquence; with historical composition, which considered nearly as narratives have seldom been surpassed, and which considered as vehicles of ethical and political instruction, have never deen equalled; with just and lively representations of human life and nature; with the most profound speculations on metaphysics, morals, government jurisprudence, and trade with full and corect information respecting every experimental science which tend to preserve the health, to increase the comfort; or to expand the intellect of man. Whoever knows that language has ready access to all the vast intellectual wealth which, all the wisest nations of the earth have created and hoarded in the course of ninety generations. It stands preeminent even among the languages of the west.....Hence of all foreign tongues, the English tongue is that which would be the most useful to our native subjects.

நம்முடைய சரித்திரம், பூகோளம், வைத்திய வான சாஸ்திரங்களைக் குறித்து அவர் எழுதியுள்ள கேவலமான அபிப்பிராயம் நமக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணும். ஆனால் ஓரளவுக்கு ஒப்புக் கொள்ள வேண்டியதே.

"The question before us is simply whether, when it is in our power to teach this (English) language, we shall teach languages in which, by universal confession, there are no books on any subject which deserve to be compared to our own; whether when we can teach European Science, we shall teach systems, which by universal confessin, whenever they differ from those of Europe, differ for the worse; and whether when we can patronise sound philosophy and true history, we shall countenance at the public expense, medical doctrines which would disgrace an Euglish farrier;—Astronomy which would move laughter in a girl at an English boarding school; History abounding with kings thirty feet high and reigns thousands of years long and Geography made up of seas of treacle and seas of butter."

நம்முடைய புராதன சாஸ்திரங்களைப்பற்றி ஒரு "மிலேச்சன்" இவ்வாறு எழுதினால் நமக்கு ஆத்திரம் வருவது சகஜமே.

"It is confessed that a lauguage is barren of useful knowledge We are to teach it because it is full of monstrous superstitions. We are to teach false history false astronomy, and false medicine, because we find them in company with a false religion. We abstain—and I trust shall always abstain, from giving any public encouragement to those who are engaged in the work of converting natives to Chnstianity. And while we act thus, can we reasonably and decently bribe men out of the

revenues of the state to waste their youth in learning how they are to purify themselves after touching an ass or what test of the Vedas they are to repeat to expiate the crime of killng a goat.''

இங்கிலாந்திலுள்ள ஒரு லாடக்காரக் கொல்லன்கூட ஒப்புக்கொள்ளவெட்கும்படியான வைத்திய முறைகளும், இங்கிலீஷ் பெண் பாடசாலைகளில் படிக்கும் சிறுமியர்க்கும் சிரிப்பையுண்டாக்கும் விபரீதமான வான சாஸ்திரமும், முப்பதடி உயரமுள்ள அரசர்கள் அறுபதாயிரம் வருஷம் ஆண்ட வரலாறுகளைக் கொண்ட சரித்திரமும், பாற்கடலும், நெய்க் கடலும் கொண்ட பூகோள சாஸ்திரமும் கற்பித்தல் நாகரீக அரசாங்கத்தின் கடமையாகாதென்றும், ஒரு கழுதையைத் தொட்டுவிட்டால் எத்தனை தரம் குளிக்கவேண்டும், என்ன மந்திரம் சொல்லிச் சுத்தி செய்துகொள்ளவேண்டுமென்றும், ஒரு ஆட்டைக் கொன்ற பாவத்திற்குப் பிராயச்சித்தமாக எந்த வேதத்தை எத்தனை தரம் பாராயணம் செய்யவேண்டுமென்றும் தெரிந்துகொள்வதற்காக, சர்க்கார் வரிப் பணத்தில் கலாசாலைகள் நடத்துவது வாலிபர்களின் இளமையை வீணாக்குவதாகுமென்றும் 'The Sanskrit system of education would be the best calculated to keep the country in darknees'' ''சமஸ்கிருதக் கல்வி முறையானது தேசத்தை அந்தகாரத்தில் எப்போதும் ஆழ்த்திவைக்கக்கூடியது'' என்றும் முடிவு கட்டி இந்தியர்களிடை இங்கிலீஷ் பாஷையையும் மேற்கத்திய கலைகளையும் பரவச் செய்வதே சர்க்காரின் கடமையாகும் என்று ஸ்தாபிதம் செய்து தன் அபிப்பிராயத்தை கவர்னர் ஜனரல் ஒப்புக்கொள்ளாவிடில் கல்விக் கமிட்டிக்குத் தான் தலைமை வகிக்கவோ, அதன் வேலையில் கலந்துகொள்ளவோ முடியாதென்றும் உறுதியாகத் தெரிவித்துக்கொண்டார்.

2-2-1835-ந் தேதியில் **T. B.** மகாலே எழுதிய கல்வி முறை சம்பந்தமான இந்த மினிட் (குறிப்பு) சீர்திருத்தத்தில் ஆர்வங்கொண்ட ஒவ்வொரு இந்தியனும் படிக்கவேண்டிய ஒன்றாகும்.

மகாலேயின் அபிப்பிராயம்.

கவர்னர் ஜனரல் வில்லியம் பென்டிங் பிரபு, மகாலேயின் அபிப்பிராயத்தை அப்படியே ஒப்புக்கொண்டு, இங்கிலீஷை அரசாங்க பாஷையாகவும், இங்கிலீஷ் மூலம் மேற்கத்திய கலைகள் கற்பிக்கப்பட

வேண்டுமென்றும் இங்கிலீஷ் கல்விக்கே, கவர்ன்மெண்டு மான்யம் செலவிடப்பட வேண்டுமென்றும் 7-3-1835-ல் உத்திரவு செய்தார்.

இவ்விதம் அழுலுக்குக் கொண்டுவரப்பட்ட இங்கிஷ் கல்வி சென்ற நூறு வருஷங்களில் நாடெங்கும் பரவி, நம்முடைய சமய, சமூக பொருளாதார, அரசியல் முதலிய எல்லாத் துறைகளிலும் ஓர் மகத்தான புரட்சியை உண்டாக்கி யிருக்கிறது.

மகாலே செய்த தவறு

இந்தியர்களில் உயர்ஜாதிக்காரர் சிலருக்கு இங்கிலீஷ் பாஷையையும் மேற்கத்திய கலைகளையும் கற்பித்து, இவர்களுடைய மனப்பான்மையை மாற்றி நாகரீகத் துறையில் முன்னேறச்செய்துவிட்டால், இவர்கள் மூலம் மேல்நாட்டுக் கலைகளும், நாகரீகமும் பாமர ஜனங்களுக்கும் பரவி விடும் என்று மகாலே எதிர்பார்த்தார். ஆகையால், அப்போது தேச பாஷைகளின் மூலம் கல்வி கற்பிக்கவேண்டிய அவசியத்தையும், பாமர ஜனங்களுக்கு நேரடியாகக் கல்வி கற்பிக்க வேண்டிய எற்பாட்டையும் சர்க்கார் கவனிக்கவில்லை. இதன் பலனாக, சர்க்கார் ஆதரவு பெற்ற கலாசாலைகளில், தேச பாஷைகளுக்கு இடமிருக்கவில்லை. இங்கிலீஷ் பாஷைக்கு அளவுகட்ந்த மதிப்பும் கவனமும் கொடுக்கப்பட்டது. இந்தக் கலாசாலைகளில் படித்த இந்தியர்கள் இங்கிலீஷின் மேலுள்ள மோகத்தில் தங்கள் தாய்பாஷைகளைப் புறக்கணித்தனர். இங்கிலீஷ் பட்டதாரிகள் தங்கள் தாய்பாஷைகளில் பேச எழுதக்கூட மறந்தனர். மகாலே எதிர்பார்த்தபடி இவர்கள், மேல்நாட்டு நாகரீகத்தையும், முன்னேற்ற மனப்பான்மையையும் பெற்றனர். ஆயினும், தாங்கள் பெற்ற அறிவைச் சாமான்ய ஜனங்களுக்குப் பிரயோஜனப்படுத்தவோ, சாமான்ய ஜனங்களிடை பரப்பவோ சக்தியற்றவராயினர். இங்கிலீஷ் தெரியாத பாமர மக்களுக்கும் இங்கிலீஷ் படித்த கூட்டத்திற்கும் இடையில் மிகுந்த வித்தியாசம் ஏற்பட்டது. இரு கூட்டங்களும் கலந்துகொள்ள முடியாதபடி, இவர்களுடைய வாழ்க்கை முறையும் நடையுடை பாவனைகளும் பெருந்தடைகளாக விருந்தன. படித்த கூட்டம், பாமர மக்களினின்றும் பிரிந்து, தனிப்பட்ட கூட்டமாக வாழ்ந்தது. சாமான்ய ஜனங்களின் அறியாமையும் அந்தகாரமும் என்றும் போல் இருந்து வந்தன

தேச பாஷைகளும் பொதுஜனக் கல்வியும்

ஒரு சிலர் மட்டும் உயர்ந்த கல்வி பெறுவதனால் தேசத்திற்கு யாதொரு நன்மையும் உண்டாவதில்லை யென்பதைச் சர்க்கார் வெகு

சிக்கிரத்தில் கண்டனர். தேசமக்களில் பெரும்பாலார் இங்கிலீஷ் பாஷை கற்றுக் கலா ஞானம் பெறுவது முடியாதென்றும் அறிந்தனர். பாமர ஜனங்களின் அறியாமையைத் தேச பாஷைகளின் மூலம் கல்வி கற்பிப் பதால் தான் போக்க முடியும் என்பதையும் தெரிந்தனர். தேச மக்க ளுக்கு அவர்களுடைய தாய் மொழிகளின் மூலம் ஓரளவு கல்வி கற்பிக்க வேண்டியது சர்க்காரின் கடமை என்பதையும் உணர்ந்தனர். இதன் பலனாக 1854-ம் வருஷம் முதல், தாய் மொழிகளின் மூலம் பொது ஜனங்களுக்கு ஆரம்பக் கல்வியும் நடுத்தரக் கல்வியும் கற்பிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டது. இதற்கப் புறமே, எல்லாச் சமூகங்களிடையும் கல்வி பரவத் தொடங்கியது.

இங்கிலீஷ் படிப்பின் விளைவு

ஆங்கில ஆட்சியில், தேச மக்களின் கல்வி விஷயமாய், அரசாங்கத் தின் கொள்கை ஆரம்பத்தில் எவ்வாறு இருந்தது, பின் எவ்வாறு மா றிற்று என்பதையும் மேலே சுருக்கமாகச் சொன்னோம். இக் கொள் கையின் பலனாய் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களையும் சிறிது கவனிப் போம்.

பேச்சு வழக்கில் இல்லாத சமஸ்கிருதம், பிறநாட்டிலிருந்து வந்த அரபி பாஷைகளை ஒழித்து, இங்கிலீஷ் பாஷை மூலம் கற்பித்த தனால், உயர்தரப் படிப்பு இந் நாட்டில் உள்ள மக்களில் எல்லா சமூகத் தவர்களிலும் சிற்சிலருக்குப் பயன்பட முடிந்தது. இந்து சாஸ்திரப் படி சமஸ்கிருதம் படிக்கிற ஜாதி, படிக்கக்கூடாத ஜாதி, கற்பிக்கிற ஜாதி, கற்பிக்க யோக்கியதை யில்லாத ஜாதி என்று இருந்து வந்த கட் டுப்பாடுகள் ஒழிந்தன. முன் கேட்டு அறியாத சுதந்தரம், சகோதரத்து வம் என்கிற உணர்ச்சிகள், பாமர மக்களிடை பரவ முடிந்தது. மேல் நாடுகளிலிருப்பது போன்ற தேசீய உணர்ச்சியும் தேச அபிமானமும் ஓரளவுக்கு உருக்கொள்ள முடிந்தது.

இங்கிலீஷூம் தேச பாஷைகளும்.

நம் நாட்டில் பேசப்படும் பாஷைகள் எல்லாம் இங்கிலீஷ் பாஷை யின் சம்பந்தத்தால் அதிக விருத்தியடைந்தன. சமஸ்கிருதம் அரபி பாஷைகளின் சம்பந்தத்தால் அடைந்ததை விட அதிகமான பிரயோ ஜனத்தைத் தேச பாஷைகள் இங்கிலீஷ் சம்பந்தத்தால் அடைந்துள் ளன என்பது மிகையாகாது. தேச பாஷைகளின் சொற்றொகுதி (Vocobulary) பெரிதும் விரிவடைந்திருப்பது ஒன்று. சிறப்பாக

அரசியல், விஞ்ஞானம், வியாபாரம், கைத்தொழில் துறைகளில் தான் இங்கிலீஷ் பாஷையின் கூட்டுறவால் விளைந்த பயன் நன்கு தெரியும். உதாரணமாக, தேச பாஷைகளில் பிரசுரிக்கப்படும் எந்த ஒரு தினசரிப் பத்திரிக்கையை எடுத்துக்கொண்டாலும் இங்கிலீஷிலிருந்து நாம் எடுத்தாளும் வார்த்தைகள் எவ்வளவென்பதும், அவ் வார்த்தைகள் குறிக்கும் கருத்துக்களை மொழிபெயர்ப்பு வார்த்தைகளால் தெரிவிப் பது எவ்வளவு கஷ்டமானது என்பதும் காணலாம். உதாரணத்திற்குச் சில பதங்களை (தினமும் வழக்கத்தில் உள்ளவற்றை) கீழேதருகிறோம்.

அரசியற் சொற்கள்:—காங்கிரஸ்; வொர்க்கிங் கமிட்டி; பார்லி மெண்டரி கமிட்டி; சேர்மென்; டெபுடி; பிரசிடண்டு; அசெளம்பிளி; கௌன்சில்; வோட்; போல்; ஆர்டர்; கமிஷன்; ஜஸ்டிஸ்; etc.

கலைச் சொற்கள்:—ரேடியோ; புரோகிராம்; டெலிபோன் ப்ராட்காஸ்ட்; செட்; ரிகார்டு etc.

வியாபாரச்சொற்கள்:—ஹார்பர்; ஸ்டீமர்; மார்க்கட்; பீஸ் (ஜவுளி) ஆவரேஜ்; சிமிட்டி; பேல்; லாட்; ஸ்பெஷல்; கண்டிராக்ட் etc.

கைத்தொழில் சம்பந்தமானவைகள்:—லேபர்; யூனியன்; போனஸ்; சிம்னி; இன்ஜின்; பவர்; மானேஜர்; டிரைவர் etc.

மேற்கண்ட சொற்களில் சிலவற்றிற்குத் தேச பாஷைகளில் சொற் கள் தேடிப் பிடிக்கக்கூடுமென்றாலும், இங்கிலீஷ் சொற்கள் தெரிவிக் கும் உணர்ச்சிகளை, மொழிபெயர்ப்பு வார்த்தைகள் உண்டாக்குவது சாத்தியமில்லை, மேற்படி சொற்களைப் போன்ற நூற்றுக்கணக் கான சொற்களைத் தினந்தோறும் தேசபாஷைப் பத்திரிக்கை கள் உபயோகித்து வருகின்றன.

பாஷை நடையில் மாறுதல்

சொற்பெருக்கம் மட்டும் அன்றிப் பாஷை நடையிலும் இலக்கிய அனமப்பிலும் தேச பாஷைகள், இங்கிலீஷின் சம்மந்தத்தால் பெரிய மாறுதல்களையடைந்து வருகின்றன. உதாரணமாகத் தமி ழில் 100 வருஷங்களுக்கு முன், வசன நடையில் நூல்களே இருக்க வில்லை. ஒன்றிரண்டு இருந்தாலும், அவைகள் செய்யுள் நூல்களின் உரை நூல்களாகவும் வியாக்கியானங்களாகவும் இருந்தன. இவை களும், படிப்போர் பல்லை உடைக்கும் கடின நடையில் எழுதப்பட்

டிருந்தன. அரும்பெருங் கருத்துக்களைச் செய்யுளிற் போலவே, வசனத்திலும் அமைத்து இலக்கியங்கள் எழுதலாம் என்றுதேச பாஷைப் பண்டிதர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. வசன நூல்களின் மூலம் தான், பாமர ஜனங்கள் அறிவுபெற முடியும் என்பதையும் சமீப காலம் வரை ஒப்புக்கொள்ளவில்லை. வழக்கத்தில் இல்லாத வார்த்தைகளைக் கொண்டு கருத்துக்களை எவ்வளவுக்கெவ்வளவு மறைத்து எழுத முடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு நூலின் மதிப்பு உயர்வதாகப் பண்டிதர்கள் எண்ணினர். இந்தக் கொள்கை மாறி, வெள்ளைச் சொற்களால் எல்லாருக்கும் எளிதில் விளங்கும்படி எழுதுவதுதான் சிறந்த நடையென்று ஒப்புக்கொள்ளப்பட்டதும், இங்லீஷ் பாஷையின் இலக்கியப் போக்கையும், நடையையும் பின் பற்றியேயாகும்.

இலக்கியப் பொருளிலும் மாறுதல்.

நமது தேச பாஷைகளில் உள்ள இலக்கியங்களின் பொருளும், சமீப காலம்வரை மதம், கடவுள், பக்தி, முதலிய ஒன்றிரண்டு துறைகளிலேயே சுழன்று தேங்கிக் கிடந்தது. கீழ்நாட்டு இலக்கியங்களில் 100-க்கு 99, மத சம்மந்தமானவைகளாகவேயிருந்தன. இயற்கைப் பொருள்களைப் பற்றியும், ஜன சமூக வாழ்க்கைக் காட்சிகளை உள்ளபடி சித்தரித்தலையும், விஞ்ஞான சம்மந்தமான ஆராய்ச்சிகளையும், பல்வேறு கலைகளின் வளர்ச்சியைப் பற்றியும் இலக்கியங்கள் எழுதப்பட ஆரம்பித்திருப்பதும் இங்கிலீஷ் இலக்கியங்களைப் பின்பற்றியேயாம்.

மேற் கூறிய மூன்று வகைகளிலும் தேசபாஷைகள், இங்கிலீஷின் கூட்டுறவால் நன்மையடைந்திருப்பதாகச் சொல்லலாம்.

இங்கிலீஷே இரண்டாவது பாஷை.

நம்முடைய உள்ளக் கருத்தைப் பிறருக்குத் தெரிவிப்பதற்கும், பிறர் கருத்துக்களை நாம் அறிந்து கொள்வதற்கும் பாஷை உதவுகிறது. நம்முடைய மனத்தில் எழும் உணர்ச்சிகளைத் தங்கு தடையின்றித் தாராளமாய் வெளியிடுவதற்கு நாம் பிறந்தது முதல் பேசிவரும் தாய் பாஷையே ஏற்றதாகும். ஆகையால் இலக்கியப் பயிற்சிக்கும் கவிதை யின்பத்திற்கும் ஒருவாது தாய் மொழியே சிறந்த சாதனமாகும். ஆனால், வேறு பாஷை ஜனங்களுடன் கூட்டுறவு

கொண்டு ராஜீய வியாபார சம்பந்தப்பட்ட உலக விவகாரங்களில் ஈடுபடுவதற்கு, நம்முடைய தாய் மொழி பயன் படுவதில்லை. இரண்டாவது பாஷையைக் கற்க வேண்டி வருகிறது. இந்த இரண்டாவது பாஷையானது, உலகில் உள்ள பெரும்பாலானவர்களுக்குப் பொதுவானதும் நாகரீக வளர்ச்சிக்குத் துணையாக இருப்பதும், இலக்கியச் சிறப்பு வாய்ந்ததும் ஆக இருத்தல் அவசியம். இந்த வகையில் பார்க்கும் போது நம் நாட்டின் தற்கால நிலைமைக்கும், உலக நிலைமைக்கும் பொருத்தமான பொதுப்பாஷை இங்கிலீஷேயாகும். இங்கிலீஷையே நாம் இரண்டாவது பாஷையாகக் கற்பது பயன் தரும்.

இங்கிலீஷுக்கு எதிர்ப்பு குறையவில்லை.

தேசீய இயக்கத்தில் தீவிரமாய் ஈடுபட்டுள்ள சிலருக்கு, இங்கிலீஷ் பாஷையிடத்தில் உள்ள வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இங்கிலீஷ்காரரிடத்தில் உள்ள துவேஷமும், சுதேச பாஷையிடத்துள்ள பிரேமையும், இங்கிலீஷ் பாஷையின் சிறப்பையும், அதனால் ஏற்பட்ட நன்மைகளையும் மறைத்து விடுகின்றன. ஆயினும் ஹிந்திப் பைத்தியம் பிடித்த தேசபக்தர்கள்கூடத் தங்கள் மக்களுக்கு இங்கிலீஷ் கல்வி கற்பிக்காமல் நிறுத்தி விடவில்லை. காலேஜ்களிலும், உயர்தரபாடசாலைகளிலும் இடத்திற்கு மும்முரமான போட்டி இருந்துவருகிறது. இங்கிலீஷ்கல்விகற்று அதன் மூலம்பெருமை யடைந்த ஒரு கூட்டம், தங்கள் பிள்ளை குட்டிகளுக்கு வீட்டில் பேசுவதுகூட இங்கிலீஷில் பழக்கி, இங்கிலீஷ் பாடசாலைகளுக்கு அனுப்பிக் கொண்டு, மேடைகளில் வந்து, ஹிந்தியை எல்லாரும் கற்றுக்கொள்ளுங்கள் என்று பிரசாரம் செய்வதென்றால், அது எமாற்றுப் பிரசாரம் அல்லவா என்று கேட்கின்றோம். இவர்கள் பேச்சை நம்பி இங்கிலீஷை வெறுத்துக் கற்காமல் விடுவது முட்டாள்தனம் அல்லவா என்றும் கேட்கின்றோம்.

ஆயினும் சாமான்ய ஜனங்கள் இவர்கள் பேச்சை ஏற்றுக்கொள்ளவில்லை. இள வயதில் இங்கிலீஷ் கற்கும் பாக்கியம் பெறாதவர்கள், வயது வந்து ஏதோவொரு தொழிலை நடத்தி வருகிறபோதுகூடச் சிறிதாவது இங்கிலீஷ் எப்படியாவது படித்துக்கொள்ளவேண்டும் என்று பெருமுயற்சி செய்கிறார்கள். சாமான்ய ஜனங்களிடத்தில் வளர்ந்துள்ள இந்த இங்கிலீஷ் பாஷா விருப்பத்தை அறிந்து, புஸ்தக வியாபாரிகள் "ஆங்கிலபோதினி" யென்றும் "ஆங்கில ஆசான்" என்றும்

"இங்கிலீஷ் ஸ்வயபோதினி" என்றும் தமிழ்மூலம் இங்கிலீஷ் கற்பிக்கும் புஸ்தகங்களை வெளியிட்டு, இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் விலை போட்டுப் பதினாயிரக்கணக்கான பிரதிகளை வருஷா வருஷம் விற்று வருகிறார்கள். இதிலிருந்து, இங்கிலீஷ் பாஷைக்குள்ள மதிப்பு அதன் பிரயோஜனத்திற்குத் தகுந்தபடி வளர்ந்து வருகிறது தெரியக் கூடும்.

உலக இலக்கியங்களின் பொக்கிஷம்.

கவிரவீந்தரநாத் தாகூர் வங்காளியில் பல சிறந்த நூல்களை எழுதியிருக்கிறார். ஆனால் அவரை உலகம் மதிக்கச் செய்தது, அவருடைய நூல்களின் இங்கிலீஷ் மொழிபெயர்ப்புக்களே. தாகூரின் கவித் திறமையை நாம் (தமிழர்) அறிந்ததும், அவர் நூல்களின் இங்கிலீஷ் மொழிபெயர்ப்புகளின் மூலமேயாகும். ஆனால் தாகூரின் சொந்த மொழிகளைப் படித்து இன்புற வேண்டுபவர்கள் வங்காளி பாஷையைப் படிக்கட்டும். அதுபோல, துளசிதாஸர் இராமாயணத்தை கிரந்தகர்த்தாவின் சொந்த வார்த்தைகளில் படித்து இன்பம் பெற விரும்புபவர்கள் ஹிந்தி கற்றுக்கொள்ளட்டும். உமாரின் ருபாயத்தைப் பாரஸீக பாஷையில் படிக்க விரும்புபவர், பாரசீக பாஷை கற்கட்டும்; கத்தேயின் "பாஸ்ட்" (Goethe's Faust) என்னும் உலகிற் சிறந்த காவியத்தை ஜர்மன் பாஷையில் படிக்க விரும்புபவர் ஜர்மன் பாஷை கற்றுக்கொள்ளட்டும்; ஹோமரின் இலியத்தை கிரேக்க பாஷை கற்றுப் படிப்பவர் படிக்கட்டும்; ஆனால் உலகின் பல பாஷைகளில் உள்ள சிறந்த இலக்கியங்களை, அவ்வப்பாஷைகளைக்கற்றுப் படிப்பது எந்த ஒருதனி நபருக்கும் சாத்தியமான காரியம் அல்ல. உலக இலக்கியங்களில் பொறுக்குமணிகள் போன்றுள்ள சிலவற்றைக்கூட, நம் நாட்டு பாஷைகளில் மொழிபெயர்த்து விடுவதும் உடனே கைகூடும் காரியமல்ல. ஆனால், ஒருவன் இங்கிலீஷ் பாஷை ஒன்றைக் கற்றுக்கொள்வதன் மூலம், உலக இலக்கியப் பொக்கிஷத்திற்குத் திறவுகோலைப் பெற்று விடுகிறான். உலகத்தின் சிறந்த நூல்கள் எல்லாவற்றையும் வாசிக்க வசதியடைந்து விடுகிறான்.

ஹிந்திக்கு ஆட்சேபணை.

இந்தியாவில் சுமார் 9 கோடி மக்களுக்கு ஹிந்தி தாய் பாஷையாக இருப்பது உண்மை. ஆனால் மீதி 26 கோடி மக்களும் ஹிந்தியைக் கற்றுக் கொள்வதென்பது என்றும் முடியாத காரியம். எங்

கும், சமூகத்தின் ஒரு சிலர்தான் தாய் பாஷையுடன் இரண்டாவது பாஷை கற்க முடியும். இப்போது இந்தியா முழுவதிலும் இங்லீஷ் பாஷை பொதுப் பாஷையாக இருந்து வருகிறது. ஹிந்தி பேசப் படும், ஐக்கியமாகாணம், பீகார் மாகாணங்களிலும் இங்கிலீஷ்தான் பொதுப்பாஷையாகவிருக்கிறது. இங்கிலீஷ், இந்தியர்கள் ஒருவருக் கும் தாய் பாஷையாக இல்லாத காரணத்தால், இங்கிலீஷ் கற்பதில் எந்த ஒரு சமூகத்திற்கோ, ஒரு மாகாணத்திற்கோ விசேஷ சௌ கரியம் அல்லது சலுகையிருக்க இடமில்லை. இங்கிலீஷ் கற்பதில் உள்ள சௌகரியமும், கஷ்டமும், எல்லா சமூகங்களுக்கும், எல்லா மாகாணங்களுக்கும் ஒரே தன்மையில் இருப்பதால், யாருக்கும் ஆட்சே பிக்க இடமில்லை. ஆனால் ஹிந்தியைப் பொது பாஷையாக ஏற்படுத் துவதில், ஹிந்தி வழங்கும் மாகாண வாசிகளுக்கும், ஹிந்தியைத் தாய் பாஷையாகவுள்ள சமூகங்களுக்கும், விசேஷ சௌகரியங்க ளும், சலுகைகளும் ஏற்பட்டுவிடும். இது பற்றி மற்ற மாகாண வாசிகளும், மற்ற சமூகங்களும் பொறாமைப்படுவதும் நியாயமா கும். ஹிந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு, இங்கி லீஷைவிட ஹிந்தி அந்நியமான பாஷையாகவே இருக்கிறது. ஆகையால், ஹிந்தி பேசாத ஜனங்கள் ஹிந்தியைப் பொதுப் பாஷை யாக்க உடன்பட மாட்டார்கள். மற்ற பாஷைகள் சம்மதிக்கா.

ஹிந்தியும் மகம்மதியரும்.

பேச்சு வழக்கத்தில், ஹிந்திக்கும், இந்துஸ்தானிக்கும் ஓரளவு ஒற்றுமை இருப்பதிலிருந்து, மகம்மதியர் ஹிந்தியை ஒப்புக்கொள்வார் கள் என்று எதிர்பார்ப்பது தப்பு. அரபி, பாரஸீகச் சொற்கள் மிகு தியும் கலந்த இந்துஸ்தானியைப் பேசும் மகம்மதியர் சமஸ்கிருதச் சொற்கள் மலிந்த ஹிந்தியைப் பேச்சு வழக்கிற்கூடத் தங்கள் மொழி யாக ஒப்புக் கொள்வதில்லை. வரிவடிவத்தில், ஹிந்தியின் தேவ நாகரி லிபியை, மகம்மதியர், என்றும் ஒப்புக் கொள்ளப் போவதில்லை. இந்துஸ்தானியும் சிறிது ஹிந்தியும் கலந்த கிராமிய பாஷையாக வட இந்தியர்களில் பெரும் பாலார் பேசிவரும் ஹிந்தி—இந்துஸ்தானி பாஷைக்கு, தேவ நாகரி லிபியும், இந்துஸ்தானிலிபியும் இல்லாமல், ரோமன் லிபியை (இங்கிலீஷ் எழுத்து) ஏற்படுத்தினால், ஒருவேளை வட இந்தியாவுக்கு, ஹிந்தியும் இந்துஸ்தானியும் கலந்த இந்த கிராமிய பாஷை பொது மொழியாகக்கூடும். இந்த நிலைமையில், திராவிட தேசத்தவர்கள், சமஸ்கிருதச் சார்பில்முளைத்த, தேவ நாகரி லிபியில் வரையப்படும் இலக்கிய ஹிந்தியைப் பொதுப் பாஷையாக ஏற்றுக் வது எப்படி முடியும்?

காலநிலை.

விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக, உலகம் நாளுக்கு நாள் சிறியதாகி வருகிறது. காலம், தூரம் ஆகிய இரண்டு தடைகளும் தகர்க்கப் பட்டு வருகின்றன. உலகின் பற்பல நாடுகளும் விரைவில் இணைக்கப்படுகின்றன. பரந்த கடல்களையும், உயர்ந்த மலைகளையும், தாண்டி, மனிதன் குரல் உலகின் ஒரு கோடியிலிருந்து மற்ற கோடிக்குக் கேட்கிறது. ரேடியோ, கிராமபோன், டாக்கி, டெலிவிஷன் முதலிய சாதனங்கள், எழுத்துப் படிப்பின் அவசியத்தைக் குறைத்து எல்லா விஷயங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளும்படி செய்து விட்டன. மேற்கண்ட நவீன சாதனங்களின் முழுப்பிரயோஜனத்தையும் நாம் அடைய வேண்டுமானால், நாகரீக உலகத்தில் செல்வாக்குப் பெற்றுள்ள இங்கிலீஷ்பாஷையை நாம் அறிந்து கொண்டால்தான் பயன் உண்டு.

நியூ யார்க்கிலிருந்து டெலிபோனில் பேசுவதையும், லண்டனிலிருந்து ரேடியோவில் சொல்வதையும், பாரிஸிலிருந்து பிராட்காஸ்ட் செய்வதையும், இங்கிலீஷும் ஹிந்தியும் தெரிந்த துபாஷிகளைக் கொண்டு முதலில் ஹிந்தியில் மொழி பெயர்த்துப் பின் நம் தாய் பாஷைகளில் மொழிபெயர்த்துத் தெரிந்துகொள்ளவேண்டிய நிலைமை விரும்பத்தக்கதா வென்பதைத் தமிழர்கள் யோசிக்கவேண்டும். இங்கிலீஷையைப் புறக்கணித்து, ஹிந்தியைப் பொது மொழியாக நாம் ஒப்புக்கொள்வோமானால், நாகரீக உலகத்துடன் நேரடியாகச் சம்பந்தம் வைத்துக்கொள்வது சாத்தியமில்லாமற் போகும். ஹிந்தி மூலமாகவே வெளியுலகச் சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியுமா என்பதையும் யோசித்தறியும்படி கேட்கிறோம்.

உலகப்போக்கு.

சுமார் 3000 பாஷைகள் வழங்குகிற உலகம் முழுவதற்கும் ஒரு பொதுப் பாஷையை ஏற்படுத்த வேண்டுமென்று, நாகரீகம் பெற்ற ஜனங்கள் பலரும் முயற்சித்து வருகிறார்கள். "எஸ்பிராண்டோ" (Esperanto) என்ற ஒரு பாஷை உலகப் பொதுப்பாஷையாகத் தற்காலம் இருந்து வருகிறது. ஆனால் இப்பாஷை பெருவாரியான மக்களால் பயிலப்படுவதில்லை. இதற்குப் பதில், செல்வாக்குள்ள மேல்நாட்டுப் பாஷைகளில் ஒன்றே உலகப் பொதுப்பாஷையாக ஏற்படும் என்று அறிவாளிகள் அபிப்பிராயப்படுகின்றனர். இங்கிலீஷ், பிரஞ்சு அல்லது ருஷியன் ஆகிய மூன்றில் ஒரு பாஷை, உலகப்

பொதுப்பாஷையாகக் கூடும் என்று எச். ஜி. வெல்ஸ் (Wells) சொல்லுகிறார். உலகத்தில் மொத்தம் சுமார் 180 கோடி ஜனங்கள் இருக்கின்றனர். இவர்களில் 18 கோடிப் பெயர் இங்கிலீஷும், 10 கோடி பெயர் ருஷிய பாஷையும், 7 கோடி பெயர் பிரஞ்சு பாஷையும் பேசுவதாகக் கணக்கு. தற்காலம் ஐரோப்பாவில் சர்வதேசக் கூட்ட நடவடிக்கைகள் பெரும்பாலும் பிரஞ்சு பாஷையிலும், சிறுபாகம் இங்கிலீஷ் பாஷையிலும் நடைபெறுகின்றன.

நாம் ஹிந்தியைப் பொதுப்பாஷையாக்கத் தீர்மானிப்பதற்குள்ளாகவே, உலகம் இங்கிலீஷைப் பொதுப்பாஷையாக ஒப்புக்கொண்டு விடும். உலகம் உள்ள இந்த நிலையில், ஹிந்தியைப் பொதுப் பாஷையாக ஆக்க வேண்டுமென்று கருதி, உலகத்தில் ஒப்பற்ற செல்வாக்குப்படைத்திருக்கும் இங்கிலீஷ் பாஷையைப் புறக்கணிப்பது, நமக்குச் சிறிதும் நன்மையுண்டாக்காது.

ஹிந்தியைப் பொதுப்பாஷையாக்குவதால்,

1. நம் தாய்மொழிகளின் வளர்ச்சியும் ஆக்கமும் குறையும்.
2. நாகரீக வளர்ச்சியும், முற்போக்குணர்ச்சியும் தடைப்படும்.
3. நாகரீக உலகத்துடன் நேர்முகமாக நமக்குள்ள தொடர்பு நீங்கிவிடும்.

4. பிற்போக்குணர்ச்சியும் பௌராணிக மனப்பான்மையும் ஊக்கம் பெறும்.

. விஞ்ஞானக் கலைகளின் வளர்ச்சியும், நவீன சாதனங்களால் அடையக்கூடிய நன்மைகளும் குறையும்.

6. பாமர மக்கள் மனத்தில் மூளைத்துள்ள சமூக, சுதந்தர, சுய மரியாதையுணர்ச்சிகள் பரவி வளர்வது கஷ்டமாகிவிடும்.

7. இங்கிலீஷ் பாஷையுடன் தோன்றி வளர்ந்துள்ள அரசியல் கொள்கைகளும், ஜனநாயக உணர்ச்சியும், ஸ்தாபனங்களும் ஒழிந்து, பழமை விலங்குகளை மக்கள் பூட்டிக்கொள்ளச் சாதகமாகும்.

தீவிர தேசீயவாதிகள் கனவு காண்பது போல, இங்கிலீஷ் ஆட்சியும், இங்கிலீஷ் சம்பந்தமும் நாளையதினமே ஒழிந்துவிடப் போவதில்லை. அப்படி ஒழிந்த காலத்திலும் கூட, சுதந்தரம் பெற்ற இந்தியா, நாகரீக உலகத்தின் சம்பந்தத்தை அறுத்துவிட்டுத் தனித்து

தீபாவளிப் பண்டிகை.

(ஈ. வெ. ரா.)

இவ் வருஷத்திய தீபாவளிப் பண்டிகை சமீபத்தில் வரப் போகின்றது. பார்ப்பனரல்லாத மக்களே! என்ன செய்யப்போ கின்றீர்கள்? "அப்பண்டிகைக்கும் எங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை" என்று சொல்லி விடப்போகின்றீர் களா? அல்லது அப்பண்டிகையைக் கொண்டாடப்போகின் றீர்களா? என்பது தான் "நீங்கள் என்ன செய்யப்போ கின்றீர்கள்?" என்று கேட்பதின் தத்துவமாகும். நண்பர் களே! சிறிதுச் யோசனை இன்றி யோக்கியப் பொறுப்பின்றி உண்மைத் தத்துவமின்றி சுயமரியாதை உணர்ச்சி இன்றி சுயமரியாதை இயக்கத்தின் மீது வெறுப்புக்கொள்ளுகின்றீர் களே யல்லாமல் மற்றும் சுயநலப்பார்ப்பனர் வார்த்தைகளை யும், மூடப்பண்டிதர்களின் கூக்குரலையும், புராணப் புஸ்தக வியாபாரிகளின் விஷமப் பிரசாரத்தையும், கண்டு மயங்கி அறி விழந்து ஓலமிடுகின்றீர்களே யல்லாமல் மேலும் உங்கள் வீடு களிலும், அண்டை அயல்களிலும் உள்ள கிழங்களுடையவும், அழுக்கு மூட்டைகளுடையவும், ஜீவனற்ற தன்மை

வாழமுடியாது. சுதந்தரம் பெற்ற பின்னும் இங்கிலீஷே, நமக்கு மிகுதியும் பயன் தரும் பொதுப் பாஷையாகும். எனவே இதுபோது ஒரு சிலர் செய்துவரும் ஹிந்திப் பிரசாரத்திற்குத் தமிழர் எவரும், செவி சாய்க்கலாகாது; எவ்வித உதவியும் செய்யக்கூடாது. அவ்வாறு செய்வது தமிழர் முன்னேற்றத்திற்குத் தடை செய்வதாகும்.

"இந்தியாவின் பல பாகங்களிலும், உயர்ந்த விஞ்ஞானக் கலை யாராய்ச்சிக்குப் பொது மொழியாக ஆங்கில மொழி அமைதலும், ஒவ் வொரு மாகாணத்திலும் ஏழை மக்கள் எளிதிற் பயின்றுகொள்ளவேண் டிய கலைத் துறைகள் அனைத்தும் நாட்டு மொழிகளில் அமைந்து நிற் பதும் பொருத்தமாகும்." (20-9-36-ல் கலைச்சொல் ஆக்க மகாநாட் டுத் தலைவர் சாமி விபுலானந்தர்)

யான "பழைய வழக்கம்" "பெரியோர் காலம் முதல் நடந்து வரும் பழக்கம்" என்கின்றதான வியாதிக்கு இடம் கொடுத்துக்கொண்டு கட்டிப்போடப்பட்ட கைதிகளைப்போல் துடிக்கின்றீர்களே யல்லாமல் உங்கள் சொத்தப்பகுத்தறிவைச் சிறிதுகூட செலவழிக்க சம்மதிக்க முடியாத உலுத்தர்களாய் இருக்கின்றீர்கள்.

பணத்தையும், மானத்தையும் எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கத் தயாராயிருக்கிறீர்கள். சுதந்தரத்தையும், சமத்துவத்தையும் எவ்வளவு வேண்டுமானாலும் விட்டுக்கொடுக்க தயாராயிருக்கின்றீர்கள். ஆனால் உங்கள் பகுத்தறிவைச் சிறிது கூட பயன்படுத்தத் தயங்குகிறீர்கள். அது விஷயத்தில் மாத்திரம் ஏன் வெகு சிக்கனம் காட்டுகின்றீர்கள்? இந்நிலையிலிருந்தால் என்றுதான் நாம் மனிதர்களாவது? பார்ப்பனரல்லாதார்களில் சில பண்டிதர்கள் மாத்திரம் வயிறு வளர்த்தால் போதுமா? புராணப்புஸ்தக வியாபாரிகள் சிலர் மாத்திரம் வாழ்ந்தால் போதுமா? கோடிக்கணக்கான மக்கள் ஞானமற்று மானமற்று கால்வயிற்றுக் கஞ்சிக்கும் வகையற்று அலைவதைப்பற்றிய கவலை வேண்டாமா? என்று கேட்கின்றேன்.

புராண கதைகளைப்பற்றிப் பேசினால் கோபிக்கின்றீர்கள்; அதன் வாலை எடுத்துச்சொன்னால் காதுகளைப் பொத்திக்கொள்ளுகின்றீர்கள். "எல்லாருக்கும் தெரிந்ததுதானே; அதையேன் அடிக்கடி கிளறுகின்றீர்கள்? இதைவிட உங்களுக்கு வேறு வேலை இல்லையா?" என்று கேட்கின்றீர்கள். ஆனால் காரியத்தில் ஒரு காலைக்கு உள்ள 60 நாழிகை காலத்திலும் புராணத்திலேயே மூழ்கி, மூச்சு விடுவது முதல் அதன்படியே செய்து வருகின்றீர்கள். இப்படிப்பட்ட மனிதர்கள் புராணப்புரட்டை உணர்ந்தவர்களாவார்களா? புராண ஆபாசத்தை வெறுத்தவர்களாவார்களா? நீங்களேயோசித்துப் பாருங்கள்.

பண்டித, பாமர, பணக்கார ஏழைச் சகோதரர்களே! இந்த மூன்று மாத காலத்தில் எவ்வளவு பண்டிகை கொண்டாடினீர்கள்? எவ்வளவு யாத்திரை செய்தீர்கள்? இவற்றிற்காக எவ்வளவு பணச் செலவும், நேரச்செலவும் செய்தீர்கள், எவ்வளவு திரேகப் பிரயாசைப்பட்டீர்கள் என்பதை யோசித்துப்பார்த்தால் நீங்கள் புராணப்புரட்டை உணர்ந்து புராண ஆபாசத்தை அறிந்தவர்களாவீர்களா?

வீணாய் கோபிப்பதில் என்ன பிரயோஜனம்? இந்த விஷயங்களை வெளியில் எடுத்துவிளக்கிச் சொல்லுகின்றவர்கள் மீது ஆத்திரம் காட்டி அவர்களது கண்ணையும், மூக்கையும், தாடியையும், தலைமயிரையும் பற்றிப் பேசுவதால் என்ன பயன்? "நீ ஏன் மலத்தில் மூழ்கி இருக்கின்றாய்" என்றால் அதற்கு "நீ தமிழ் இலக்கணம் தெரியாதவன்" என்று பதில் சொல்லிவிட்டால் மலத்தின் துர்நாற்றம் மறைந்து போகுமா?

அன்பர்களே! சமீபத்தில் தீபாளிப் பண்டிகை என்று ஒன்று வரப்போகின்றது. இதைப் பார்ப்பனரல்லாத மக்க 1000 க்கு 999 பேர்களுக்கு மேலாகவே கொண்டாடப்போ கின்றீர்கள். பெரிதும் எப்படிக் கொண்டாடப்போகின்றீர்கள் என்றால் பொதுவாக எல்லோரும் அதாவது துணி தேவை இருக்கின்றவர்களும், தேவை இல்லாதவர்களும் பண்டிகையை உத்தேசித்துதுணிவாங்குவதுஎன்பது ஒன்று; மக்கள் மருமக் கள்மரியாதை செய்வதற்கென்று தேவைக்கும், யோக்கிய தைக்கும் மேலானதாகவும், சாதாரணமாக உபயோகப்படுத்து வதற்குஏற்றதல்லாததுவுமான துணிகள் வாங்குவது என்பது இரண்டு; அத்த மற்றதும் பயனற்றதுமான வெடிமருந்து சம்மந்தப்பட்ட பட்டாசு வகைகள் வாங்கிக் கொளுத்துவது மூன்று; பலர் இனாம் என்றும், பிச்சை என்றும் வீடு வீடாய் கூட்டங்கூட்டமாய்ச் சென்று பல்லைக்காட்டிக்கெஞ்சி பணம் வாங்கி அதை பெரும்பாலும் சூதிலும், குடியிலும் செல வழித்து நாடு சிரிக்க கடந்துகொள்வது நான்கு; இவற்றிற் காக பலர் ஊர்விட்டு ஊர் பிரயாணம் செய்து பணம் செல வழிப்பது ஐந்து; அன்று ஒவ்வொரு வீடுகளிலும் அமிதமான பதார்த்த வகைகள் தேவைக்கு மிகுதியாகச்செய்து அவை களில் பெரும்பாகம் கண்டவர்களுக்குக் கொடுப்பதும், வீணாக்குவதும் ஆறு; இந்தச் செலவுகளுக்காகக் கடன் படு வது ஏழு. மற்றும் இதுபோன்ற பல விஷயங்கள் செய்வதன் மூலம் பணம் செலவாகின்றது என்பதும், அதற்காக கடன் படவேண்டியிருக்கின்றது என்பதுமான விஷயங்களொருபுற மிருந்தாலும் மற்றும் இவைகளுக்கெல்லாம் வேறு ஏதாவது தத்துவார்த்தமோ சைன்ஸ் பொருத்தமோ சொல்லுவதானா லும் தீபாவளி பண்டிகை என்றால் என்ன? அது எதற்காக கொண்டாடப்படுகிறது என்கின்றதான விஷயங்களுக்கு சிறிதுகூட எந்த விதத்திலும் சமாதானம் சொல்லமுடியாது என்றே சொல்லுவோம். எனெனில் அது எப்படிப்பார்த்தா லும் பார்ப்பனீயப் புராணக்கதையை அஸ்திவாரமாகக் கொண்டதாகத்தான் முடியுமே ஒழிய, மற்றபடி எந்தவிதத்

திலும் உண்மைக்கோ, பகுத்தறிவிற்கோ அனுபவத்திற்கோ சிறிதும் ஒத்ததாக இருக்க முடியவே முடியாது. பாகவதம் இராமாயணம், பாரதம் முதலிய புராண இதிகாசங்கள் பொய் என்பதாக சைவர்கள் எல்லாரும் ஒப்புக்கொண்டாய் விட்டது. கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலியவைகள் பொய் என்று வைணவர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டாய் விட்டது. இவ்விரு கூட்டத்திலும் பகுத்தறிவுள்ள மக்கள் பொதுவாக இவையெல்லாவற்றையும் பொய்யென்று ஒப்புக்கொண்டாய் விட்டது. அப்படி இருக்க ஏதோ புராணங்களில் இருக்கின்ற கதைகளைச் சேர்ந்த பதினாயிரக்கணக்கான சம்பவங்களில் ஒன்றாகிய தீபாவளிப் பண்டிகைக்காக மாத்திரம் மக்கள் இந்த நாட்டில் இந்தக்காலத்தில் இவ்வளவு பாராட்டுதலும், செலவு செய்தலும், கொண்டாடுதலும் செய்வதென்றால் அதை என்னவென்று சொல்ல வேண்டும் என்பதை வாசகர்கள்தான் முடிவு செய்யவேண்டும்.

தீபாவளிப்பண்டிகையின் தத்துவத்தில் வரும் பாத்திரங்கள் 3. அதாவது நரகாசுரன், கிருஷ்ணன், அவனது இரண்டாவது பெண்சாதியாகிய சத்தியபாமை ஆகியவைகளாகும். எந்த மனிதனாவது கடுகளவு மூளையிருந்தாலும் இந்த மூன்று பேரும் உண்மையாய் இருந்தவர்கள் என்றாவது அல்லது இவர்கள் சம்மந்தமான தீபாவளி கடவடிக்கைகள் நடந்தவை என்றாவது, அவற்றிற்கும் நமக்கும் ஏதாவது சம்மந்தம் உண்டு என்றாவது, அதற்காக நாம் இந்தமாதிரியான ஒரு பண்டிகை தீபாவளி என்று கொண்டாட வேண்டுமென்றாவது ஒப்புக்கொள்ள முடியுமாவென்று கேட்கின்றோம்.

பார்ப்பனரல்லாதார்கள், தங்களை ஒரு பெரிய சமூகக்காரர்களென்றும் கலைகளிலும் ஞானங்களிலும் ராகரீகங்களிலும் தேர்ச்சி பெற்றவர்கள் என்றும் தட்டிப்பேச ஆளில்லாவிடங்களில் சண்டப் பிரசண்டமாய்ப் பேசி விட்டுளவனோ ஒரு மூடனோ அல்லது ஓரு அயோக்கியனோ "காளை மாடு கன்றுப் போட்டிருக்கின்றது" என்றால் உடனே "கொட்டத்தில் கட்டி பால்கறந்து கொண்டுவா" என்று பாத்திரம் எடுத்துக்கொடுக்கும் மடையர்களாகவே இருந்து வருவதைத்தான் படித்த மக்கள் என்பவர்களுக்குள்ளும் பாமர மக்கள் என்பவர்களுக்குள்ளும் பெருக்பாலும் காண்கின்றோமே ஓழிய "காளைமாடு எப்படி கன்றுப்

போடும்?'' என்று கேட்கின்ற மக்களைக் காண்பது அரிதாக வே இருக்கின்றது. மற்றும் இம்மாதிரியான எந்த விஷயங் களிலும் கிராமாந்தரங்களில் இருப்பவர்களை விட பட்டணங் களில் இருப்பவர்கள் மிகுதியும் மூடத்தனமாகவும் பட்டணங் களில் இருப்பவர்களை விட சென்னை முதலான பிரதான பட் டணங்களில் இருப்பவர்கள் பெரிதும் மூடசிகாமணிகளாகவும் இருந்து வருவதையும் பார்க்கின்றோம், உதாரணமாக தீபா வளி, சரஸ்வதி பூஜை, தசரா, பிள்ளையார், சதுர்த்தி, பதி னெட்டு, அவிட்டம் முதலிய பண்டிகைகள் எல்லாம் கிரா மாந்திரங்களைவிட நகரங்களில் அதிகமாகவும் மற்ற நகரங் களைவிட சென்னையில் அதிகமாகவும் கொண்டாடுவதைப் பார்க்கின்றோம். இப்படிக் கொண்டாடும் ஜனங்களில் பெரும்பான்மையோர் எதற்காக, என் கொண்டாடுகின்றோம் என்பதே தெரியாதவர்களாகவேயிருக்கின்றார்கள். சாதா ரணமாக மூட பக்தியாலும், குருட்டுப் பழக்கத்தினாலும் கண்மூடி வழக்கங்களைப் பின்பற்றி நடக்கும் மோசமான இடம் தமிழ் நாட்டில் சென்னையைப் போல் வேறு எங்குமே இல்லை என்று சொல்லி விடலாம். ஏனெனில் இன்றைய தினம் சென்னையில் எங்கு போய்ப் பார்த்தாலும் ஒவ் வொரு வீட்டுத்திண்ணையிலும் சரீரமில்லாத ஒருதலை உருவத்தை மாத்திரம் வைத்து அதற்கு நகைகள் போட்டு பூசைகள் செய்து வருவதும், வீடுகள் தோறும் இரவு நேரங்களில் பாரத இராமாயணக் காலக்ஷேபங்களும், பெரிய புராண திருவிளையாடல் புராணக் காலக்ஷேபங்களும், பொது ஸ்தாபனங்கள் தோறும் சதா காலக்ஷேபங்களும் நடைபெறுவதையும் இவற்றில் தமிழ் படித்த பண்டிதர்கள் ஆங்கிலம் படித்த பட்டதாரிகள், கௌரவப் பட்டம் பெற்ற பெரிய மனிதர்கள், பிரபலப்பட்ட பெரிய உத்தியோகஸ்தர் கள் மற்றும் பிரபுக்கள், டாக்டர்கள், சைன்ஸ் நிபுணர் கள், புரபசர்கள் முதலியவர்கள் பெரும் பங்கெடுத்துக் கொண்டிருப்பதையும் பார்க்கலாம். பார்ப்பனரல்லாதார் களில் இந்தக் கூட்டத்தார்கள் தான் ''ஆரியர் வேறு தமி ழர் வேறு'' என்பாரும் ''புராணங்களுக்கும் திராவிடர்க ளுக்கும் சம்மந்தமில்லை'' என்பாரும் பார்ப்பனரல்லாத சமூகத்தாருக்கு ''நாங்கள் தான் பிரதிநிதிகள்'' என்பாரும் மற்றும் ''திராவிடர்களின் பழைய நாகரீகத்திற்கு மக்களை அழைத்துச் செல்லவேண்டு''மென்பாரும் பெருவாரியாக இரு ப்பார்கள். ஆகவே இம்மாதிரியான விஷயங்களில் படித்தவர் கள் பணக்காரர்கள் உத்தியோகஸ்தர்கள் என்கின்றவர்

கள் போன்ற கூட்டத்தாரிடம் அறிவு, ஆராய்ச்சி சம்மந்த மான காரியங்களை எதிர்பார்ப்பதைவிட, உலக அறிவுடைய சாதாரண மக்களிடம் எதிர்பார்ப்பதும், பிரசாரம் செய்வதும் பயன் தரத்தக்கதாகும்.

உதாரணமாக, ராமேஸ்வர தேவஸ்தானக்கமிட்டியாரின் ஒருரிபோர்ட்டில் மக்கள் ராமேஸ்வரத்திற்கு முந்தியவழக்கம் போல் இப்போது யாத்திரைக்கு வருவதில்லை என்றும் அதனால் வரும்படி குறைந்துவிட்டதென்றும், அதுபோலவே திருப்பதி மகந்து அவர்களின் ஒரு வருஷாந்திர ரிப்போர்ட்டில் அவ்வருஷம் திருப்பதிக்கு யாத்திரைக்காரர்கள் மிகக் குறைந்து போய் அதனால் கோவிலுக்கு முந்திய வருஷங்களைவிட பகுதி வரும்படிகூட எதிர்பார்க்க முடியாததாய் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருப்பதனாலும், சங்கராச்சாரியார், ஜீயர் முதலிய மடாதிபதிகள் செல்லுகின்ற பக்கங்களில் எல்லாம் முன்போல் வரவேற்பு ஆடம்பரங்களும் வரும்படியும் இல்லாமல் சீக்கிரம் சீக்கிரமாக சஞ்சாரத்தை முடித்துக் கொண்டு ஊர் திரும்புவதிலிருந்தும் பிராமண மகாநாடுகளும் சமயப்பத்திரிகைகளும் மூட்டை கட்டப்படுவதிலிருந்தும் ஒரு விதத்தில் பாமர மக்களிடை உண்மை உணர்ச்சி பரவி இருக்கின்றதென்பதை உணர முடிந்தாலும், வழிகாட்டிகளென்றும் தலைவர்களென்றும் பொது ஜனங்களின் தர்மகர்த்தாக்களென்றும் படிப்பாளிகள் என்றும் தங்களை சொல்லிக்கொள்ளுபவர்களுள் அநேகமாக சிறிது உணர்ச்சிகூடக் காணாமலிருப்பதால் அவர்களைப்பற்றி நாம் வருந்தாமல் இருக்க முடியவில்லை.

எப்படியானாலும் இந்த வருஷம் தீபாவளிப் பண்டிகை என்பதை உண்மையான தமிழ் மக்கள் திராவிடர்கள் என்பவர்கள் கண்டிப்பாய் அனுசரிக்கவோ கொண்டாடவோ கூடாது என்றே ஆசைப்படுகிறேன்.

அன்றியும் இத்தீபாவளிக்கதைதளவ்வளவு பரிகாசத்திற்கு இடமாயிருக்கிறதென்பதையுணரும் பொருட்டு அதனையும் கீழே தருகிறேன்.

தீபாவளியின் கதைச்சுருக்கம்.

ஆதிகாலத்தில் நரகா சூரன் என்று ஒரு அசுரன் இருந்தானாம். அவன் திருமாலுக்கும் பூமி தேவிக்கும் பிறந்தவனாம்.

அவன் தேவர்களையெல்லாம் பலவாறு தூஷித்து இம்சித்து வந்தானாம்.

தேவர்கள் இதைப்பற்றி அவன் தகப்பனாகிய திருமாலிடம் முறையிட்டார்களாம்.

உடனே திருமால் நரகாசூரனைக் கொல்லுவதாக வாக்களித்தாராம்.

அதற்காக வேண்டி திருமால் கிருஷ்ணனாகவும் பூதேவி சத்தியபாமையாகவும் அவதாரமெடுத்து உலகத்துக்கு வந்து நரகாசூரனைக் கொன்று விட்டார்களாம்.

நரகாசூரன் சாகும்போது தான் செத்த தினத்தை உலகத்தார் கொண்டாடவேண்டுமென்று கேட்டுக்கொண்டானாம்.

கிருஷ்ணன் அப்படியே ஆகட்டுமென்று வாக்களித்தாராம்.

அதற்காகவேண்டி மக்கள் எல்லோரையும் கொண்டாடும்படி கடவுள் செய்து விட்டாராம்.

ஆதலால் நாம் கொண்டாடுகிறோமாம்; அல்லது கொண்டாடவேண்டுமாம்.

இதை நமது பகுத்தறிவுக்குப் பொருத்திப்பார்ப்போம்.

முதலாவது இந்தக்கதை உண்மையாய் இருக்கமுடியுமா?

"எல்லா உலகங்களையும் உண்டாக்கிய நான்முகனைப் பெற்றவரும், உலகங்களையெல்லாம் காத்து வருபவரும் தேவர்கள் தலைவருமாகிய திருமாலு"க்கும் பூமிதேவிக்கும் (எப்படி குழந்தை பிறக்கும்? பூமிதேவி என்றால் பூமி அல்லவா?) பிறந்தவன் எப்படி அசுரன் ஆனான்? அத்தகைய மேம்பாடுடைய கடவுளுக்குப் பிறந்தவன் எப்படி தீய செயல்களைச் செய்தான்? அப்படித்தான் செய்தாலும் அவனைப் பெற்றவனாகியதிருமால்

தனது மகனைத் திருத்தாமல் ஏன் கொன்றான்? அப்படியிருந்தாலும் தானே வந்துதான் கொல்லவேண்டுமோ? மேற்படி நரகாசுரனைக் கொன்றபோது அவன் தாயாகிய பூமிதேவியும் சத்தியபாமையாகப் பிறந்து உடனிருந்ததாகக் கதை கூறுகிறது. என்னே தாயின் கருணை! இவள்தான் உலகத்தை யெல்லாம் காப்பாற்றுகிறாளாம்! உலக மக்கள் செய்யும் பாவங்களை யெல்லாம் பொறுத்துக் கொள்ளுகின்றாளாம்! "பொறுமையில் பூமிதேவிபோல்" என்று உதாரணத்திற்குக்கூட பண்டிதரும் பாமரரும் இந்த அம்மையாரை உதாரணமாகக் கூறி வருகின்றனரே! இத்தகைய பூமி தேவியார் தனது மகனைக் கொல்லும்போது தாணும் உடனிருக்கவேண்டுமென்று திருமாலைக் கேட்டுக் கொண்டாராம்! என்னே தாயின் கருணை!!

தமிழர்களாகிய நம்மையே அசுரர்களென்றும் ஆரியராகிய பார்ப்பனர்கள் தாங்களே தேவர்களென்றும் கற்பித்துக் கதை கட்டியிருக்கிற தேவ—அசுரப் போராட்டத்தோடு சம்மந்தப்பட்டிருக்கிற இந்தக்கதையைத் தமிழ் மக்களாகிய நாமே கொண்டாடுகிறோம்! நாமே சிறந்த நாளாகக் கருதுகிறோம்! அத்தோ என் செய்வது? நம்மை எமாற்றி நம்மையே பழிக்கும் பார்ப்பனர் கட்டுக்கதையை உண்மையென நம்பி நாமே கொண்டாடி வீண் செலவு செய்வதென்றால் நமது சுயமரியாதையை என்னென்பது? நமது பகுத்தறிவை என்னென்று சொல்லுவது?

புராணங்களில் கண்டபடியே இந்தக் கதையை உண்மையென்று ஒப்புக்கொண்டு தமது பகுத்தறிவையிழந்து இந்தத் தீபாவளியைக் கொண்டாடும் நமது தமிழ் மக்களின் அறியாமையை என்னென்று கூறுவது?

சென்றது போக, இனிமேல்கொண்டாவது தீபாவளியை-அர்த்தமற்ற மூடப்பழக்கத்தை— நம் தலையில் நாமே மண்ணைப் போட்டுக்கொள்ளும் செயலைக்குறித்து ஒரு காசாவது, ஒரு நிமிஷ நேரமாவது செலவு செய்ய வேண்டாமென்று திராவிட மக்களாகிய உங்களை மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

உயிர்வாழ்வுக்கு லக்ஷ்யமுண்டோ?

III

உயிர்வாழ்வுக்கு யாதொரு லக்ஷ்யமும் இல்லை யென பகுத்தறிவு வாதி தோழர் பெர்சி வார்டு அவர்கள் பேசியதை சென்ற செப்டம்பர் மாதப் பகுத்தறிவில் வெளியிட்டிருந்தோம். அதை மறுத்துப் பேசிய ஆத்ம வாதியான தோழர் பிராங்கு ஹாரிஸின் சொற்பொழிவை சென்ற அக்டோபர் மாதப்பகுத்தறிவில் வெளியிட்டிருந்தோம். இப்போது தோழர் பிராங்கு ஹாரிஸை மறுத்து பகுத்தறிவு வாதியான தோழர் பெர்சி வார்டு பேசியதை வெளியிட்டிருக்கிறோம். அது வருமாறு:—

பெர்சி வார்டுபேச்சு.

எனது எதிரியான அன்பர் பிராங்கு ஹாரிஸ் உலக வாழ்க்கை இன்ப மயமானதென்று கண்ணை மூடிக்கொண்டு நம்புகிறவர். அவரது அபிப்பிராயத்தை மாற்றுவது சாத்தியமே அல்ல. அவர் இன்பக்கடலிலேயே சதா நீந்திக் கொண்டு இருக்கிறார்.

"வாழ்க்கை பயனற்றதானால் நீ ஏன் செத்துப்போகவில்லை?" என எனது நண்பர் கேட்கிறார்; இதற்கு கிளாரன்ஸ் டாரோ என்பார் ஆணித்தரமாக விடையளித்திருக்கிறார். அதாவது:—"வாழ்க்கைக்கு லக்ஷ்யமில்லை; அது துன்ப மயமானது" என நம்புகிறவன் தற்கொலை செய்து கொள்ளத் தேவையே இல்லை. ஏனெனில் எந்நாளாவது ஒரு நாள் தான் மரிப்பது உறுதி என அவன் அறிந்திருக்கிறான். மற்றும் வேறொரு காரணத்தைக்கொண்டும் நான் தற்கொலை செய்து கொள்ள விரும்பவில்லை. ஏனெனில் பிராங்கு ஹாரிஸ் வெளியிடப்போகும் சுய சரிதையைப் படிக்க நான் ஆவலுடையவனாயிருக்கிறேன்.

கடவுள் மனிதனிடம் நடந்துகொள்ளும் தோரணையை பிராங்குஹாரிஸ் எவ்வாறு ஆதரிக்கிறாரோ தெரியவில்லை. ஜீவிதப் போராட்டத்தின் மூலமே முன்னேற்றம் உண்டாகிற தென்று அவர் கூறுகிறார். துன்ப மயமான பரிணாம முறையில் கடைசியில் விசுவ சகோதரத்துவம் ஏற்படுமென்று ஸர் ஆலிவர் லாட்ஜும் கூறுகிறார். இவ்வாறு கூறும் ஸர். ஆலிவர் லாட்ஜுக்கு "கடவுளின் எதிர்காலப்போக்கு எப்படியானாலும் ஆகட்டும். அவனுடைய பழைய கொடுமைகளை ஒரு காலும் மறக்கவே முடியாது" என டப்ளியூ. எச். மல்லாக்கு என்பார் கன்னத்திலடித்தது போல் விடையளித்திருக்கிறார்.

"இயற்கை இன்ப மயமானது; ஒழுங்கானது" எனக் கூறி நண்பர் பிராங்கு ஹாரிஸ் ஆனந்தக்கூத்தாடுகிறார். ஆனால் அந்த அழுகும் ஒழுங்கும் ஏற்படுவதற்கு எவ்வளவு கொடிய முறைகள் கையாளப்பட்டிருக்கின்றன என்பதை அவர் உணரவில்லை. தகுதியுடையவர்கள் தப்பிப் பிழைக்கிறார்கள்; ஏனையோர் அழிந்து போகிறார்கள். மக்கள் ஆகாயக்கோட்டை கட்டுகிறார்கள்; ஆனால் அவர்கள் விரும்புவனவெல்லாம் கைகூடவில்லை. வெற்றிகளை எனது நண்பர் பாராட்டிப் பேசுகிறார். தோல்விகளைப்பற்றி அவர் வாய்திறப்பதே இல்லை. வெற்றிகளை மட்டும் கணக்குப் போட்டுக் கொள்கிறார். தோல்விகளை அலட்சியம் செய்து விடுகிறார். முடிவைத்தான் அவர் பாராட்டிப்பேசுகிறார். தகுதியுடையோர் தப்பிப் பிழைக்கிறார்கள். ஆம்! வாஸ்தவம்! ஆனால் அவ்வாறு தப்பிப்பிழைப்பவர்கள் பட்டதுன்பங்களை எண்ணை முடியுமா? அவை எட்டிலடங்குமா? அந்தக்கொடுமைகளை பிராங்கு ஹாரிஸ் சிந்தப்பதில்லை. எனது எதிரியான நண்பரை ஒரு கேள்வி கேட்கிறேன். இயற்கை அல்லது கடவுள் உலகத்தின் அழகையும் ஒழுங்கையும் நிலை நாட்டும் முயற்சியில் அழிந்து பட்டவர்கள் எத்தனை பேர்! அவர்கள் அனுபவித்த கஷ்டங்களை எண்ண முடியுமா? எனது நண்பர் இக்கேள்விகளுக்கு விடையளிப்பாரா? ஒரு வயது நிறையு முன் இறந்துபட்ட சிசுக்களுக்குக் கணக்குண்டா? அந்த சிசுக்கள் வாழ்க்கையின் எந்த லக்ஷியத்தைக் கண்டன? அச்சிசுக்களுக்கு ஏதேனும் வாழ்க்கை லக்ஷியம் இருக்க முடியுமா?

"பிறந்தவுடனே இறப்பது என் விதியானால் நான் எதற்காகப் பிறந்தேன்? அல்லது படைக்கப்பட்டேன்"

என அந்த சிசுக்களில் ஒவ்வொன்றும் கதறியிருக்காதா! தகுதியுடையவர்கள் தப்பிப்பிழைப்பதற்கு நாம் கடவுளைப் பாராட்ட வேண்டுமானால், தகுதியற்றவர்கள் ஒழிந்துபட்டதற்காக நாம் கடவுளைக் கண்டிக்கவேண்டியது தான்.

அப்பால் மனிதன் "பரிசுத்த ஆவி"யைப்பற்றி பிராங்கு ஹாரிஸ் பேசுகிறார். ஆம். "பரிசுத்த ஆவி" ஒரு பகட்டான சொற்றொடர்தான். மற்றும் "நமது பிறப்பைப்பார்" என்கிறார் எனது நண்பர். மற்றும் நமது முன்னோர்களான வாலில்லாக்குரங்குகளையும் அவைகளின் தாயன்பையும் அவர் பாராட்டிப் பேசுகிறார்.

எனினும், மிருகங்களைப்போலவே மக்களும் சதா போராடிக்கொண்டுதானிருக்கிறார்கள். மிருகங்களுக்கிடையில் ஜீவிதப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருப்பது போல் மக்களுக்கிடையிலும் போராட்டம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. மனிதத் தோற்றத்தினால் ஜீவிதப் போராட்டத்தில் எத்தகைய மாற்றமும் ஏற்பட்டு விடவில்லை. ஜீவித வெற்றிக்கு ஜீவிதப்போராட்டத்தை மனிதன் ஏன் ஆதாரமாக்கிக்கொண்டான். மனிதன் போரை ஒரு கலையாக்கி விட்டான். விதவிதமான போர்க்கருவிகளையும் சிருஷ்டித்து விட்டான். கடற்படைகளையும் தரைப் படைகளையும் ஆகாயப்படைகளையும் தினந்தோறும் விருத்தி செய்துகொண்டு வரும் மேனாட்டைப் பாருங்கள். மனித முன்னேற்றத்தின்—மனித நாகரிகத்தின்—கலைகளின்—விஞ்ஞான சாஸ்திரங்களின்—கடைசி முடிவு போராகவே காணப்படுகிறது. அமெரிக்க ஹாஸ்ய நிபுணரான மார்க் குட்வின் என்ன சொன்னார் தெரியுமா? "நான் மறுவுலகத்தை அடைந்த பிறகு மண்ணுலகத்திலுள்ளவர்களையெல்லாம் ஒரே கும்பலாய் ஜலப்பிரளயத்தில் முக்கிக்கொல்ல கடவுளிடம் சிபார்சு செய்வேன். பழய பிரளயத்தில் சில மனிதரும், மிருகங்களும், பறவைகளும் மீதமானதுபோல் என் சிபார்சுப்படி உண்டாகப்போகும் பிரளயத்தில் ஒரு சிறு பிராணி கூட மீதமாகாமல் நான் பார்த்துக்கொள்வேன்" என்று அவர் சொன்னாராம்.

அவர் கூறிய வார்த்தைகள் எவ்வளவு பொருளமைதியுடையன பாருங்கள்!

எல்லாருக்கும் கடவுளாக முடியுமென்றும் பிராங்கு ஹாரிஸ் கூறுகிறார். நான் கடவுளை நோக்கி வரங் கேட்ப தாயிருந்தால் என்ன வரங் கேட்பேன் தெரியுமா? ஓ! கடவுளே! பிராங்கு ஹாரிஸ் போன்ற மக்களை சிருஷ்டி செய்யாதே! மனித வர்க்கத்தை முன்னேற்று.'' என்றுதான் வரங்கேட்பேன்.

மேலும் சூரியனில் ரேடியம் இருப்பதாக எனது நண் பர் கூறுகிறார். இருக்கலாம். அதனால் என்ன நன்மை? வேண்டுமானால் சூரியன் ஆயுள் லட்சக்கணக்கான வருஷங் களாகநீடிக்கலாம். சூரியன் ஆயுள் நீடிப்பதினால் மக்கள் துன்பம் அதிகப்படுமே தவிர ஒரு பொழுதும் குறையாதே!

மரணமே மக்களின் கடைசி முடிவெனத் தாழும் கய்பு வதாக பிராங்கு ஹாரிஸ் கூறுகிறார். அப்படியானால் உலக வாழ்க்கைக்கு எதாவது பொருளோ லக்ஷ்யமோ இருக்க முடியுமா? மரணம் ஒன்று இருப்பதினாலே வாழ்க்கைக்கு லட்சியமில்லை; பொருளில்லை என நான் கூறுகிறேன். என்னதான் சொன்னாலும் சரி, எவ்வளவு அழகாக வர்ணித் தாலும் சரி, மனித வாழ்க்கையின் கடைசி முடிவு மரணந் தான். இதை ஒருவராலும் மறுக்க முடியாது. நாம் செய் தவைகளை யெல்லாம் எந்நாளாவது ஒரு நாள் மரணம் அழிக்கப்போவது நிச்சயம். பிரபஞ்ச பரிணாமம் எதை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது? படிப்படியாக முன் னேறி வரும் உயிர்கள் எல்லாம் கடைசியில் அழிவதற்தான் போகின்றன. ஒரு சித்திரக்காரன் தன் வாழ்நாள் முழுதும் பாடுபட்டு ஒரு சித்திரம் எழுதுகிறான். சித்திரம் பூர்த்தி யானவுடன் அதைத் துண்டுதுண்டாய்க் கிழித்து எறிந்து விடுகிறான். அவனுக்கு எத்தகைய லட்சியமாவது இருக்க முடியுமா? அவனுடைய உழைப்புக்கு எதாவது பொருள் இருக்க முடியுமா? பிரபஞ்சப்போக்கு அந்தச் சித்திரக்காரன் போக்குக்கு ஒப்பாகவே இருக்கிறது.

அளவிட்டறிய முடியாத காலத்துடன் மனிதனுடைய தீர்க்காயுளை ஒப்பிட்டுப் பாருங்கள். மனிதன் வாழ்நாள் எம்மாத்திரம்!

பிறக்கும் முன் மனிதன் இறந்ததே இல்லை; இறந்த பிறகும் அவன் இருக்கவே மாட்டான்! பிறப்புக்கும் இறப் புக்கும் இடையில் உணர்ச்சியுடைய ஒரு பொழுது இருக்

கிறது. இதை "ஆனந்த மயமான பாழை அல்லது சூனியத்தை உயிர்தோன்றிச் சீரழித்து விடுகிறது" என ஜெர்மன் ஞானியான ஷோப்பின்ஹார் வர்ணித்திருக்கிறார். நாம் பிறப்பதற்கு லட்சோபி லட்சம் கோடானு கோடி வருஷங்களுக்கு முன்னேயே இறந்திருக்கிறோம். அதனால் நமக்கு எத்தகைய இடைஞ்சலும் ஏற்படவே இல்லை. நமது ஈமச் சடங்கின் லட்சோபி லட்சம் கோடானுகோடி வருஷங்களுக்குப் பிறகும் நாம் இறந்த நிலைமையிலேயே திருப்போம். எனவே மரணத்தைப்பற்றி நாம் ஏன் கவலைப்படவேண்டும்?

ஆர்தர் பால்பர் எழுதிய ஒரு நூலிலிருந்து ஒரு மேற்கோளை எடுத்துக்காட்டிவிட்டு நான் எனது பிரசங்கத்தை முடித்துவிடுகிறேன். ஆர்தர் பால்பரை பிரான்சு நாட்டிலும் அறிந்திருக்கக்கூடும். "நம்பிக்கையின் அடிப்படை" என்ற நூலில் ஆர்தர் பால்பர் கூறியிருப்பதாவது:—

"உயிர் நூல் உண்மைகளை நாம் ஆராய்ந்து பார்த்தால் மனிதனே பிரபஞ்சத்தின் முடிவான உயர்ந்த சிருஷ்டிப் பொருள் என்று கூற முடியாது; மனிதனே தெய்வ அருள்பெற்றவன் என்றும் பிரபஞ்சம் முழுமைக்கும் அவனே நாயகன் என்றும் சொல்ல முடியாது. அவனது தோற்றமே தற்செயலானது. அவனது வாழ்நாளோ மிகவும் அற்பமானது. ஜடப்பொருளிலிருந்து ஜீவன் உற்பத்தியானதுக்கு மூலகாரணமாயிருந்த காரணங்களை இன்றும் விஞ்ஞான சாஸ்திரம் அறியவில்லை. எப்படியோ மனிதன் தோன்றினான் சந்ததிகளைப் பெருக்கினான்; விருத்தியடைந்தான். இறந்த காலச் சரிதங்களை ஆராய்ந்து பார்த்தால் போரும், கொலையும், துன்பமும், அழுகையுமாகவே காணப்படுகிறது. இறந்த காலத்தை முன்னிறுத்தி எனன்றி நோக்கினால் உயிரெல்லாம் அழியும், சூரியன் ஒளி குன்றும், உலகம் பாழாகும் என்றே தோற்றுகிறது."

சோம்பேறித்தனத்தைக் குற்றமாய்க் கருதக்கூடாது. ஏனென்றால் அது ஒரு மூளை நோயாகுமென்று ஒரு பிரபல ஜெர்மன் டாக்டர் கூறுகிறார். அப்படியானால் சோம்பேறிகளை முட்டாள்களென்று சொல்லலாமா?

தர்மம் என்றால் என்ன?

(சு. வெ. ரா.)

மனிதவாழ்க்கையில் தர்மம் என்கின்ற வார்த்தை பெரிதும்உபயோகப்படுத்தப்படுகிறது. ஆனால்அதற்குப்பொருள் பலர்பலவிதமாகசொல்லியும் எழுதியும் வருகிறார்கள். ஆனால்சாதாரணமாக தர்மம்என்பதற்குப் பொருள் கூறும்போது தர்மம் என்பது ஒரு மனிதனின் கடமைக்கும் மனிதனின் இயற்கைத் தன்மைக்கும், ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடம் செய்யவேண்டிய உதவிக்கும், மற்றும் ஒரு மனிதன் ஆத்மார்த்த சாந்தம் என்னும் நலமடைவதற்கு செய்ய வேண்டிய கடமை என்பதற்கும், பொதுவாக இயற்கையென்பதற்கும் உபயோகப்பட்டு வருவதோடு பெரும்பாலும் பிச்சைக்காரர்களும் சோம்பேறிகளும் மாற்றக்காரர்களும் பிழைப்பதற்கும் ஒரு சாதனமாக உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது. எது எப்படியிருந்த போதிலும் நான் அதை நீங்கள் எந்த வழியில் உபயோகப் படுத்துகிறீர்கள் என்று கருதுகிறேனோ அதைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்லுகிறேன்.

அதாவது ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்கு செய்கிற உதவியை தர்மம் என்று கருதி அதையே உங்கள் கடமையாகவுங்கொண்டு நடந்து வருகிறீர்கள் என்பதாகவே நினைத்து அதைப்பற்றியே சில வார்த்தைகள் சொல்லுகிறேன். ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்குச் செய்யும் உபகாரம்—கடமை என்பது காலதேச வர்த்தமானத்துக்கேற்றவாறு அவ்வப்போது மாறுதலடையக்கூடிய ஒரு தன்மையுடையதேயல்லாமல். மற்றபடி தர்மம் என்பது எதோ ஒரு காலத்தில் யாராலோ யாருக்கோ குறிப்பிடப்பட்டு அதேபடிக்கு நடந்து கொண்டிருக்கவேண்டியது அல்ல வென்பதை உணர்ந்து கொண்டால் தான் நாம் உண்மையான தர்மம் செய்தவர்கள் ஆவோம் என்பதோடு நமது தர்மமும் மக்களுக்கும் நாட்டிற்கும் பயன் படக் கூடியதாகும். அப்படிக்கில்லாமல் நமது பெரியோர்கள் செய்து வந்தார்கள், முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள், அவதாரங்களும் ஆச்சாரிகளும் எழுதிவைத்தார்கள், வெகு காலமாக நடந்து வருகிறது,

அநேகம்பேர்களும் செய்து வருகிறார்கள் என்கின்றதான காரணங்களை வைத்துக்கொண்டு கண்மூடித் தனமாக அதன் பலா பலன்களைக் கவனி யாமல் செய்து கொண்டிருப்பது வீண் வேலையாகும்.

ஏனெனில் ஒரு காலத்தில் தருமம் என்று சொல்லப்படுவது மற் றொரு காலத்தில் முட்டாள்தனமாகத் தோன்றப்படுவதை நேரில் பார்க் கிறோம். உதாரணமாக ஒரு மனிதன் கஷ்டப்பட்டு சம்பாதித்து பணம் சேகரித்து அவற்றைப் பார்ப்பனர்கட்கு அள்ளிக்கொடுத்து ஆசீர் வாதம் பெறுவது மனிதனுடைய கடமையான தர்மம் என்று கருதப் பட்டு வந்தது. ஆனால் அவை இன்றைய தினம் சுத்த மூடத்தனம் என்றும் ஏமாந்த தனம் என்றும் தோன்றி விட்டது. அதுபோலவே எழைகளை ஏமாற்றிக் கொடுமைப்படுத்திச் சம்பாதித்த பணத்தைக்கொண்டு கோயில் கட்டுவது, மோட்சத்தில் இடம் சம்பா தித்துக்கொள்வதற்காகச் செய்யப்படும் தர்மம் என்று கருதப்பட்டு வந் தது. ஆனால் இப்போது அதை முட்டாள்தனமென்றும், தேசத்திற்கு கெடுதியை விளைவிக்கத்தக்கதான தேசத்துரோகமென்றும் தோன்றி அநேகர்களுக்கு பள்ளிக்கூடம், தொழிற்சாலை, வைத்தியசாலை முத லியவைகட்கு உப்யோகப்படுத்த வேண்டியது முக்கியமான தர்மம் என்று தோன்றி விட்டது. ஒரு காலத்தில் மூன்று வேளை குளித்து நான்கு வேளை சாப்பிட்டு விட்டு சாம்பலையும் மண்ணையும் பூசிக் கொண்டு உத்திராட்சத்தையும் துளசி மணியையும் உருட்டுவது தர்ம மென்று நினைக்கப்பட்டது. ஆனால் இப்போது அது திருடர்களுடை யவும் சோம்பேறிகளுடையவும் வேலையென்று நினைத்து அப்படிப் பட்ட மனிதர்களிடம் வெறுப்பு ஏற்பட்டு இரண்டு வேளையும் உடலை வருத்திக் கஷ்டப்பட்டு சாப்பிடுகிறவர்களிடம் இரக்கமும், அன்பும், நம்பிக்கையும் ஏற்பட்டு விட்டது. ஒரு காலத்தில் கள்ளையும் சாராயத் தையும் குடிக்கக்கூடியதாகவும், ஆட்டையும் எருமையையும் பலியாக சாப்பிடக் கூடியதாகவும் உள்ள குணங்கள் கற்பிக்கப்பட்ட சாமி என்பதை கும்பிட்டுக்கொண்டு அவைகளை அதற்கு வைத் துப்படைத்துக் கொண்டு தாங்களும் சாப்பிடுவது கடவுள் வணக்கத் தருமமென்று கருதப்பட்டு வந்தது. இப்பொ ழுது அவைகள் காட்டுமிராண்டித்தன மென்று உணர்ந்து மக்களுக்கு உணர்த்தப்பட்டு வருகிறது. மற்றும் ஒரு கூட்டத்தாருக்கு ஆடும் பன்றியும் தின்பது தருமமாகயிருக்கிறது. இன்னொரு கூட்டத்தாரு க்கு மாடு தின்பது தருமமாக இருக்கிறது. பன்றி தின்பது அதர்மமாக இருக்கின்றது. வேறொரு கூட்டத்தாருக்கு எந்த ஜந்துவையும் சா

ப்பிடுவது தருமமாகயிருக்கிறது. பிறிதொரு கூட்டத்தாருக்கு எந்த ஜந்துவையானாலும் சாப்பிடுவது அதர்மமாயிருக்கிறது.

ஒரு மதக்காரருக்கே மதக் கொள்கைப்படி கள்ளு சாராயம் குடிப்பது தர்மமாயிருக்கிறது. வேறொரு மதக்காரருக்கு அவைகளைத் தொடுவது அதர்மமாயிருக்கிறது. ஒரு கூட்டத்தாருக்கு மனிதனை மனிதன் தொடுவது தீட்டாகக் கருதப்படுகிறது. இன்னொரு கூட்டத்தாருக்கு யாரைத் தொட்டாலும் தீட்டில்லை என்று சொல்லப்படுகிறது. அதுபோலவே விவாக சம்பந்தமுறையிலும் ஒரு கூட்டத்தார் அத்தை பெண்ணை மணக்கிறார்கள். மற்றொரு கூட்டத்தார் சித்தப்பன் பெரியப்பன் பெண்ணை மணக்கிறார்கள். பிறிதொரு கூட்டத்தார் சிறிய தாயார் பெண்ணை மணக்கிறார்கள். இனியொரு கூட்டத்தார் மாமன் பெண்ணை மணக்கிறார்கள். ஒரு வகுப்பார் தங்கையை மணக்கிறார்கள். வேறொரு கூட்டத்தார் யாரையும் மணந்து கொள்கிறார்கள். மற்றொரு கூட்டத்தார் விபசாரத்தனத்தை வெறுக்கிறார்கள். இன்னொரு கூட்டத்தார் விபசாரத்தனத்தை தங்கள் குல தருமமாகக் கொள்ளுகிறார்கள். வேறொரு கூட்டத்தார் பார்ப்பனர்களை யோக்கியமற்றவர்களென்று வெறுக்கிறார்கள். மற்றொரு கூட்டத்தார் பார்ப்பனர்களைப் புணருவது மோட்சசாதனம் என்று கருதுகிறார்கள். இப்படி எத்தனையோ விதமாக ஒன்றுக்கொன்று விபரீதமான முறைகள் தருமமாகக் காணப்படுகிறது. மேலும் இதுபோலவே சாஸ்திர விஷயங்களிலும் ஒரு காலத்தில் மனித சமூகத்திற்கு கடவுளால் அளிக்கப்பட்ட தருமமென்று சொல்லுகிற மனுதர்ம சாஸ்திரம் வெகு பக்தி சிரத்தையோடு பின் பற்றப்பட்டு வந்தது. இப்போது அது சுயநலக்காரர்களின், சூழ்ச்சிக்காரர்களின் அயோக்கியத்தனமான செய்கையென்று நெருப்பு வைத்துக்கொளுத்தப்படுகிறது. இது போலவே காலத்திற்கும் தேசத்திற்கும் அறிவிற்கும் தகுந்தபடி தருமங்கள் மாறுவது சகஜமாகயிருக்கிறது.

ஆகையினால் தருமமென்கிற விஷயத்தில் மிக அறிவைச் செலுத்தி உலகத்தை யெல்லாம் நன்றாய் ஆராய்ந்தறிந்து மிக்க அவசியமென்றும் பயன் படத்தக்கது எதுவென்றும் தெரிந்து செய்வது தான் உண்மையான தருமமாகும்.

புராண பூகோளம்

ஓர் சிறு ஆராய்ச்சி.

(ஆ. வை.)

கடவுள்களையும், வேதங்களையும் சிருஷ்டித்த நமது முன்னோர்கள் பரதகாடு (இந்தியா தேசம்) மட்டுமே உலகம், அதைத்தவிர வேறே பூமியில்லை என்று கருதியிருந்தார்கள் என்பது அவர் கற்பித்தெழுதிய வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் இவற்றின் மூலமாய்த்தெரியவரும். வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடி இந்தியா தேசத்திலுள்ள மேருமலை (இமயமலை)தான் கைலாசம். இந்தியாவிலுள்ள நதிகளாகிய கங்கை, காவேரி முதலியவைகளும், குற்றாலம், பரபரசம் முதலிய அருவிகளுமே புண்ணிய தீர்த்தங்கள். இந்தியாவிலுள்ள காசி, காஞ்சி, அயோத்தி, மதுரை, சிதம்பரம், ஸ்ரீரங்கம் முதலிய ஆயிரக்கணக்கான ஸ்தலங்கள்தான் திருப்பதிகள் (புண்ணிய க்ஷேத்திரங்கள்) உலகத்திலுள்ள எல்லா நதிகளையும், அருவிகளையும் மலைகளையும், ஊர்களையும் படைத்த கடவுள் இந்தியாவிலுள்ள சில ஆறுகளையும், ஊர்களையும், அருவிகளையும் மட்டுந்தானா பாவ பரிகார ஸ்தலங்களாகப் படைக்கவேண்டும்? இந்தியாவுக்கு வெளியே புண்ணியஸ்தலங்களும், நதிகளும் இருப்பதாகக் கூறப்படாததால் வேதகர்த்தாக்களான இந்தியர்க்கு இந்தியாவுக்கு வெளியே (இலங்கை தவிர) வேறு பூபாகங்கள் இருப்பதாகத் தெரியாதிருந்தது.

இந்தியாவின் கிழக்கும், மேற்கும், தெற்கும் பார்த்த இந்திய முன்னோர்க்கு கடலே கண்ணுக்குத் தென்றியதினால் ஆழிசூழ் உலகு, கடல்சூழ்ந்த வையம் என்று நூல்களில் கூறியுள்ளார்கள். அதுவும் குருடன் விளாங்கு பிடித்த கதையாயிற்று.

இந்தக் கடலுக்கு சாகரம் என்பது நமது முன்னோர்கள் வைத்த பெயர். எனெனின் பிரமன் உலகத்தைப் படைக்கும்போது கடலை சிருஷ்டிக்கவில்லையாம். சகர முனிவருடைய புத்திரர்கள் அறுபதினாயிரம் பேரும் கபில முனிவருடைய குதிரையைத் தேடிப் பாதாளத்துக்குப் போகும்படி தோண்டியெடுத்த பெருங்குழியே

கடலாக (சாக்ரமாக) அமைத்து போலும். இந்தியாவென்னும் உல
கத்தை சிருஷ்டித்த கர்த்தா ஆதியிலேயே கங்கை, காவேரி நதிகளைச்
சிருஷ்டிக்கவில்லை. மாபலிச்சக்கரவர்த்தியைக் கொல்ல வளர்ந்த
விஷ்ணுவின் பாதத்தை பிரமன் தன் கமண்டல ஜலத்தால் கழுவினான்;
அந்தத்தண்ணீரே கங்கையாகப் பெருகிவர, பகீரதன் வேண்டுகோளின்
படி சிவன் தன் தலையில் அதை ஏற்றுச் சிறிது சிறிதாய் ஒழுக விட்டான்.
அவ்வொழுக்க நீர் தான் கங்கை நதியாக வழிந்தோடிக் கடலாகப்
பெருகியது. காவேரி நதியும், அகஸ்தியர், சிவனார் திருமண காலத்
தில் தென்றிசையில் வந்தபோது சூரபன்மனுக்குப் பயந்து ஒளித்தி
ருந்த இந்திரனுடைய நந்தவனத்துக்கு மழையில்லாமற்போக விசாய
கர் காக்கை யுருக்கொண்டு பறந்து வந்து அகஸ்தியருடைய கமண்
டல ஜலத்தைக் கவிழ்த்ததினால் உண்டாகிய நீரோட்டமேயாகும்.
இக்காவேரியின் வரலாற்றைக் குறித்த வேறு வரலாறுகளும் உள்ளன.
வேதசாஸ்திரப்படி கங்கை சிவன் தலையில் உற்பத்தியாகிறது.
இன்னும் சகரபுத்திரர் தோண்டின பின்னரே இந்தியாவிலுள்ள
மற்ற எல்லா நதிகளும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது
நாம் எளிதில் ஊகித்தறியத்தக்கது. எனெனில் இக்காலத்தில் நாம்
காணும் எல்லா நதிகளும் கடல் உண்டாகும் முன்னர் ஆதியிலேயே
உண்டாயிருந்தால் அவற்றில் யாவும் பிரவாகம் போய்ப் பெருக வேறு
கிடங்குகள் இருந்திருக்கமாட்டா. அன்றியும் மேருமலை
தவிர மற்றுள்ள மேற்குத் தொடர்ச்சி கிழக்குத் தொடர்ச்சி மலைகளும்
ஆதியில் உண்டானவைகள் அல்ல; ஆனால் சகரபுத்திரர் தோண்டிக்
குவித்த மண் குவியலே யாகும் என்று நாம் யூகிப்பதற்கு நமது
முன்னோர்களின் வேத சாஸ்திரம் இடம் தருகிறது. முன்காலத்தில்
கடலும் மலையும் இருந்ததில்லை யென்றால் அக்காலத்தில் மழை
பெய்ததுமில்லையல்லவா?

உப்புக்கடல், கரும்புச்சாற்றுக்கடல், மதுக்கடல், சோர்க்கடல்,
பாற்கடல் முதலிய எழுகடல்கள் இருப்பதாக நமது பண்டைப் பெரி
யோர்கள் கூறியிருக்கிறார்கள். பூமியைச்சுற்றிப் பிரயாணஞ்செய்து
வரும் எவரும் இத்தன்மையான கடல்களைக்கண்டதாகக்கூறவில்லை.
பூமி கவர்ச்சிமுறைப்படி அந்தரத்தில் நிற்கிறது என பூமி சாஸ்திரி
கள் சொல்லுகிறார்கள். நமது வேத கர்த்தாக்கள் எட்டு யானைகளும்,
ஆதிசேஷனும் பூமியைத்தாங்கி நிற்கிறார்கள் என்று சொன்னார்கள்.
தெய்வத்தன்மை வாய்ந்த கடல்களும், யானைகளும், பாம்பும் பூமி
யைச்சுற்றிவரும் சாஸ்திரிகளுடைய பாவக்கண்களுக்குத் தோன்றா

பழமை பாராட்டுவதில் பயன் என்ன?

சாமி சிதம்பரனார்.

பழம் பாடம் படிப்பதற்கு யாரும் தவறுவதில்லை. சரித்திரம் தெரியாதவர்களும், தமது நாட்டுப் பழமையில் விருப்பம் உடையவர்கள்; படித்தவர்களிடம் எதாவது சில கதைகளைக் கேட்டுக்கொள்ளுவார்கள். அதை மனப்பாடம் செய்துகொள்ளுவார்கள். பிறரிடம் அடிக்கடி அக்கதைகளைக் கூறுவார்கள். அதனால் தமது நாட்டுப் பெருமையைப் பாராட்டிப் பேசிக்கொள்ளுவார்கள். இந்தச் செய்தி நமது நாட்டில் மட்டிலும் புதிதாக இல்லை. எந்த நாட்டிலும் உண்டு. ஒவ்வொரு தனி மனிதருடைய போக்கைக் கவனித்தாலே இது நன்றாய் விளங்கும். யாரும் தானிருக்கும் நிலையென்ன? என்பதை கவனிப்பதில்லை. தனது நிலைக்குத் தக்க பெருமையை மட்டிலும் கூறிக்கொள்ள விரும்புவதில்லை. தனது பாட்டன் முப்பாட்டன் பெருமைகளைத் தாய் தந்தையர்கள் பால் கேட்டிருப்பார்கள். அவர்கள் இருந்த நிலையைத் தனக்குப் பெருமையாகக் கூறிக்கொள்ளுவார்கள். தெரு, வில் தம்பட்டம் தட்டிக்கொண்டு பிச்சை வாங்கும் பக்கிரி தன்னை, நவாப் வம்சத்தைச் சேர்ந்தவன் எனக் கூறிக்கொள்ளுவான். அத

போலும்! மேருமலை பூமிக்குக் கீழே 16 ஆயிரம் யோசனை ஆழமும் மேலே 84 ஆயிரம் யோசனை உயரமும் உள்ளது (ஒரு யோசனை 13 மைல்) என்பர் நமது முன்னோர். இந்தியாவின் மலைகளில் மிக உயர்ந்ததாகிய எவரெஸ்ட் சிகரம் 29002 அடி உயரமுள்ளது என்ற பூமி சாஸ்திரம் மெய்யோ, பொய்யோ!

பூமியமைப்பைப் பற்றி வேதங்கள் இவ்வளவு தாறுமாறாகவும் அறிவீனமாகவும் கூறுமானால், அவைகள் கூறும் கடவுள்களையும், உபதேசங்களையும் நாம் கொண்டுபோய் ஆழ்த்துவதற்கு இனி அறுபது லக்ஷம் சகரபுத்திரர் தோன்றி ஒரு புதுக்கடல் ஒன்று வெட்ட வேண்டியது அவசியமல்லவா? வேதம் என்னும் இருளில் புதைந்து கிடக்கும் இந்தியர், மனிதக் குலத்தாரென்று பிறநாட்டார்கள் மதிக்கப்படுவது எங்ஙனே?

னால் அவன் மகிழ்ச்சி அடைவான். சந்தியாசி வேடம் பூண்டு, கஞ்சா கள் குடித்துக்கொண்டு வீடுதோறும் சென்று பிச்சை வாங்குவோன், தான், சிவாஜியின் பேரப்பிள்ளையென்று கூறிக்கொள்ளுவதில் மகிழ்ச்சி யடைவான். இன்று உயர்ந்த சமூகத்தாரால், கோயிலிற் செல்லுவதற் கும் அனுமதிக்கப்படாமல் இருக்கும் சில கூட்டத்தினர், தம்மை அரச வம்சத்தினர் என்று கூறிக்கொள்ளுவதில் பெருமை அடைகின்றனர். தீண்டப்படாதவராகவும், தொடுங்கப்படாதவராகவும், தெருவில் நடக் கப்படாதவராகவும், கண்ணால் பார்க்கப்படாதவராகவும், உயர்ந்த வகுப்பினரால் கொடுமைப் படுத்தப்படும் சமூகத்தினர் தங்களை தெய் வீக சம்பந்தமான குலத்தினர் என்று கூறிக்கொள்ளுவதில் மகிழ்ச்சி கொள்ளுகின்றனர். இவ்வாறு நமது நாட்டு மக்களின் மனோபாவம் இருந்துகொண்டிருக்கின்றது.

"ஆம்! பழமையில் அப்படி இருந்தோம். ஆனால் இப்பொழுது நமது நிலை என்ன? பிச்சைக்காரர்கள்தானே; தீண்டப்படாதவர்கள் தானே; இந்த நிலையைப் போக்குதற்கு என்ன வழி?" என்று சிறிது ஆழ்ந்து ஆலோசிக்கும் தனி மனிதர் கிடைப்பது அருமை.

இந்த நிலையில் படித்தவர்களின் போக்கைக் கவனித்தால் அது மிகவும் ஆச்சரியப்படத் தக்கதாக இருக்கின்றது. அவர்களுடைய செய்கை தற்கால உலகிற்கு என்ன பயனைத் தருகின்றது என்பது நமக்கு விளங்கவில்லை. நாம் கூறும் படித்தவர்கள் என்பவர்கள் நமது நாட்டுப் பழம் புராணங்களைக் கற்ற பண்டிதர்களைத்தான். அதுமட்டிலும் அல்ல. ஆங்கிலத்தில் எம். ஏ. பி. எ., முதலிய பட்டம் பெற்ற பண்டிதர்களுங் கூட நமது நாட்டுப் புராண நூல்களையோ, மத நூல்களையோ படித்திருப்பார்களானால் அவர்களும், பைத்தியம் பிடித்தவர்களாகி விடுகின்றார்கள். அவர்கள் மண்டையிலும், பல குப் பைகள் நிரம்பி விடுகின்றன. மூளை துரும்பிடித்து விடுகின்றது. பாபம்! பகுத்தறிவு இருந்தும் பயனில்லாமற் போகின்றது.

சமஸ்கிருதம் படித்த பண்டிதர்களோ பிராமணர்களுடைய ஆதிக் கத்திற்கே வழி தேடுகின்றனர். வேத காலத்தில் இருந்த வருணாச் சிரம தருமத்தைப்பற்றி வானமளாவப் புகழ்கின்றனர். உபநிஷத் காலத்தைப்பற்றி உயர்த்திப் பேசுகின்றனர். புராண காலத்தைப் புகழ்ந்து பேசுகின்றனர். ஸ்மிருதிகள்தான் ஜன சமூகத்திற்கு ஏற் படுத்தப்பட்ட சட்டம் என்று கூறி வாது செய்கின்றனர். யாகத்தின் மேன்மையை அளவுகடந்து புகழ்கின்றனர். இவ்வாறு இக்காலத்திற்கு

ஒரு எள்ளளவும் பயன்படாத விஷயங்களைப்பற்றியே, தொண்டை கிழியக் கத்துவதின் மூலம் தங்கள் பிழைப்பை நடத்துகின்றனர்.

தமிழ்ப் பண்டிதர்களின் நிலைமையோ இன்னும் மோசமானதாக இருக்கின்றது. தமிழிலோ "தமிழ் இலக்கியங்கள்" என்று சொல்லத் தக்கன ஒரு சிலவேதான் இருக்கின்றன. அவற்றிலும் அவர்களுக்குச் சிறிதும் பிடித்தம் இருப்பதில்லை. அதற்குக் காரணம் மதப்பற்றே யாகும். தமிழின் பாவைஷச் சுவையைக் கருதிக் கூட சிந்தாமணி, மணி மேகலை, சிலப்பதிகாரம் போன்ற காவியங்களைக் கற்காத தமிழ்ப் புல வர்கள் எத்தனையோ பேர் இருக்கின்றனர். அவர்கள் கம்ப ராமாய ணம், பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடல் புராணம் முதலியவைகளையே பாராட்டிப் படித்துக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் புராணப் பிரசங்கத்திலேயே தங்கள் பொழுதைக் கழிக்க விரும்புகின்றனர். அவர்கள் உலக வாழ்வு அநித்தியம் என வாயினால் பேசும் அளவில் வைத்துக்கொண்டு, மோட்ச லோகம் அடைவதற்கு வழி தேடுகின்றவர்களைப் போல நடிக்கின்றனர். பழைய நூல்கள் என்று சொல்லப்படுகின்ற, தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, ஐம்பெருங்காப்பியம் இவைகளைப் படித்தவர்களோ ஆராய்ச்சி செய்யத் தொடங்கி விடுகின்றனர். அதிலும் வேறு பாவைஷகளையோ நாட்டுச் சரித்திரங்களையோ படிக்காமல், வெறும் பழைய தமிழ் நூல் களை மட்டிலும் படித்த பண்டிதர்கள் செய்யும் ஆராய்ச்சி மிகவும் வேடிக்கையானதாகும். பிறர் எழுதியுள்ள சில சரித்திரக் குறிப்பு களைப் பகுத்தோ அல்லது கேட்டோ தெரிந்துகொண்டு தாமே ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்தது போலப் புத்தகங்கள் எழுதத் தொடங்கிவிடுகின்றனர். அவர்கள் ஆராய்ச்சியின் போக்கினால் நமக்கு என்ன பயனுண்டாகின்றது என்றால் கடுகளவும் பயன் உண்டாவ தில்லை. தொல்காப்பிய காலத்தில் தமிழர் எப்படி இருந்தார்கள்? சிலப்பதிகார காலத்தில் எப்படி இருந்தார்கள்? பத்துப் பாட்டுக் காலத் தில் நமது நாடு எப்படி இருந்தது? புறநானூற்றுக் காலத்தில், நமது நாட்டில் எவ்வளவு வீரர்கள் இருந்தார்கள்? என்னசெய்தார்கள்? என்பது தான் அவர்கள் ஆராய்ச்சி. இதில்ஒருவருக்கொருவர் சண்டை, ஒருவர் கூறு வதை ஒருவர் மறுப்பதுதான் வேலை. சுமார் முப்பது வருஷங்க ளாகத்தான் தமிழ்ப் பண்டிதர்களில் சிலர் இந்த ஆராய்ச்சியைச் செய் யத் தொடங்கினார்கள். இன்னும் அவர்கள் ஒருவிதமான முடிவுக்கு வராமல் இருக்கின்றனர். இது தமிழ்ப் பண்டிதர்களின் போக்கு.

இனி ஆங்கிலத்தில் சர்வகலாசாலைப் பட்டம் பெற்றுத் தமிழ் படித்திருக்கும் ஆங்கிலத் தமிழ் பண்டிதர்களுடைய போக்கு இன்னும்

வேடிக்கையானதாகும். அவர்கள் தாங்கள் எழுதும் ஆராய்ச்சிக்கு, சரித்திர ஆதாரம் தேடுவதிலும், கல்வெட்டுக்கள் கண்டுபிடிப்பதிலும், செப்புப்பட்டயம், பித்தளைப் பட்டயங்கள் சம்பாதிப்பதிலுமே நேரத்தைக் கழிக்கின்றனர். அன்றியும், தாங்கள் படிக்கும் மதக்கொள்கை களை சைன்ஸ்சோடு பொருத்திக் கூறி அவைகள் உண்மையென்று கூற அரும்பாடு படுகின்றனர். பொதுவாக சைன்ஸ்ஸுக்கும் மதங்களுக்கும் சம்மந்தமில்லையென்பது கற்றவர்களறிந்த விஷயம். இரண்டையும் ஒத்துப் பார்த்தால், மதங்களைப் பொய்யென்று அழிக்க வேண்டும். அல்லது சைன்ஸ் ஆராய்ச்சியை அடியோடு ஒழிக்கவேண்டும். ஆகவே இவ்வகையில் மதத்தின் பொருட்டுச் செலவிடும் அவர்கள் முயற்சிக்காகப் பொறுதும் இரங்குகின்றோம்.

ஆகவே மேலே கூறிய படித்தவர்கள் எல்லோருடைய நோக்கமும், ஒன்று என்பதில் மட்டிலும் சிறிதும் ஐயமில்லை. அவர்கள் எப்படியாவது படித்தவர்களுடைய செல்வாக்கை நிலை நிறுத்த வேண்டுமென்ற ஒன்றையே நோக்கமாக வைத்துக்கொண்டிருக்கின்றனர். இத்தகைய பண்டிதர்கள் நாட்டின் நிலைமையை எவ்வாறு அறிய முடியும்? மக்கள் படும் துயரத்தை எவ்வாறு உணரப்போகின்றார்கள்? நாட்டில் உள்ள பெரும்பாலான ஏழை மக்கள் இருக்க இடமில்லாமல் வருந்துகின்ற காலத்தில்—உண்ண உணவில்லாமல் பட்டினி கிடந்து இறக்கின்ற காலத்தில்—மக்களுக்கு அடிமையாகத் தெருவில் நடக்கவும் உரிமையின்றிப் போராடுகின்ற காலத்தில் படித்த பண்டிதர் பழமையை ஆராய்ச்சி செய்து இறும்பூது அடைகின்றனர். மக்களின் சமத்துவ உரிமைக்குப் பாடுபடுகின்ற கூட்டத்தாரை, நாஸ்திகர்களென்றும், மதத்துரோகிகளென்றும், தேசத்துரோகிகளென்றும் சாஸ்திர துரோகிகளென்றும் சொல்லி வசைமொழிகளால் அலங்கரிக்கின்றனர்.

ஆகவே படித்தவர்கள்—அதாவது பண்டிதர்கள் என்பவர்களுக்கு ஜன சமூகத்தை எமாற்றுவதற்கும், உலகத்தைக் குட்டிச் சுவராக்குவதற்கும் கருவியாக உபயோகப்படுகின்ற சாஸ்திரங்களையும், அவற்றின் மூலம் ஏற்பட்ட சடங்குகளையும், கோயில்களையும் அழிக்கவேண்டுமென்று நாம் கூறுகின்றோம்.

இவற்றையெல்லாம் அழிக்கவேண்டும் என்று நாம் கூறும்போது, நம்மைக்கலைகளை அழிக்கின்றவர்களென்று படித்தவர்கள் கூறுகின்றனர். ஆம். அதை நாம் ஒப்புக்கொள்ளுகின்றோம். நமக்குக் கலை

கள் பொழுது போக்கிற்காக இருக்கவேண்டியது தான் என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகின்றோம். ஆனால் அக்கலைகள் எப்படி இருக்கவேண்டும் என்ற விஷயத்தில்தான் நமக்கும் மற்றவர்களுக்கும் வாக்குவாதம். நமது கலைகள் ஜன சமூக வாழ்க்கைக்குப் பயன் அளிக்கக்கூடியதாயும், மக்கள் மனதில் உள்ள அழுக்குகளாகிய, மூட நம்பிக்கை, அறியாமை இவற்றை அழிக்கக்கூடியதாகவும், அடிமை உணர்ச்சியை மக்கள் மனதில் ஊட்டாததாகவும், தன்னம்பிக்கையை உண்டாக்குவதாகவுமே இருக்கவேண்டுமென்றுதான் சொல்லுகிறோம். தற்காலத்தில் நாம் போற்றும் கலைகளில் இக் கொள்கைகளுக்கு மாறு பட்ட கொள்கைகளேமிகுதியாக நிறைந்து கிடக்கின்றன. ஆகை யால்தான் அவற்றின் சூழ்ச்சிகளை யெல்லாம் வெளிப்படுத்தவேண்டு மெனவிளம்புகின்றோம்.

இதனோடு நாம் நின்றுவிடக் கூடாது. பழங்கதை எழுதிக் கொண்டு வயிறு வளர்க்கும் பத்திரிகைகளையும் அடியோடு ஒழிக்க வேண்டும். வேதாந்தப் பிரசாரம் செய்யும் பத்திரிகைகள், சித்தாந் தப் பிரசாரம் செய்யும் பத்திரிகைகள், சைவத்தைப் பரப்பும் பத்திரி கைகள், வைணவத்தைப் பரப்பும் பத்திரிகைகள், காவியத்தைக் கூறும் பத்திரிகைகள், புராணத்தைச் சொல்லும் பத்திரிகைகள், அடேயப்பா! எத்தனை பத்திரிகைகள்! இவைகயெல்லாம் இன்றையதினம் மக்கள் அடையும் துன்பத்தை நீக்க என்ன செய்கின்றன? மேற்கண்ட விஷயங் களைத் தாங்கிக்கொண்டு, மக்களைக் கண்மூடிகளாக்கிப் பொருள் பறிக்கும் நோக்கம் ஒன்றுதான் அவற்றின் கொள்கையே தவிர வேறென்ன இருக்கின்றது.?

பழம் பெருமையைச் சொல்வது தான் தேசாபிமானமாம்! பழங் கால நடத்தையைச் சொல்லிச்சொல்லிப் பாராட்டிக்கொண்டிருப் பதே ஆராய்ச்சியாம்! அறிவுடமையாம்! என்னே அறிவீனம்! இத்த கைய ஏமாற்றுக்காரர்களின் செல்வாக்கைச் சமயமறியாதை இயக்கம் அடியோடு ஒழித்துவிடும் என்பதை அவர்கள் அறிவார்கள். பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்? தங்கள் வயிற்றுப் பிழைப்புக்குக் கெடுதி விளைவிக்கின்றவர்கள் மீது சினங்கொள்வது உலக இயல்பு தான். ஆனால் படித்தவர்கள் என்பவர்களுக்கு இந்த இயல்பு வேண்டிய தில்லை. அவர்கள் தங்கள் அறிவைக்கொண்டு—அதாவது அது இருந்தால் தமது கொள்கையைத் திருத்திக்கொண்டு, உண்மையான வழியில் இறங்கி உலக முன்னேற்றத்திற்கு உழைக்க முன் வரவேண்டு கின்றோம். வீணாகப் பழமை பாராட்டுவதில் பயன் என்ன இருக்கி றது? இதை நீங்களே என்றாய் யோசித்துப் பார்த்து முடிவுக்கு வாருங் கள்.

ஆஸ்திக—நாஸ்திக சம்பாஷணை

(உண்மை விளம்பி)

நாஸ்திகன்:— ஐயா! வாருங்கள்! வாருங்கள்! எங்கே தங்களை வெகுநாளகக் காணவில்லையே?

ஆஸ்திகன்:— ஆம். என்னைத் தாங்கள் சில நாட்களாகச் சந்தித்திருக்கமுடியாது. ஏனெனில் யான் நோய்வாய்ப்பட்டு 'கடவுள்' அருளால் இச்சமயம் சிறிது சௌக்கியமடைந்திருக்கிறேன்.

நா:— அப்படியா? இது எனக்குத் தெரியாதே? கடவுள் அருளால்தான் தாங்கள் நோய்வாய்ப்பட்டீர்களோ?

ஆ:—அப்படி இல்லை; கடவுள் நோய் கொடுப்பாரா? சௌகரியம் தான் செய்வார்.

நா:—அப்படியானால் தாங்கள் கூறிய 'கடவுள்' என்னும் சொல்லுக்குப் பொருளென்ன?

ஆ:— கடவுள் என்னும் சொல்லுக்குப் பொருள் கடந்தது என்பது.

நா:— கடந்தது என்றால் எதனைக்கடந்தது?

ஆ:— மனம், வாக்கு, அறிவு முதலியவைகளைக் கடந்தது.

நா:— அப்படியானால் மனம் வாக்கு முதலியவைகளைக் கடந்த அறியமுடியாத ஒன்றை உங்களால் அறிய முடிந்துவிட்டது போலும்! அன்றியும் அதற்கு கோவிலும், மான்யமும், அடிமைகளும், பூஜைகளும் வேண்டுமாக்கும்!

ஆ:—இல்லை, இல்லை. அவைகள் எல்லாம் நமது கற்பனை ஊரும் பேரும் உருவமுமில்லாத கடவுள் நம் பொருட்டே உருவ

முடையவனாகத் தோன்றி அருள் சுரக்கிறான். ஆதலால் அவனுக்குக் கோயில் முதலியன கட்டி வணங்கிப் போற்றுதல் அவனுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும். அதனால் அது செய்யவேண்டியது மிகவும் முக்கியமானதே.

நா:— நீங்கள் கூறுகிற கடவுள் இலக்கணப்படி வைத்துக் கொண்டாலும் மனம் முதலியவைகளைக் கடந்து நின்று ஒரு பொருளுக்கு கோயிலும் குளமும் உண்டாக்கிப் பெண்டும் பிள்ளையும் இருப்பதாகப் பாவனைசெய்துகொண்டு அவைகளுக்காக வீண் செலவு செய்தல் அறிவுடமையாகுமா என்பதை நீங்கள் என் ஆலோசிப்பதே இல்லை? அறியமுடியாத ஒரு வஸ்துவை கேவலம் தன் கையாளாக—லஞ்சம் வாங்கும் கொடிய நீதிபதியாக—தனது கைப்பாவையாகவன்றோ பக்தர்கள் கருதுகிறார்கள்? இது பகுத்தறிவுக்குப் பொருத்துமா? இன்னும் உங்களது அந்த உயரிய கடவுள் உலகத்தையெல்லாம் உண்டாக்கினானென்றும் அவனது ஆணைப்படியே அகிலத்திலுள்ள ஜீவராசிகளெல்லாம் இயங்குகின்றனவென்றும் அவனன்றியோரணுவும் அசையாதென்றும்கூறுகிறீர்களே! அப்படியானால்உலகத்தில் நடக்கும் கொள்ளை நோய்களுக்கும் பெருவெள்ளத்திற்கும் பஞ்சத்திற்கும் சுகம்பத்திற்கும் கோரமான யுத்தங்களுக்கும் எண்ணற்ற மக்கள் பசியால் வாடுவதற்கும் கடவுளன்றோ காரணமாயிருக்க வேண்டும்? மேலும் கடவுள் உலகத்தை எது கருதிப்படைத்தான் என்பதற்குத் தாங்கள் கூறும் பதில் என்ன?

ஆ:— அவையெல்லாம் அவனது திருவிளையாடல் தான். வேறென்ன சொல்வது?

நா:— அப்படியானால் கூன், குருடு, செவிடு, ஊமை, தொண்டி முதலிய அங்கவீனர்களையும் குஷ்டம், க்ஷயம் முதலிய கொடிய ரோகங்களையும் உண்டுபண்ணினதற்குக் காரணம் என்ன?

ஆ:— அது கடவுள் செய்ததல்ல, முன்செய்த வினை.

நா:—சரி, அவ்வாறே வைத்துக்கொள்வோம். முதன்முதலில் கடவுள் ஒருவனைக் குற்றமில்லாதவனாகத்தானே படைத்திருக்க வேண்டும்? அங்ஙனமிருக்க அவன் குற்றம் எப்படிச் செய்தான்? செய்யும்படி கடவுள் என் விட்டார்?

ஆ:—அது அவன் செய்த தீவினை; கடவுள் கட்டளையை மீறி அவன் தீயவினையைச் செய்ததால் அதனை அனுபவிக்கிறான்.

நா:—சரி, "அவனன்றி யோரணுவும் அசையாது" என்று தாங்கள் முன்பு சொன்னதை மறந்துவிட்டீர்களோ! கடவுள் என் இந்த உலகத்தைப்படைத்தார்? எதற்காக நடத்துகிறார்? இதனால் அவருக்கென்ன பயன்? என்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லும் முறையில் ஆஸ்திகர்களாகிய நீங்களும் நாஸ்திகர்களாகிய நாங்களும் ஒன்றாகத் தானேயிருக்கிறோம்? நீங்கள் அதன் மர்மம் தெரியவில்லை யென்கிறீர்கள். நாங்கள் அது கடவுள் செயலல்ல; அது இயற்கை விதியென்று சொல்லுகிறோம்.

ஆ:—அப்படியானால் மனிதன் தோன்றுவதும் வளர்வதும் மூப்படைவதும் இறப்பதும் ஆகிய செயல்களுக்குக் காரணம் என்ன?

நா:—கடவுள் படைப்பாயிருந்தாலும் ஷை செயல்களுக்குக் காரணம் கூற முடியாதே? அப்படியிருக்க கடவுளுண்மைக்கு ஆதாரமென்ன?

ஆ:—பாத்திரமொன்றைக் கண்டால் அதனைச் செய்தவன் ஒருவன் இருக்க வேண்டுமாகையால் உலகத்தைக்கண்டு அதனை உண்டாக்கினவனும் ஒருவன் உண்டென்று கொள்ளவேண்டாமா?

நா:— மண்ணும் நீரும் கூடிப்பக்குவப்பட்டுக் குடமாவது போல் சுக்கில சுரோணித சம்மந்தத்தால் மனிதன் தோன்றுகிறான், அதற்குக் கடவுள் தேவையில்லையே?

ஆ:—மண்ணும் நீரும் கூடி குடமாவது உண்மைதான்; மண்ணையும் நீரையும் சேர்த்துப் பக்குவப் படுத்த ஒருவன் வேண்டுமே, காட்டிலே கிடக்கின்ற மண்ணும் அக்காட்டிலே வெள்ளமாக ஓடி வருகின்ற நீரும் சேர்ந்து குடம் குடமாக ஆகி உருண்டுகிடக்கவில்லையே? ஒருவன் செய்யாவிட்டால் குடம் போன்ற பாத்திரத்தைக்காண முடியாதே?

நா:— இந்த வாதத்தில் ஓளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது: ஆனால் நீர் கூறுகிறபடி கடவுள் படைப்பென்று கொள்ள முடியாது. ஏனெனில் கடவுள் படைப்பாயிருந்தால் கூனும் குருடும் செவிடும் ஊமையும் இருக்க நியாயமில்லையல்லவா? பாத்திரம் செய்யும் குயவனொருவன் தலையில்லாமலும் ஓட்டையாகவும் பாதியாகவும் பயன் படாதவாறும் பாத்திரங்களைச் செய்யமாட்டானன்றோ? அது போலவே கடவுளும் உலகில் மக்களை அங்க ஈனர்களாகப் படைக்க மாட்டானன்றோ? கடவுளால் படைக்கப்பட்டதாக ஒப்புக்கொண்டா

லும் உலக மக்களெல்லாம் ஒரு தாயின் புதல்வராகின்றோம். அப்படி ஒரு தாயின் புதல்வராகிய—சகோதரராகிய நம்மில் ஜாதி, மதம் இவைகளால் பாகுபாடுகளேன்? தீண்டாமை என்று ஒன்றிருப்பானேன்? கொள்ளையும் கொலையும் நடப்பானேன்? தனது மக்கள் அவதிப்படுதலையும் போராடுதலையும் துன்புறுத்தப்படுதலையும் கருணையுடைய தகப்பன் பார்த்துக்கொண்டிருப்பானா? நீங்கள் (ஆஸ்திகர்கள்) கடவுள் என்னும் பதத்திற்குப் பொருள் கூறுவதோடு நின்றிருக்கலாம். அதற்குமேல் நீங்கள் செய்துகொண்டதெல்லாம் மனோகற்பனைகள். இந்த எண்ணங்களை உங்களிலேயே சில அடியார்கள் மறந்தோ என்னவோ வெளியிட்டு விடுகிறார்கள்.

அதாவது "எனது முன்னோர்கள், உன்னைப்பற்றிப் பாடும் போது தங்கள் முன்னோர்கள் எப்படிக் கருதினாரோ, அப்படியே தாங்களும் கருதிப் பாடினார்கள். நானும் எனது முன்னோர்கள் பாடியதுபோல் உன்னைப் பாடுகிறேன்" என்று கூறுகிறார். இதிலிருந்து விளங்குவதென்ன? கடவுளைப்பற்றி இப்பொழுதிருக்கும் பக்தர்களும் அவர்கள் முன்னோர்களும் அவர்களின் முன்னோர்களும் ஒன்றுந் தெரியாதவர்கள் என்பது தெளிவாகிவிட்டதல்லவா? இன்னும் சில பக்தர்கள் "ஊரும் பேரும் இல்லாளுக்கு ஆயிரம் பேர் சொல்லி வாழ்த்துவோம்" என்று கூறியிருக்கின்றனர். இதனால் என்ன தெரிகிறது? கடவுளைப் பற்றி மக்கள் கூறுவனவெல்லாம் முழுக் கற்பனையென்பது விளங்கவில்லையா? நீங்கள் மனம் முதலியவற்றால் அறியமுடியாத ஒன்றுக்கு உங்களுக்கு வேண்டியபடியே வீடு, நகை, ஆடை, பெண்டுபிள்ளைகள் உண்டாக்கிப் பொருளை வீணாகச் செலவு செய்கிறீர்கள். உங்கள் கடவுளின் தன்மையென்ன வென்று கேட்டால் அது மனம் வாக்கு முதலியவைகளைக் கடந்தது என்று கூறுகிறீர்கள். நாங்களோ அறியமுடியாத கடவுளைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. கடவுளுக்காகச் செலவு செய்வதுமில்லை. அவ்விதம் செய்யவேண்டிய அவசியம் இல்லையென்றும் செய்யவேண்டாமென்றும் கூறுகிறோம். ஆஸ்திகர்களாகிய நீங்கள் வீணாகப் பொருள் செலவு செய்து அர்த்தமற்ற சடங்குகளைக் கையாண்டு வருவதையே கடவுள் கட்டளையாகப் பாவனை செய்து கொள்ளுகிறீர்கள். இதைத் தவிர, நாங்கள் இல்லையென்று கூறும் கடவுளைப்பற்றி உங்களுக்கு அதிகம் எதுவும் தெரியுமென்று நினைப்பதற்கில்லை. இந்த லக்ஷணத்தில் "அந்தோ! நாஸ்திகன் கடவுளில்லையென்கின்றானே! உலகம் கெட்டுவிட்டதே! குடி முழுகிவிட்டதே!" என்று வீண் கூக்குரல் போடுகிறீர்களே! உண்மையாகப் பார்த்தால்

கடவுள் உண்டென்று வாதாடுவதும் இல்லையென்று மறுப்பதும் ஒரு மெனக்கெட்ட வேலையேயாகும். கடவுளைப்பற்றிக் கவலைப்படத் தேவையுமில்லை. கடவுள் இருந்தாலும் சரி; இல்லாவிட்டாலும் சரி. அதற்காக ஒத்தைக் காசும் செலவழிக்க வேண்டாம். ஒரு நிமிஷ நேரமும் அதற்காகச் செலவழிக்க வேண்டாம். கடவுள் இருந்தாலும் இதனால்எல்லாம் நன்மையடைய முடியாது; செய்யாவிட்டால் தீமையும் அடையமுடியாது. நன்மையடைவதும் தீமையடைவதும் சம்பவங்களைச் சேர்ந்தது. சம்பவம் நம்மாலும் இயற்கையாகவும் ஏற்படுவதாகும். இயற்கை ஒருவர்க்குக் கட்டுப்பட்டதல்ல; ஒருவர் தோத்திரத்திற்கு இரங்கக்கூடியதல்ல; ஒருவன் தூற்றலுக்குக் கோபிக்கக்கூடியது அல்ல; அதன் விதிகளாலேதான் உலகம் தோன்றுகிறது; வளர்கிறது; அழிகிறது. அதன் சக்தியாலே பூகம்பங்களும், கொள்ளை நோய்களும், பெரு வெள்ளங்களும் உண்டாகின்றன. அவைகளைப்பற்றி இயற்கை கவலை கொள்ளுவதில்லை; கவலை கொள்ள வேண்டிய அவசியமுமில்லை. மக்கள் மகிழ்ச்சிக்குத் தான் மகிழ்ச்சி கொள்வதுமில்லை; மக்கள் துக்கத்திற்குத் தான் துக்கம் கொள்வதுமில்லை. பார்க்கப்போனால் உலக மக்களுக்கும் அதற்கும் நெருங்கிய சம்மந்தம் கிடையாது. ஆனால் உலக நிகழ்ச்சிகள் எல்லாம் அதன் விதிகளாலேயே நிகழ்கின்றன. ஆனால் அதன் மர்மம் யாவருக்கும் விளங்கக்கூடியதல்ல. விஞ்ஞான ஆராய்ச்சியாளராலும் இயற்கையுண்மைகள் முழுவதும் கண்டுபிடிக்கப்படவில்லை. நமது அறிவுக்கு உள்படாதவைகள் இன்னும் அனேகம் இருக்கின்றன. ஆனால் சில உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டதுபோல இன்னும்சிலநாளில் இப்பொழுது தெரியாதென்று இயற்கையின்தலையில் சுமத்தினபொருள்களின்உண்மைகளைக் கண்டு பிடித்துவிட்டால் மனிதசக்திக்கு எட்டாத ஒரு இயற்கையுண்டென்பதும் முறியடிக்கப்பட்டுத்தான் போகும். ஆகவே இந்த நிலையில் இருக்கும்போது கடவுளின் பொருட்டுச் செலவு செய்யும் பணம் வீண் என்று கூறினாலும் கடவுளின் பேரால் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்று கூறினாலும் ஆஸ்திகர்களாகிய உங்களுக்கு அளவில்லாத கோபம் மூண்டுவிடுகிறது. நீங்கள் உண்டென்று கூறும் கடவுள் இலக்கணத்திற்கும் நீங்கள் கோவில்கட்டி, கற்பனை செய்து கொண்டாடும் கடவுளுக்கும் உண்மையாக எதுவேனும் சம்மந்தமிருக்க முடியுமா? நீங்கள் கூறும் துதிச்சொற்களையும் வாழ்த்துச்சொற்களையும் ஏற்றுக்கொள்கிறாரா? ஏற்றுக்கொள்வது உங்களுக்கு எப்படித் தெரிகிறது? அந்தோ என்ன அறியாமை! மரப்பாவையை வைத்துக் கொண்டு சிறுபிள்ளைகள் அதனோடு பேசி விளையாடுவதற்கும் மணல் வீடு கட்டி விளையாடுவதற்கும் உங்கள் செயலுக்கும்

என்ன வேற்றுமை காண முடிகிறது? நமது இந்திய நாட்டில் கோவில்களுக்காகவும், கடவுள்களுக்காகவும், மடங்களுக்காகவும் செலவழிக்கப்படுகின்ற பொருள்களைக் கணக்கிட முடியுமா? அப்படிக் கணக்கில்லாத பொருளைச் செலவு செய்வதினால் மக்கள் எதாவது நன்மையடைகிறார்களா? அதுதான் இல்லை. நன்மையில்லாது போய்விடினும் தீமையில்லாமலாவது இருக்கிறதா? அதுவுமில்லையே! கணக்கற்ற பொருள்களை இழந்து வறுமையால் வாடுகின்றனரே! உங்கள் கடவுளின் கருணை இதுதானா? கடவுள் தன்னைப் போற்றும் பக்தர்களுக்கும் கொடுக்கும் சன்மானம் வறுமைதானா? கடவுள் கருணைக் கடல் என்றும் நீங்கள் கூறிக்கொள்கிறீர்; கோள்! என்னே உங்கள் கடவுளின் கருணை! இந்தச் செயலை ஆராய்ந்து பார்த்தால் மக்கள் துதிக்குக் கடவுள் இரக்கமடைந்து அவர்களுக்கு நன்மையளிப்பதும் கிடையாது; அவர்கள் குற்றத்திற்குத் தண்டனையளிப்பதும் கிடையாது. மக்களுக்கு நன்மையும் தீமையும் நான் முன்னே கூறியபடி, மனம் முதலியவைகளால் அறியமுடியாத இயற்கை நியதிப்படியேதான் நடக்கின்றன. ஒவ்வொரு காலத்தில் மக்கள் எந்தப் பொருளைக் கருதித் துதி செய்கிறார்களோ, அந்தப் பொருள் இயற்கையால் கிடைப்பதுண்டு. அப்பொழுது அந்தப் பக்தர்கள் கொள்ளும் மகிழ்ச்சியைக் கூறமுடியாது. காக்கை யேறப் பனம்பழம் விழுந்த காகதாளி நியாயம்போல் அதனைக் கடவுள் செயலென்று மதிமயங்கிக் கூத்தாடுகின்றார்கள். அவர்கள் அறியாமையை என்னென்று கூறுவது!

கடவுளால் உலகம் உண்டாக்கப்பட்டும் கடவுளால் உலகநிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டும் இருப்பது உண்மையானால் நடுநிலையுடையவர்கள் துன்புறுதலும் ஒரு பாவமும் அறியாத மக்கள் பசியால் வருந்தி வாடுவதும் உலகத்தில் நிகழுமா? கொள்ளை நோய்களும் பஞ்சங்களும் நாட்டில் தலைகாட்டுமா? இன்னும் எத்தனையோ சொல்லக் கூடாத கொடுமைகள் எல்லாம் உலகத்தில் நடைபெறுமா? என்பதை நீங்கள் யோசித்துப் பாருங்கள். பகுத்தறிவுக்குப் பொருத்தமில்லாத புராணக் குப்பைகளையெல்லாம் கட்டிக்கொண்டு அழுவதாற் பய னென்ன? ஆஸ்திகராகிய தமிழ் மக்களுக்குப் பொதுவாகக் கூறப்படும் புராணங்கள் பதினெட்டென்று கூறப்படுகிறது. ஆனால் இத்தப் பதினெட்டுப் புராணங்களில் ஒன்றாவது தனித் தமிழ்ப் புராணமல்ல. எல்லாப் புராணங்களும் வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டனவே. எனவே அதில் ஆரியர்களின் நற்பனைக் கடவுளும் அவர்களின் முறையற்ற காகரிகமன்றித் தமிழ் மக்களுக்குரியன ஒரு சிறி

தும் இருக்காதென்பது வெளிப்படையன்றோ? முற்காலத்திய தமிழ்மக்கள் பாடிய "யாதும் ஊரே யாவருங் கேளிர், தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பதற்கும் "உற்ற நோய் நோன்றல் உயிர்க் குறுகண் செய்யாமை ம, அற்றேதவத்திற்குரு" என்பதற்கும் "வாய்மையின் வழாது மன்னுயிரோம்புதற்கு, யாவது முண்டோ எய்தாவரும் பொருள்?" என்பதற்கும், ஆரியர்கள் தமிழ் நாட்டில் குடியேறியபின் அவர்கள் கையாளாய் இருந்து பாடிய "கரியமாலிலுங்கண்ணுதலானிலும், உரியதாமரை மேலுறைவானிலும், பெரிய ரந்தணர்....." என்பதற்கும் "ஆவதற்கும் அழிவதற்கும் அவர் (பிராமணர்) எவனிற்கும் விதியும்..." என்பதற்கும் எவ்வளவு வித்தியாசம் காணப்படுகிறது பாருங்கள்! இத்தகைய ஆரியப் பார்ப்பனர் புராணங்களிலுள்ள கடவுள்களையும் சடங்குகளையும் கைப்பற்றினால் நாம் அடையும் பயன் என்ன? அந்தணருக்கு அடிமையாவதே நாமடையும் பயனாகும். அதனையன்றி வேறெதையும் அடையமுடியாது.

ஆகையால் தமிழ் மக்களாகிய நாம் செய்யவேண்டியதென்னவென்றால் ஆரியர்களின் பொய்க்கடவுள்களையும் பொய்வேதங்களையும் சுயநலப்பித்தலாட்டச் சடங்குகளையும் அடியோடு ஒழிக்கவேண்டும். அவைகளுக்காக ஒரு காசேனும் ஒரு நிமிட நேரமேனும் செலவழிக்கவேகூடாது. புராணக் கடவுள்களைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதேயில்லை. கடவுள் இருந்தாலும் சரி; இல்லாவிட்டாலும் சரி; இருப்பதாக ஒத்துக்கொண்டாலும் நமக்கும் அதற்கும் ஒருவித சம்பந்தம் கிடையாது. ஆனால் நாம் இயற்கையென்கின்ற விதி ஒன்று உண்டென்று ஒப்புக்கொள்கிறோம். அதன் மர்மம் விளங்கவில்லையென்கிறோம், கடவுள் என்னும் பதத்திற்குத் தகுதியான பொருள் நாம் கூறும் அந்த இயற்கை விதிக்குத்தான் என்றால் நான் மறுக்கவரவில்லை. அது பெரும்பாலும் வாக்குக்கெட்டாமலிருக்கிறது; அதுதான் எல்லாவற்றையும் கடந்தது; அதுதான் உலகத்தோற்றத்துக் காரணம்; அதுதான் உலக நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் காரணம்; அதுதான் உலக அழிவுக்கும் காரணம். ஆனால் அதன் தன்மை முழுவதும் தெரியவில்லை. ஆகையால் தமிழ் மக்களாகிய நாம் ஆரியக் கடவுள்களையும் புராணங்களையும் சடங்குகளையும் பின்பற்றாது தமிழர் ஒழுக்கமுறைகளையும் நாகரீகத்தையும் பின் பற்றி, பழையதென்று ஒரு பொருளை ஆராயாது கொள்ளுதலும், புதியதென்று ஒரு பொருளை ஆராயாது தள்ளுதலும் செய்யாது, பொருந்திய ஆராய்ச்சி செய்து, 'பழங்காலைத்தூக்காதே புதுக்காலைவெட்டாதே' என்ற கொள்கையினையும் முறியடி

பகுத்தறிவு சம்பாஷணை.

"காங்கிரஸ் சுயமரியாதைக்கார"ரும் சுயமரியாதை ஜஸ்டிஸ்காரரும்.

சு. ம. காங்கிரஸ் வாதி:—தோழர் ஜவஹர்லால் ஒரு சமதர்ம வீரர் அவரை சு. ம. காரர் பஹிஷ்காரிக்கலாமா?

சு. ம, ஜஸ்டிஸ் வாதி:—ஜவஹர்லால் சமதர்ம வீரர் என்பதை உனக்காக வேண்டியே ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அவர் தோழர் ஈ. வெ. ராவைப்போலவே இப்போது நான் சமதர்மப்பிரசாரம் செய்ய வரவில்லை; காங்கிரஸ் பிரசாரம் தான் செய்ய வந்தேன்—செய்கிறேன் என்று சொன்னாரா இல்லையா?

சு. ம. கா:—அவர் எங்கே அப்படிச் சொன்னார்?

சு. ம. ஜ:—காங்கரஸ் தலைமைப் பிரசங்கம் முதல் சென்னை பிரசங்கம்வரை படித்திருந்தால் எங்கே சொன்னார் என்று கேட்டிருக்க மாட்டாய். சரி அப்படிச்சொல்லவில்லை என்றும் வைத்துக்கொள்ளுத்து, எந்தப் பொருளாயினும் ஆராய்ச்சி செய்து அது பகுத்தறிவுக்குப் பொருந்துவதாயிற் கொண்டும், பொருந்தாயின் அதனைத் தூரத் தள்ளியும் உண்மை நெறியில் நடக்கும் பகுத்தறிவாளியைப் பின்பற்றுவோமா?.

ஆ:— ஐயா! தாங்கள் கூழிய மொழிகளெல்லாம் உண்மைகள்; முழு உண்மைகள். இதுவரையிலும் ஆராய்ச்சியுரைகளைக் கூறி எனக்குப் பகுத்தறிவுக் கண் திறக்கும்படி செய்த தங்களுக்குக்கோடி வணக்கம்.

நா;— நண்பரே! சந்தோஷம். நான் சொன்னதையே நம்ப வேண்டுமென்பதில்லை. தாங்களும் ஆராய்ந்து பாருங்கள்! அறிவு எல்லாருக்கும் உரிமையுடையதுதானே? சென்றுவாருங்கள் மீண்டும் சந்திப்போம்.

வோம். ஆனால் சமதர்மத்துக்கு என்னிடம் திட்டம் ஒனறும் இல்லை என்றும் உலகப்புரட்சியோ மகா யுத்தமோ ஒன்று ஏற்பட்டால்தான் சமதர்ம சம்பந்தமாய் ஏதாவது செய்யலாமே ஒழிய மற்றப்படி இப்போது அதற்காக ஒன்றும் செய்வதற்கில்லை என்றும் சொல்லியிருப் பதையாவது ஒப்புக்கொள்ளுகிறாயா இல்லையா?

சு. ம. கா:—ஆம், அப்படிச்சொன்னால் சமதர்மம் வேண்டாம் என்று அர்த்தமா?

சு. ம. ஐ:—அப்படியானால் சமதர்மம் வேண்டும் என்று இந்தியா வில் ஜவஹர்லால் மாத்திரம் தானா சொல்லுகிறார்? தோழர்கள் அல்லாடி கிருஷ்ணசாமிஅய்யர், சர். சி. பி. ராமசாமிஅய்யர் முதல்கொண்டுசொல்லி இருக்கிறார்கள். லார்ட் வில்லிங்டன் கூட ஒரு சமயம் சமதர்மம் நல்லதுதான் என்று சொல்லி இருக்கிறார் யேசுவும், மகமது நபியுங் கீதையும் சமதர்மத்தைப் போதிப்பதாக மதக்காரர்கள் சொல்லுகிறார் கள். இவர்கள் எல்லாம் சமதர்ம வீரர்கள்தானா? இந்த மதங்களை யெல்லாம் வாவேற்க வேண்டியதுதானா?

சு. ம. கா:—ஆனால் ஜவஹர்லால் அப்படிப்பட்ட சமதர்மி என்றா சொல்லுகிறாய்?

சு. ம. ஐ:—அதற்கும் மேல் ஒரு டிக்கிரி அல்லது பத்து டிக்கிரி அதிகமாகவே வைத்துக்கொள். அதைப்பற்றி இப்போது நமக்கு வாதம் வேண்டாம், ஜவஹர்லால் தமிழ்நாட்டுக்கு எதற்காக வந்தார்? காந்தி யாரும் ராஜேந்திர பிரசாதும் வந்தவேலை அல்லாமல் ஜவஹர்லால் வேறு என்ன காரியத்துக்கு வந்தார்? மக்களை என்ன செய்யும்படி சொல்லிப் போனார்? இதைச் சொல்லு, மற்றப்படி ஜவஹர்லால் யாராய் இருந்தால்தான் என்ன?

சு. ம. கா:—அப்படியானால் மனிதனைப்பற்றி கவலை இல்லை என்கிறாயா?

சு. ம. ஐ:—நீதான் ஆகட்டுமே, எதோ ஒரு மனிதனைக் கருதி அவனுடைய செய்கையை அலட்சியம் செய்துவிடுவாயா?

சு. ம. கா:—என்ன இருந்தாலும் ஜவஹர்லால் மற்ற தலைவர் களைப் போல் அல்ல; அவர் ஒரு உண்மையான வீரர்.

சு. ம. ஐ:—சரி, வீரர் என்றே வைத்துக்கொள். ஒருவீரர் உங்

கள் வீட்டின் மீது கல்லுப் போட்டாலோ அல்லது வீரர்கள் உன்னை வைதாலோ நீ விட்டு விடுவாயா?

சு. ம கா:—அப்படி ஜவஹர்லால் என்ன செய்ய வந்தார்?

சு. ம. ஜ:—ஜவஹர்லால் எலக்ஷன் பிரசாரத்துக்கு வந்தார், காங்கிரஸ் பிரசாரத்துக்கு வந்தார். காங்கிரசின் பேரால் எப்படிப் பட்ட மனிதன் நிறுத்தப்பட்டாலும் அவனுடைய யோக்கியதா யோக்கியதையை கவனிக்காமல் அவன் மொண்டியானாலும், குருட னானாலும் செவிடனானாலும் அவனுக்கு ஓட்டுச் செய்யுங்கள் என்று சொல்ல வந்தார். காங்கிரசின் பேரால் நிற்பவன் தவிர மற்ற அபேட் சகர்கள் எல்லாம் தேசத்துரோகிகள், சர்க்கார் தாசர்கள் என்று தொழர் கள் சத்தியமூர்த்தி குப்புசாமி உபயதுல்லா அண்ணா சொல்லு வது போலவே சொல்ல வந்தார்.

மற்ற தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் போலவும் அவர்களது கூலி கள் போலவும் ஜஸ்டிஸ் கட்சியும் மற்ற காங்கிரஸ் அல்லாத கட்சிகளும் சர்க்கார் தாசர்கள், சர்க்கார் எஜண்டுகள் என்று சொல்லி வம்புச் சண்டை இழுக்க வந்தார். அப்படியே சொல்லியும் போட்டார். மற்ற படி எந்த விதத்தில் மற்றவர்களை யெல்லாம் விட ஜவஹர்லால் வீரர், சூரர், மகாயோக்கியர் என்று சொல்லே பார்க்கலாம்.

சு. ம. கா:—ஜவஹர்லால் எவ்வளவு தியாகம் பண்ணினவர் என்ப தைச் சிறிதுகூட நினைத்துப் பார்க்காமல் இப்படிப் பேசுகிறாயே இது நியாயமா?

சு. ம. ஜ:—நான் கேட்பதை விட்டு விட்டு என்ன என்னமோ உளறுகிறாய். ஜவஹர்லால் தியாகம் பண்ணினவர் என்றே வைத்துக் கொள். காந்தி தியாகம் செய்யவில்லையா? ராஜேந்திர பிரசாத் தியா கம் செய்யவில்லையா? இவர்களை யெல்லாம் விட அதிகமாக ராஜ கோபாலாச்சாரியார் தியாகம் செய்யவில்லையா? அவர்களை யெல்லாம் நாம் வரவேற்றோமா? ஜவஹர்லாலுக்கு மாத்திரம் என்ன இவ்வளவு சிபார்சு என்பது எனக்கு விளங்கவில்லையே?

சு. ம. கா:—ஜவஹர்லால் சுயமரியாதைக்காரர்கள் கோரும் அறிவு இயக்க வாதி என்பதுகூடத் தெரியாதா? காந்தியும், ராஜேந்திரரும் வரு ணாசிரம வாதிகள், மூடநம்பிக்கைக்காரர்கள். ஜவஹர்லால் பகுத் தறிவு வாதி. இதையாவது சு. ம. கார்கள் கவனித்து இருக்கவேண் டும், தொந்தரவு கூட யோசிக்காமல் பிரசாரம் செய்துவிட்டார்கள்.

சு. ம. ஜ:—அறிவு இயக்கமாவது என்றாவது ஒரு நாளாவது எலக்ஷன் பிரசாரம் செய்து ஓட்டு வாங்கும், செல்வாக்கும், மொண்டிக்கும், முடவனாக்கும் தெய்வீகம் என்று சொல்ல வந்தால். விட்டுவிட வேண்டியதுதானே? அப்படித்தான் ஜவஹர்லால் எந்த விதத்தில் பகுத்தறிவு வாதி?

தகப்பன் எனும்பையும் பெண்ஜாதி எனும்பையும் சுமந்தவனை ண்டுபோய் ஆற்றில் விட்டாரே அதுவாவது?

புண்ணியஸ்தல யாத்திரை செய்கிறாரே அதனாலா?

மதுரை மீனாக்ஷி அம்மனுக்கு சமீபத்தில் போய் கும்பிட்டுவிட்டு வந்தாரே அதனாலா? பழனி பஞ்சாமிர்தம் வாங்கி மூட்டை கட்டிக் கொண்டாரே அதனாலா?

கதரை ஆதரிக்கிறாரே அதனாலா? காந்தியை ஆதரிக்கிறாரே அதனாலா? சட்ட சபைக்குப்போய் சீர்திருத்தத்தை உடைக்கிறேன் என்கிறாரே அதனாலா? எதில் அவர்பகுத்தறிவு வாதி?

ஏதோ வாயில் மதத்தையும் ஜாதியையும்பற்றி கண்டித்து நாலு வார்த்தை பேசிவிட்டால் புஸ்தகத்தில்எழுதிவிட்டால் அதனாலேயே அப்படிப்பட்டவர்கள் எல்லோரும் பகுத்தறிவு வாதிகளாய் விடுவார்களா? பகுத்தறிவு சமதர்மம் என்பதெல்லாம் உங்கள் வீட்டுப் புறகடையில் முளைத்து இருக்கும் கிள்ளுக்கீரை என்றா நினைத்துக்கொண்டிருக்கிறாய்? அப்படியானால் உலகத்தில் இருக்கிறவர் எல்லோரும் பகுத்தறிவு வாதிகள் தான். ஒவ்வொருவரும் அரிசி பருப்புத்தேடி பக்குவமாய் சமையல்செய்து இலையில் போட்டு பிசைந்து உருட்டி வாயில் போட்டு மென்று தின்கின்றார்களே ஒழிய ஆண்டவன் இருக்கிறான் அல்லா இருக்கிறான் என்று கருதி அவனே நம் வயிற்றை நிரப்பி விடுவான் என்று ஒருவரும் நம்பி மூடநம்பிக்கைக்காரர்களாக இருப்பதில்லை. ஆதலால் ஜவஹர்லால் மாத்திரம் பகுத்தறிவுகார் என்று சொல்லிவிட முடியாது. செய்கையில் காந்திக்கும் மற்ற தலைவர்கள் என்பவர்களுக்கும் மாறாக ஜவஹர்லாலிடம் என்ன பகுத்தறிவு காரியம் இருக்கிறது? அதைச் சொல்லே பார்ப்போம்.

சு, ம. கா:—இப்படிப் பார்த்தால் உலகில் ஒரு மனிதன் கூட பகுத்தறிவு வாதியாய் காணப்படமாட்டான்.

சு. ம. ஜ:—காணப்படாவிட்டால் போகட்டுமே, யாராவது காணப்படவேண்டுமே என்று எவரையாவது ஒப்புக்கொள்ளவேண்டியது சடங்கா? சாஸ்திரமா? அதற்குஆக ஜவஹர்லாலைபகுத்தறிவு வாதி என்று ஒப்புக்கொள்ள வேண்டுமா? சாதாரண அறிவே அவருக்கு எவ்வளவு இருந்தது என்று அவரது சுற்றுப்பிரயாணபேச்சை அலசிப் பாரே! எங்கே போனாலும் பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் என்கின்ற பல்லவி. இதை ஒழிக்க சுயராஜ்யம் சுதந்திரம் வேண்டும் என்பது அனுபல்லவி. அதற்கு ஆக காங்கிரசுக்காருக்கு ஓட்டுப்போடுங்கள் என்கிறது சரணம். இவை ஒன்றுக்கு ஒன்று பொருத்தமானதா?

சு. ம. கா:—என் இவை நியாயமான பேச்சல்லவா?

சு. ம. ஜ:—எப்படி நியாயமாகும்? முதலாவது யாருக்கு வேலையில்லை? யார் பட்டினி?

பார்ப்பனர்கள் யாருக்காவது வேலை யில்லையா? பெரிய பெரிய சம்பளமுள்ள வேலைகள்தான் அவர்களில் 100க்கு (90 பேருக்கும் இருந்தும்) 100 பேருக்கும் இல்லையே என்கிறார்களே ஒழிய இன்றைக்கும் சகல பார்ப்பனருக்கும் மாதம் 15 ரூபாய்க்கு குறை

யாத சமையல் வேலை, காப்பிக்கடை வேலை, கோயில் பூசாரி வேலை, புரோகிதவேலைமுதல் எத்தனையோ வேலை காத்துக்கொண் டிருக்கின்றன. மற்றும் வியாபாரிகள் மில் முதலாளிகள், லேவாதேவிக்கா ரர்கள் மிராசுதாரர்கள் ஜமீன்தார்கள் வக்கீல்கள், டாக்டர்கள், ஆச் சாரி, குருமார்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஆகியவர்களுக்கு எங்கே பட்டினி? எங்கே வேலை இல்லாத் திண்டாட்டம்? ஒரு ஆளைக் காட்டே பார்ப்போம். இவர்களில் ஒவ்வொருவனும் அவன வன் யோக்கியதைக்குமேலும் இருப்பதற்குமேலும் சம்பாதிக்க வேண் டுமென்று ஆசைப்படுகிறான். அவ்வளவுதானே ஒழிய, யார் பட்டினி? யாருக்கு வேலையில்லை?

படிக்காத மனிதன், கீழ் ஜாதிக்காரன், கைத்தொழிலாளி சரீரப்பாட்டாளி ஆகிய இந்தக் கூட்டத்தார்தான் பெரிதும் இன்று வேலையில்லாமலும் ஜீவனத்துக்கு போதுமானது இல்லாம லும் கஷ்டப்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். இது இந்த நாட் டில் மாத்திரமல்ல. எந்த நாட்டிலும் இப்படித்தான் இருக்கிறது. (ரஷ்யாவில் மாத்திரம் இல்லை) அதற்காக ஜவஹர்லாலின் திட்டம் என்ன? சுயராஜ்யம் வந்தால் பட்டினி போய்விடுமா? வெளி தேசத் தார் ஆதிக்கம் போய்விடும்படியான சுதந்திரமே வந்தாலும் எல்லோருக் கும் வேலை கிடைத்து விடுமா?

இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா ஜர்மனி இவை சுயராஜ்ய நாடல்லவா? சுதந்திர நாடல்லவா? அங்கு என்ன நடக்கின்றது? சுயரா ஜ்ய நாடான அபீசினியாவைப் பார், சுதந்திர நாடான ஸ்பெயினைப் பார், குடி அரசு நாடான சைனாவைப் பார். கண்ணை மூடிக்கொண்டு புஸ்தகத்தை ஒப்புவிக்காதே. பிற்பட்ட வகுப்புக்கும் படிக்காதவனுக் கும் கீழ்ஜாதிக்காரனுக்கும் ஜவஹர்லாலோ, காந்தியோ, காங்கிரசோ பிரதிநிதியா அல்லது ஜின்னாவோ, ஜஸ்டிஸ் கட்சியோ, அம்பேத்காரோ பிரதிநிதியா எண்ணிப்பாரே.

இதுவரை காங்கிரசினால் நிறுத்திவைக்கப்பட்ட ஆட்கள் யோக்கி யதையையும் காங்கிரஸ் பார்ப்பனர்கள் யோக்கியதையையும் நீ அறியா ததா? இவைகளைமாற்ற ஜவஹர்லால் என்ன மருந்து கொண்டு வந்தார்?

ஜமீன்தார் பிரதிநிதியா என்று! சு. ம. காரர்களைக் கேட்டார். தர்மபுரி ஜமீன்தார் நடேச செட்டியார் வீட்டில் விருந்தினராய் இரு ந்து சாப்பிட்டு வந்தார். ஜஸ்டிஸ்காரர்களை காங்கிரஸ் விரோதி என் றார். காங்கிரஸ் "துரோகி" டாக்டர் ராஜன் வீட்டுக்குப்போய் பேசிவிட்டு வந்தார். குமாரமங்கலம் ஜமீன்தார் காங்கிரஸ் மெம் பர், லக்ஷப் பிரபு நாடிமுத்து பிள்ளை காங்கிரஸ் மெம்பர், திரு நெல்வேலி ஜமீன்தார் குமாரசாமிமுதலியார் காங்கிரஸ் மெம்பர்கள்.

கோவை ராமலிங்கம் செட்டியார், ரத்தினசபாபதி முதலியார் ஆர். கே. வெங்கடாசலம் செட்டியார், ஆவலப்பட்டி ஜமீன், அவ னாசிலிங்கம் செட்டியார் இவர்கள் எல்லாம் காங்கிரஸ் மெம்பர்கள்.

போதாக்குறைக்கு புழுத்ததின் மீது மலம் விழுந்த மாதிரி சத்தியமூர்த்தி முதலிய வருணாச்சிரமதர்மிகளும் காங்கிரஸ்மெம்பர் கள்.

இப்படிப்பட்டவர்கள் தவிரமற்ற சில சம்பளக்காரர்கள்தான் ஏழை காங்கிரஸ் மெம்பர்கள். ஆகவே தலைவர் சர்வாதிகாரி ஆகியவர்களாக மேற்கண்டகூட்டத்தார்கள் காங்கிரசுக்குப் போனால் எப்படி பட்டினி ஒழியும்? எப்படி வேலையில்லாக் கஷ்டம் ஒழியும்? நீதான் சொல்லே பார்ப்போம்.

இதிலிருந்தே ஜவஹர்லாலுக்கு பகுத்தறிவு இருந்தால் காங்கிர சுக்கு ஓட்டுக்கொடு, ஆள்கள் யோக்கியதையை பார்க்காதே என்று சொல்லி இருப்பாரா? இந்த மாதிரி யோக்கியதை உள்ள காங்கிரசுக்கு ஓட்டுப்பிரசாரம் செய்ய வந்த ஜவஹர்லாலை திரும்பிப்போ! பார்ப் பன பிரசாரம் செய்யாதே! என்று சொன்னதில் உனக்கு என்ன வந்து மாட்டிக்கொண்டது என்பது எனக்கு விளங்கவில்லை. கேள்விகேட். டால் கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாமல் சு. ம. காரர்கள் பொய் யர்கள் என்று கேவலமாய்ப்பேசி விட்டார்.

இப்பவும் சொல்லுகிறேன். ஜஸ்டிஸ்காரர்கள் சமதர்ம வீரர் கள் என்கிறேன். தைரியமாய் வருணாச்சிரமத்துக்கு விரோதமாய் வேதம் சாஸ்திரத்துக்கு விரோதமாய் சட்டம் செய்தார்கள். சொத்து ரிமையை பிடுங்கிக்கொள்ளலாம் என்று சட்டம் செய்து சோம்பேறி களுடைய சொத்தைப் பிடுங்கி பாடுபடுகிறவர்களுக்கு சொந்தமாக்கி விட்டார்கள். கொஞ்ச அளவுக்காவது இம்மாதிரி காரியம் துணிச்ச லாக செய்து வழிகாட்டி விட்டார்களா இல்லையா?

இதைச் சொல்லியே காங்கிரசுக்காரர்கள் ஜஸ்டிஸ் கட்சியை வைகிறார்கள், விஷமப்பிரசாரம் செய்கிறார்கள்.

வெங்கிட்டராம சாஸ்திரியார் காங்கிரசை ஆதரிக்கிறார் அவர் ஜஸ்டிஸ் கட்சி பொதுவுடமைகட்சி என்று இந்த வாரமும் "இந்து"வில் "மெயிலில்" எழுதினார். யார் சமதர்மவாதிகள் காரி யத்தில் சொல்லே பார்ப்போம். உழுபவனுக்குத்தான் பூமி சொந்தமே தவிர பட்டாக்காரனுக்கு சொந்தமில்லை என்று ஒரு சட்டம் செய் வது என்றால் லேசான காரியமா? அதுவும் யாதொரு பிரதிப்பிர யோஜனமும் இல்லாமல் பறி முதல் செய்து விடலாம் என்று சொன் னார்களே அதற்கு என்ன சொல்லுகிறாய்?

சு. ம. கா:—சரி, மற்றொரு சமயம் பேசலாம். எனக்கு அஜீரணம் போல் வயிற்றைப் பிரட்டுகிறது. வெளியே போய்விட்டு வருகி றேன்.

சு. ம. ஜ:—மகாராஜனாய் போய்விட்டு வா. எலக்ஷன் பிரசா ரத்துக்கு வந்த ஜவஹர்லாலை பஹிஷ்காரம் செய்ததற்கு எலக்ஷனை அலட்சியமாய் கருதி எலக்ஷனை வெறுக்கும் வீரனான நீ கோவித் துக்கொள்கிறாயே, அதுவும் காந்திக்கும் ராஜேந்திரப் பிரசாத்துக்கு கருப்புக் கொடியைத் தூக்கித் திரிந்து விட்டு. அந்த வீரம்தான் எனக்கு சிரிப்பை உண்டாக்குகிறது. போய் விட்டுவா.

"குடிஅரசு" 25—10—36

முக்கிய கவனிப்பு.

"குடி அரசு" (வாரப்பதிப்பு)

"பகுத்தறிவு" (மாதப்பதிப்பு)

அரசியல் புரட்டு,
மத இயல் புரட்டு,
பொருளியல் புரட்டு,
சமுதாய இயல் புரட்டு,
தேசீய இயல் புரட்டு

முதலாகிய பல புரட்டுகளையும், அவற்றைத் தங்கள் சுயநலங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டு மக்களை ஏமாற்றி வாழும் பல "தலைவர்கள்", மதாச்சாரியார்கள், மடாதிபதிகள், சீர்திருத்தக்காரர்கள், தேசபக்தர்கள், அரசாங்கத்தார் என்பவர்களின் யோக்கியதைகளையும் பச்சையாய் வெளியாக்கி மக்களுக்கு தைரியமாய் உண்மையை எடுத்துக்கூறும் புரட்சிப் பத்திரிகைகள் தென்னாட்டில் என்? இந்தியாவிலேயே இவற்றைத்தவிர வேறு கிடையாது என்று சொல்லலாம்.

குடி அரசுக்கு வருட சந்தா ரூ. 3-0-0
பகுத்தறிவுக்கு ,, ரூ. 1-0-0
இரண்டு பத்திரிகைக்கும் சேர்த்து
வருட சந்தா ரூ. 3—8—0

விலாசம்:—மானேஜர்,

குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)≈(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ...	...	ரூ.	0 5 0
பிரகிருதிவாதம் ...	...	,,	0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ...		,,	0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ...	...	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த தன்மையென்ன? ...		,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் ஏன்? ஏன்ன? ...	...	,,	0 3 0
கடவுள் ...	...	,,	0 5 0
நான் கடவுளை நிராகரிப்பதேன்? ...	...	,,	0 3 0
எல்டோடோ ...	...	,,	0 4 0
பேய்-தெய்வ-பிசாசு ...	...	,,	0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ...	...	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ...	...	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ...	...	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்	1-ம் பாகம்		0 6 0
,,	2-ம் பாகம்		0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம்			0 4 0
,,	2-ம் பாகம்		0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும் ...	...	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானஞரியன் (“நான்காம் பதிப்பு”) ...		,,	0 5 0
,, காலிக்கோ பைண்டு ...		,,	0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. மி.)			0 4 0

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்குள் இவ்வுலகமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம்பதிப்பு) 200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேலோர் கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கமும் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	ஈ. வெ. ரா. சீர்திருத்த மகாநாட்டு உபந்யாசம்	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18.	கதர் முடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பார்னார்ட்ஷா உபந்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷிவிக் முறை	0	1	0
22.	ஈ. வெ. ரா இலங்கை உபந்யாசம்	0	0	9
23.	கதர்தொழிக்கர் வீண் கூச்சல்	0	0	6
24.	சமதர்ம உபந்யாசம்	0	0	6
25.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
26.	மனுநீதி விளக்கம்	0	2	0
27.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
28.	பாரத ஆராய்ச்சி (அந்திபருவம்)	0	4	0
29.	புத்தரஷ்யா (200 பக்கம்)	0	8	0
30.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
31.	கர்ப்ப ஆட்சி	0	6	0
32.	ராவணப் பெரியார்	0	5	0
33.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
34.	ரகசியம் எங்கே?	0	2	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unnai villakam Press, Erode.